# புதிய ஜனநாயகம்

பிப்ரவரி 2015
ரூ.10.00



# பார்ப்பான் வைத்ததே சட்டம்!

# போலீசின் தனியுரிமைகளையும் அதிகாரங்களையும் ரத்து செய்!

எத்துணை முறை கையும்களவுமாக மாட்டிக் கொண்டாலும், அம்பலப்பட்டு அவமானப்பட்டாலும் அதையெல்லாம் துடைத்துப்போட்டு விட்டு, திரும்பத் திரும்ப நானாவிதமான குற்றங்களைச் செய்ய போலீசு துணிவது ஏன்? பொதுமக்களை அடக்கி ஒடுக்கிடும் அதிகாரம் அதனிடம் குவிந்திருப்பது மட்டுமே இதற்குக் காரணமல்ல. அக்குற்றங்களை மூடிமறைத்து, நியாயப் படுத்தி, குற்றமிழைத்த கிரிமினல் போலீசைச் சட்டப் படியே தப்பவைக்கும் அயோக்கியத்தனம், போலீசு உயர் அதிகாரிகள், ஆட்சியாளர்கள் தொடங்கி நீதிமன்றங்கள் வரையிலான இந்த அமைப்பு முறையிலேயே பொதிந் திருப்பதுதான் இதற்கு அடிப்படையாக உள்ளது. இது மிகைப்படுத்தப்பட்ட கண்டுபிடிப்பு அல்ல என்பதை மெய்ப்பிக்கும் விதமாக இரண்டு வக்கிரமான மனித உரிமை மீறல்கள் சமீபத்தில் தமிழகத்தில் நடந்துள்ளன.

ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த சிலர் தமது குடும்பத் தோடு கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி பகுதிக்குக் குடி பெயர்ந்து வந்து, அப்பகுதியில் அலங்காரப் பொருட் கள் மற்றும் பிளாஸ்டிக் சாமான்களை விற்று பிழைப்பு நடத்தி வருகின்றனர். அவர்களுள் இரண்டு பெண்களும் ஒரு சிறுமியும் கடந்த அக்டோபர் மாதம் 8 -ஆம் தேதி யன்று ஓசூர் பேருந்து நிலையத்தில் தமது பொருட் களைப் பயணிகளிடம் விற்றுக் கொண்டிருந்த சமயத்தில், அங்கு சுற்றிக் கொண்டிருந்த போலீசு ஏட்டு வடிவேல், அப்பெண்களையும் சிறுமியையும் மிரட்டிப் பேருந்து நிலையத்திலிருந்த போலீசு கட்டுப்பாட்டு அறைக்கு இழுத்துக் கொண்டு போய், அவர்களைப் பாலியல் பலாத்காரப்படுத்தித் துரத்தியடித்துவிட்டான்.

பாதிக்கப்பட்ட அப்பெண்களுக்கு ஆதரவாகத் தலை யிட்ட இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தினர் இப்பாலியல் வன்கொடுமை பற்றி சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரிக்கக் கோரியும் உரிய நட்ட ஈடு வழங்கக் கோரியும் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தனர். அதனை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர்நீதி மன்றம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தலா 3 லட்சம் ரூபாய் நட்ட ஈட்டை உடனடியாக வழங்குமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட்டு, விசாரணையை பிப்ரவரி மாதத்திற்குத் தள்ளி வைத்திருக்கிறது.

இச்சம்பவம் போலீசு கட்டுப்பாட்டு அறையிலேயே நடந்திருப்பதும், இரண்டு பெண்களும் ஒரு சிறுமியும் பாதிக்கப்பட்டிருப்பதும் நிரூபணமான பின்னும் இக் குற்றத்தில் போலீசு ஏட்டு வடிவேலு மட்டுமே சம்பந் தப்பட்டிருப்பதாக வழக்கு தொடரப்பட்டிருப்பது மோசடியானது. குறிப்பாக, அப்போலீசு கட்டுப்பாட்டு அறையில் பணியாற்றி வந்த சிறப்பு உதவி ஆய்வாளர் கணேசன் என்பவருக்கு இந்தச் சம்பவம் தெரிந்திருக் கிறது. எனினும், இக்குற்றத்தில் அவருக்குத் தொடர் பில்லை எனக் கூறப்பட்டு, நடந்த சம்பவத்தை தனது மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கத் தவறியதுதான் அவர் செய்த தவறு என விசாரணை முடிக்கப்பட்டு, அவருக்குப் பணியிட மாறுதல் என்ற 'தண்டனை' வழங் கப்பட்டு, குற்ற வழக்கிலிருந்து தப்ப வைக்கப்பட்டுள்ளார்.

போலீசாரால் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்ட ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த பெண்கள்.



இந்த ஓசூர் சம்பவத்திற்கு இணையான பாலியல் வக்கிரம் சென்னை - மாம்பலம் போலீசு நிலையத்தில் கடந்த மாதம் நடந்திருக்கிறது. இரவு சினிமா காட்சிப் பார்ப்பதற்காகச் சென்று கொண்டிருந்த சதீஷ்குமார், பசுபதி, கார்த்திக் ஆகிய மூன்று பேரையும் வழி மறித்த போலீசார், அவர்களைச் சட்ட விரோதமாக மாம்பலம் போலீஸ் நிலையத் திற்கு இழுத்துச் சென்றதோடு, அங்கு அந்த மூன்று அப்பாவிகளையும் - இந்த மூன்று பேரில் சதீஷ்குமார் தவிர மற்ற இருவரும் சிறுவர்கள் - செல்போன் திருடியதாக ஒத்துக்கொண்டு கையெழுத்துப் போடும் படி அடித்துச் சித்திரவதை செய்தனர். மேலும், அந்த மூவருக்கும் யுவராஜ்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

# பார்ப்பான் வைத்ததுதான் சட்டம்!

‘‘ஊழலை ஒழித்துக்கட்டுவதுதான் எமது முதல் வேலை’’ - எனத் தனது 56 அங்குல மார்பைத் தட்டி, சவால்விட்டு ஆட்சிக்கு வந்துள்ள மோடி கும்பல், ஊழலோடு சமாதான சகவாழ்வு நடத்திவருவதை ஜெயா-ஜெட்லி சந்திப்பு தோலுரித்துக் காட்டியிருக்கிறது.

கடந்த காங்கிரசு ஆட்சியில் 2ஜி, நிலக்கரி ஊழல்-முறைகேடுகள், காமன்வெல்த் ஊழல், ஆதர்ஷ் ஊழல் - என அடுத்தடுத்து ஊழல்களும் முறைகேடுகளும் அம்பலமானதை வைத்துக்கொண்டு, ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. உள்ளிட்ட பார்ப்பனக் கும்பல், கார்ப்பரேட் ஊடகங்கள், அன்னா ஹஸாரேவின் தலைமையில் திரட்டப்பட்ட நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினர், அவ்வூழல் வழக்குகளை விசாரித்து வந்த நீதிபதிகள், கிரண் பேடி, அரவிந்த் கெஜ்ரிவால் தொடங்கி நம்ம ஊர் கார்த்திக், சூர்யா, விஜய் உள்ளிட்ட சினிமா கழிசடைகள் வரையிலான இந்தக் கூட்டணி எப்படியெல்லாம் ஆட்டங் காட்டினார்கள். ஊழல்தான் இந்தியாவைப் பீடித்திருக்கும் தீராத நோய்; ஊழல்தான் இந்தியா வல்லரசாவதைத் தடுத்து வருகிறது என்றெல்லாம் கூப்பாடு போட்டு, இந்தக் கூச்சலையே இந்தியாவின் எழுச்சியாக, ஊழலுக்கு எதிரான இந்தியாவாகப் பரபரப்பூட்டித் தம்மை நேர்மையின், அறத்தின் காவலர்களாகக் காட்டிக்கொண்டு, தேர்தல் வெற்றியை அறுவடை செய்து கொண்ட பா.ஜ.க. பார்ப்பனக் கும்பல் தன்னை நம்பியவர்களின் நெற்றியில் பெரிதாக நாமத்தைச் சாத்திவிட்டது.

ஜெயாவின் ஆதரவோடு நடந்த வாஜ்பாயி ஆட்சி, ஜெயாவின் ஊழல்-அதிகார முறைகேடு குற்றங்களை விசாரிப்பதற்கு அமைக்கப்பட்டிருந்த சிறப்பு நீதிமன்றங்களைக் கலைத்து, அவருக்கு எதிரான நாற்பத்தி சொச்சம் ஊழல் வழக்குகளையும் சாதாரண நீதிமன்றத்திற்கு மாற்றிக் கொடுத்தது. அப்பொழுதே தன் மீதான வருமான வரி ஏய்ப்பு வழக்கைக் கைவிட வேண்டும் எனத் துண்டுச் சீட்டில் ஜெயா எழுதிக் கொடுத்ததை, இப்போதைய மோடி ஆட்சி நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறது. ஜெயாவின் நெருங்கிய நண்பரான அருண் ஜெட்லி நிதியமைச்சரான பிறகு, அவரை டெல்லியில் போய்ச் சந்தித்துத் திரும்பிய ஜெயா, வருமான வரி வழக்கில் அபராதத் தொகையைக் கட்டத் தயாராக இருப்பதாக வருமான வரித் துறையிடம் சமரச மனுவொன்றை அளித்ததும், அதனை ஏற்றுக் கொண்டு அருண் ஜெட்லியின் அதிகாரத்தின் கீழ் வரும் வருமான வரித் துறை ஜெயாவிற்கு எதிரான வழக்கைக் கைவிடுவதாக அறிவித்திருப்பதும் பார்ப்பன-பாசிசக் கும்பலின் ஆட்சியில் நீதியின் கதி அதோகதிதான் என்பதை நிரூபிக்கிறது.

காங்கிரசு கூட்டணி ஆட்சியின்பொழுது, 2ஜி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட கனிமொழியின் சி.ஐ.டி. நகர் வீட்டிற்கு அரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி சென்று கருணாநிதியைச் சந்தித்ததையும் நாடாளுமன்ற வளாகத்தில் ஆ.ராசாவின் தோளில் பிரதமர் மன்மோகன் சிங் கைபோட்டதையும் மாபெரும் ஒழுக்கக் கேடுகள் என்றும், அறம் கொன்ற செயல்களென்றும் குற்றம் சாட்டி வானத்துக்கும் பூமிக்கும் தாவிக்குதித்த பா.ஜ.க., அந்நிகழ்வுகளைக் காட்டி நாடாளுமன்றத்தையே முடக்கியது. ‘‘இவையெல்லாம் 2ஜிவழக்கை விசாரிக்கும் நீதிமன்றத்துக்குத் தவறான செய்தியைத் தராதா?’’ என கேள்வி எழுப்பித் தம்மை யோக்கிய சிகாமணிகளாகக் காட்டிக்கொண்ட இக்கும்பல், ஜெயா-ஜெட்லி சந்திப்பை நியாயப்படுத்த வேறொரு அளவுகோலை வைக்கிறது.

தொடர்ச்சி 13-ஆம் பக்கம்...

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

**தொகுதி: 30 இதழ்: 4**
**பிப்ரவரி 2015**

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

### டி.சி.எஸ். நிறுவன ஆட்குறைப்பு:

# சுதந்திர சந்தையின் தேர்க்காலில் பலியான கனவுகள்!

**ஆட்குறைப்பு, உழைப்புச் சுரண்டல் அதிகரிப்பு, ஊதியவெட்டு ஆகிய மூன்றும் ஒரே நேரத்தில் ஐ.டி. ஊழியர்கள் மீது ஏவப்படுவதன் பின்னணி என்ன?**

‘‘நான் ஒரு சீனியர் மானேஜர். நான் சொல்கிறேன். ஊழியர்களை வெளியேற்ற டி.சி.எஸ். உயரதிகாரிகள் பின்பற்றும் நடைமுறை மிகவும் நியாயமற்றது. தொடர்ந்து சிறப்பாக பணியாற்றுபவரும், வாடிக்கையாளர்களின் பாராட்டைப் பெற்றவருமான ஒரு மூத்த ஊழியரை வெளியேற்றுமாறு எனக்கு உத்தர விட்டார்கள். நான் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், இப்போது நிர்வாகம் என்னை மிரட்டுகிறது. அவர்களுடைய அடுத்த குறி நானோ என்று பயமாக இருக்கிறது. பல பேரை வேலையை விட்டுத் தூக்கும் வேலையைச் செய்து செய்து என் மன நிம்மதியே போய் விட்டது.’’

‘‘உங்கள் துன்பம் எனக்கு புரிகிறது. அனுதாபப்படுகிறேன். ஆனால் சகோதரா, இதுதான் சுதந்திரச் சந்தையின் விதி. இந்த எதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். யாரும் இதை மாற்ற முடியாது.’’

- இவை சமீபத்தில் இணைய நாளிதழ் ஒன்றில் வெளியான வாசகர் கடித விவாதங்கள். டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனம் அறிவித்த ஆட்குறைப்பு நடவடிக்கைக்கான எதிர்வினைகள்.

‘‘பணித்திறன் குறைந்தவர்கள்’’ என்று மதிப்பீடு செய்யப்படும் ஊழியர்கள் வெளியேற்றப்படுவதும், ராஜினாமா செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்படுவதும் ஐ.டி. ஊழியர்கள் அனுபவித்திராத புதிய விடயங்கள் அல்ல. ஒரு வகையில் அது அவர்களுக்குப் பழகியிருக்கும் நியதி. ஆனால், திறமைசாலிகள் என்று பாராட்டப்பட்டவர்களும், பத்து ஆண்டுகளுக்கு மேல் விசுவாசமாக உழைத்து இடைநிலை நிர்வாகப் பதவிகளில் அமர்ந்திருப்பவர்களும் கொத்துக் கொத்தாகத் தூக்கியெறியப்படுவது அவர்களிடையே அதிர்ச்சியைத் தோற்றுவித்திருக்கிறது.

சுமார் 3.13 இலட்சம் பேர் பணியாற்றும் டி.சி.எஸ். நிறுவனத்திலிருந்து 25,000 பேர் ஆட்குறைப்பு செய்யப்படவிருக்கிறார்கள் என்ற செய்தி வெளிவந்ததைத் தொடர்ந்து, வெளியேற்றப்படுவோரின் எண்ணிக்கையை டி.சி.எஸ். மறுத்தது. ‘‘எங்களைப் போன்ற திறனை முன்னிறுத்தும் நிறுவனங்களில் தரமேம்பாட்டுக்காக ஊழியர் எண்ணிக்கை குறைக்கப்படுவதில் அதிசயமில்லை’’ என்றும் ‘‘கருத்து சொல்லும் அளவுக்கு இது முக்கிய விசயமில்லை’’ என்றும் மிகத் திமிராகவும் பதிலளித்தது.

சர்வதேச அளவில் 4 இலட்சம் ஊழியர்களைக் கொண்டுள்ள ஐ.பி.எம். நிறுவனம், அவர்களில் சுமார் ஒரு லட்சம் பேருக்கு மேல் ஆட்குறைப்பு செய்யவிருக்கிறதென்று ஜன-26 அன்று போர்ப்ஸ் பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளியாகியிருக்கிறது. ‘‘வதந்திகளுக்கெல்லாம் நாங்கள் பதிலளிக்க முடியாது’’ என்று மட்டுமே ஐ.பி.எம். இதற்குப் பதிலளித்திருக்கிறது.

விப்ரோ நிறுவனத்தின் சி.இ.ஓ. சி.டி.குரியன் ‘‘நாங்களும் டி.சி.எஸ். செய்வதையே செய்ய விரும்புகிறோம்’’ என்று அறி

‘‘வேலை நீக்கம் என்ற முதலாளித்துவ பயங்கரவாதத்தை முறியடிக்க, ஐ.டி. நிறுவனங்களின் ஊழியர்கள் சங்கமாக அணிதிரள வேண்டும்’’ என்ற பதாகைகளுடன் சென்னை - சோழிங்கநல்லூர் சந்திப்பில் அணிதிரண்டிருந்த பு.ஜ.தொ.மு.வைச் சேர்ந்த தோழர்கள்.



வித்திருக்கிறார். 1.4 இலட்சம் ஊழியர்களை அடுத்த 3 ஆண்டுகளுக்குள் ஒரு இலட்சமாக குறைக்கவிருக்கிறது விப்ரோ. யாகூ, எச்.பி., எச்.சி.எல், டெல், சிஸ்கோ, ஆல்டிசோர்ஸ் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களும் ஆட்குறைப்பை நடத்தி வருகின்றன.

கிரிசில் (CRISIL) என்ற தரநிர்ணய நிறுவனத்தின் ஆய்வின்படி, இந்தியாவில் ஐ.டி. துறையில் பணியாற்றுவோர் சுமார் 31 இலட்சம் பேர். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 7 இலட்சம் பொறியியல் பட்டதாரிகள் புதிதாக வேலைவாய்ப்பு சந்தைக்குள் வருகிறார்கள். 2013-14 இல் பொறியாளர் உள்ளிட்டு மொத்தமாக வேலை கிடைக்கப் பெற்றவர்கள் 1.05 இலட்சம். 2017-ஆம் ஆண்டிற்குள் ஐ.டி. வேலை வாய்ப்பு ஆண்டுக்கு 55,000 - ஆக குறைந்து விடும் என்று கூறுகிறது கிரிசில். அதாவது 12 பொறியாளரில் ஒருவருக்குக்கூட வேலை கிடைப்பது அரிது என்பதே இதன் பொருள்.




சென்னை - சிறுசேரியில் அமைந்துள்ள டி.சி.எஸ். அலுவலகத்தின் நுழைவாயிலில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட பு.ஜ.தொ.மு. மற்றும் தோழமை அமைப்பினர்.

**''கத்தி எடுத்தவனுக்குக் கத்தியால்தான் சாவு!''**

நடைபெற்று வரும் இந்த ஆட்குறைப்பு, வேலையில் இருக்கும் இளைஞர்களையும் அச்சத்துக்குள்ளாக்குகிறது. இந்த அச்சம், அவர்களை மேலும் கசக்கிப் பிழிவதற்கான வாய்ப்பை நிர்வாகத்துக்கு வழங்குகிறது. கல்விக் கடன் வாங்கி பொறியியல் பட்டம் பெற்று, ஐ.டி. துறை என்ற பொன்னுலகத்துக்குள் நுழைந்துவிட வேண்டுமென்றும், அப்படியே ஆன்சைட் வாய்ப்பைப் பெற்று ஒரு முறையாவது அமெரிக்காவைத் தரிசித்துவிட வேண்டுமென்றும் கனவு கண்டு கொண்டிருக்கும் மாணவர்களையும் அவர்களுடைய பெற்றோரையும் ஆட்குறைப்பு குறித்த செய்திகள் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றன.

தனியார்மய, தாராளமயக் கொள்கைகளின் மூலம் தொழில் வளர்ச்சியும் வேலைவாய்ப்பும் பெருகி மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்ற நம்பிக்கையை, நடுத்தர வர்க்கத்தினரின் மத நம்பிக்கையாகவே உருவாக்குவதிலும், அவர்கள் வழியாக சமூகம் முழுவதற்கும் இக்கருத்தைப் பரப்புவதிலும் ஐ.டி. துறை வேலைவாய்ப்பு பெரும் பங்கு வகித்து வந்திருக்கிறது. மலையை அறுத்து கிரானைட்டாக ஏற்றுமதி செய்வதையும், ஆற்றைச் சூறையாடி பல மாடி கட்டிடம் கட்டுவதையும், நிலத்தடி நீரை பாட்டிலில் அடைத்து விற்பதையும் கிராமப்புற மக்கள் சோற்றுக்காக நகரம் நோக்கி ஓடுவதையும் ''முன்னேற்றம்'' என்று கூசாமல் பேசுகின்ற துணிச்சலை

வேலைநீக்க நடவடிக்கைகளை இரக்கமின்றி நியாயப்படுத்திய இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் முன்னாள் இயக்குனர் மோகன்தாஸ் பய்



நடுத்தர வர்க்கத்துக்கு வழங்குவதில், ஐ.டி. சம்பள மயக்கமும், அமெரிக்க மோகமும் ஆற்றியிருக்கும் பங்கு மகத்தானது.

ஓய்வு பெறும் வயதில் தான் எட்டிப்பிடித்த சம்பளத்தை, தன்னுடைய மகன் 25 வயதிலேயே பெற்றுவிட்டதை எண்ணிப் பெருமிதம் கொண்டிருந்தவர்கள், அந்தப் பிள்ளை 35 வயதில் கட்டாய ஓய்வளித்து வீட்டுக்கு அனுப்பப்படுவதைப் பார்க்கிறார்கள். இளைய தலைமுறையின் முன்னோடிகளாக நடுத்தர வர்க்கத்தால் போற்றப்படும் நாராயணமூர்த்தி போன்றோர் இதற்கு என்ன விளக்கம் வைத்திருக்கிறார்கள்? இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர்களில் ஒருவரான மோகன்தாஸ் பய், தற்போது நடைபெறும் ஆட்குறைப்பு நடவடிக்கைகள் பற்றி தெரிவித்திருக்கும் கருத்தைப் பார்ப்போம்:

''இன்று வேலைநீக்கம் பற்றிப் புகார் செய்பவர்களுக்கு நவீன போட்டிப் பொருளாதாரம் பற்றித் தெரிவதில்லை; திறமைகளை இடையறாமல் மறுசீரமைப்பு செய்தால்தான் வளர்ச்சி என்பது சாத்தியம்... தொழில் நன்றாக இருந்த நாட்களில் இவர்கள் தகுதிக்கு அதிகமாக ஊதியம் வாங்கினார்களல்லவா? கத்தியெடுத்தவனுக்கு கத்தியால்தான் சாவு. அதற்குத் தயாராக இல்லையென்றால் எப்படி? ஐ.டி. துறையிலிருந்து கொஞ்சம் ரத்தத்தை வெளியேற்றுவதுதான் இந்த துறைக்கு நன்மை பயக்கும்.'' (நியூஸ் மினிட், ஜன 3, 2015)

''முதலாளித்துவம்'', ''சுரண்டல்'' என்பன போன்ற சொற்களைப் பொதுவாக ஐ.டி. துறை சார்ந்த புதிய

நடுத்தர வர்க்கத்தினர் விரும்புவதில்லை. அவை தங்களைப் போன்ற திறமைசாலிகள் வாழ்க்கையில் முன்னேறியிருப்பதைக் காணப் பொருக்காத வயிற்றெரிச்சல் பேர்வழிகளின் புலம்பல் என்றே அவர்களில் பலர் கருதிக் கொள்கின்றனர். அவர்களுக்கு முதலாளித்துவத்தின் உண்மைச் சொரூபத்தை அறிமுகப் படுத்தியிருக்கிறார் பய். மனிதவளம் என்று அழைக்கப்பட்ட ஐ.டி. ஊழியர்கள், இன்று வெளியேற்றப்பட வேண்டிய கெட்ட ரத்தம் என்றும், குறைக்கப்பட வேண்டிய சதை (flab) என்றும் கரித்துக் கொட்டப்படுவது ஏன்?




புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் ஐ.டி. ஊழியர் பிரிவு தொடங்கப்பட்டதையொட்டி, சென்னை - சோழிங்கநல்லூர் அருகிலுள்ள படூரில் சனவரி-10 அன்று நடந்த கலந்துரையாடல் கூட்டத்தில் உரையாற்றும் மூத்த வழக்குரைஞர் பாலன் ஹரிதாஸ்.

அநீதியான இந்த ஆட்குறைப்பை எதிர்த்துப் போராட வேண்டும், சங்கம் அமைத்து உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும் என்கிற அதே நேரத்தில், இந்த ஆட்குறைப்பு நடவடிக்கையின் பின்புலத்தையும், இதற்கு வழி வகுக்கும் இந்தத் தொழிலின் தன்மையையும் இப் பிரச்சினைக்கு வெளியில் நின்று பார்ப்பதும் புரிந்து கொள்வதும் அவசியம்.

### 30 வயதில் ரிட்டையர்மென்டா?

இன்று ஆட்குறைப்பு செய்யப்படுவோரில் பலர் 6 முதல் 12 ஆண்டுகள் பணியாற்றிய இடைநிலை மேலாளர்கள். முன்னொரு காலத்தில் காம்பஸ் இன்டர்வியூவில் தெரிவு செய்யப்பட்டவர்கள். வெளியேற்றப் பட்டுவிடக்கூடாது என்ற அச்சத்தினாலேயே தீவிரமாக

# அடிமைத்தனத்துக்கு அப்ரைசல்! அச்சுறுத்த நாஸ்காம்!

அமெரிக்க ''சிலிக்கான் வேலி''யின் ஐ.டி. ஊழியர்களை ''சிலிகான் பள்ளத்தாக்கின் தோட்டத் தொழிலாளிகள்'' என்று கூறுவதுண்டு. தோட்டத்தொழிலாளிகள் கூட சங்கம் வைக்கும் உரிமையைப் பெற்றிருக்கின்றனர். ஆனால் ஐ.டி. துறையில் இல்லை. காரணம், புதிய தாராளவாதக் கொள்கையின் கீழ் முதலாளி வர்க்கம் பராமரிக்க விரும்பும் தொழிலுறவுக் கொள்கைக்கு இந்தத் துறை ஒரு முன்மாதிரி. ஊழியர்களின் சிந்தனை முறையை ஊழல்படுத்துவது, அச்சுறுத்தல் ஆகிய இரண்டு வழிமுறைகளின் மூலமும் ஐ.டி. நிர்வாகங்கள் இதனைச் சாதித்திருக்கின்றன.

குறிப்பிட்ட தகுதியிலான ஊழியர்களின் ஊதியத்திலேயே ஏற்றத்தாழ்வை ஏற்படுத்துவதன் மூலம் சம வேலைக்கு சம ஊதியம் என்ற கொள்கையை நிராகரிப்பது, ஊதியத்தில் கணிசமான பகுதியை பணித்திறன் அடிப்படையில் (performance based) மாதந்தோறும் தீர்மானிப்பது, ஊதியம் மற்றும் பதவி உயர்வை பணி மூப்பின் அடிப்படையில் அல்லாமல் அப்ரைசல் மூலம் தீர்மானிப்பது. இதன் மூலம் அடிமைச் சிந்தனைக்கு அனைவரையும் பயிற்றுவிப்பது - என்பன போன்ற வழிமுறைகளின் மூலம் ''நாம்'' என்ற உணர்வே எழ வொட்டாமல் தடுத்து ''நான்'' என்ற சிந்தனையும், கழுத்தறுப்புப் போட்டியும் ஊழியர்களுக்கிடையே திட்டமிட்டே ஊக்குவிக்கப்படுகிறது.

''உன்னுடைய அப்ரைசல் ரேட்டிங்கை சக ஊழியனிடம் சொல்லாதே, எல்லா இடங்களிலும் உன்னை முன்நிலைப் படுத்தக் கற்றுக்கொள், குழு உறுப்பினர்களோடு நெருக்கத்தை வளர்த்துக் கொள்ளாதே, கருத்து வேறுபாடு குறித்து வாதம் செய்து சூழலை மாசுபடுத்தாதே'' - என்பன போன்ற நடத்தை விதிகள் மூலம் ஊழியர்கள் கோழைகளாகவும், சுயநலமிகளாகவும் வனைந்து உருவாக்கப்படுகின்றனர். அதனால்தான் அநியாயமாக வெளியேற்றப்படும் ஊழியர்கூட எச்.ஆரிடம் குரலை உயர்த்திப் பேசுவதில்லை.

''நான் நல்ல ரேட்டிங் வாங்கியிருக்கிறேனே, வாடிக்கையாளரின் பாராட்டைப் பெற்றிருக்கிறேனே, என்னை ஏன் வெளியேற்றுகிறீர்கள்?'' என்று ஈனச்சுரத்தில் முறையிட மட்டுமே செய்கிறார்கள். சம வேலைக்கு சம ஊதியம் என்பது திறமைசாலிகளுக்கு இழைக்கப்படும் அநீதி என்று சிந்திக்கும் படியே பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

ஆட்குறைப்பினால் வேலை இழப்பவர்களுக்கு இணையப் பத்திரிகைகளும், உளவியல் ஆலோசகர்கள் எனப் படுவோரும் கீழ்க்கண்டவாறு அறிவுரை வழங்குகின்றனர்:

''லே-ஆஃப் என்பது வாழ்க்கையில் ஒரு நிகழ்வு. அதுவே வாழ்க்கையல்ல. நம்பிக்கை இழக்காதீர்கள். எந்தக் கம



பு.ஜ.தொ.மு.வின் ஐ.டி. ஊழியர் பிரிவு நடத்திய கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்துகொண்ட தோழர்கள் மற்றும் ஐ.டி. நிறுவன ஊழியர்கள்.

*முயன்று தங்களது நிறுவனத்தின் கூம்பு வடிவ நிர்வாகக் கட்டமைவில் மேலே ஏறியவர்கள். பொறியாளர்களுக்கு வேலைகளை ஒதுக்கித் தருவது, மென்பொருளின் தரத்தைப் பரிசோதிப்பது, புதியவர்களைப் பயிற்றுவிப்பது போன்ற இவர்கள் செய்து வரும் பணிகளில் பல இப்போது தானியங்கிமயமாகி (automated) வருகின்றன. மேலும் இவர்கள் செய்து வரும் பணிகளை இவர்களை விடக் குறைவான ஊதியத்தில் செய்வதற்குத் தயாராக ஒரு பெரிய வேலையற்றோர் பட்டாளம் வெளியில் காத்திருக்கிறது. எனவே இவர்கள் வேண்டாத சதைப்பிண்டமாகிவிட்டார்கள்.*

*"இன்ஃபோசிஸ் நிறுவன ஊழியர்களின் சராசரி வயது 2007-08 இல் 25.5 ஆக இருந்தது, 2012-13 இல் 27.5 ஆக உயர்ந்து விட்டது. இதன் காரணமாக ஒரு சராசரியாக ஒரு ஊழியரின் ஊதியத்தின் அளவும் அதிகரித்து விட்டது" என்று தனது ஆய்வில் கவலை தெரிவித்திருந்தது பர்க்லேஸ் என்ற முதலீட்டு ஆலோசனை நிறுவனம். 1981-இல் தொடங்கப்பட்டு, 1999- இல் நாஸ்டாக்கில் பட்டியலிடப்படும் அளவுக்குப் பிரம்மாண்டமாக வளர்ந்துவிட்ட இன்ஃபோசிஸ் நிறுவனத்தில், சுமார் 14 ஆண்டுகளுக்குப் பின்னர் 2012-இல், ஊழியரின் சராசரி வயது 27 ஆக இருப்பது "அந்த நிறுவனத்தின் ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல" என்று மதிப்பிடப்படுகிறதென்றால், ஐ.டி. நிறுவனங்களின் சராசரி ஓய்வு பெறும் வயது 30 என்றுதான் புரிந்து கொள்ளவேண்டும்.*


பெனியும் வாழ்நாள் பூராவும் வேலை தர முடியாது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு ஏமாற்றமும் ஆத்திரமும் ஏற்பட்டிருக்கும். ஆனால் ஒரு புரபஷனல் போல சிந்திக்கப் பழகுங்கள். இந்த வேலை போனால் என்ன ஆகும் என்று வேலையில் இருக்கும்போதே சிந்தித்துப் பழகுங்கள். இடையறாமல் புதுப்புது திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள்."

முதலாளித்துவ அடிமைத்தனத்தை இயற்கை நியதியாகக் கருதிச் சரணடைவதற்கு ஊழியர்கள் எப்படிப் பயிற்றுவிக்கப் படுகிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே.

நாஸ்காம் என்ற ஐ.டி. நிறுவனங்களின் கூட்டமைப்பு, நிர்வாகத்தை எதிர்ப்பது போலக் கனவு கூடக் காண முடியாமல் ஐ.டி. ஊழியர்களை அச்சுறுத்தி வைப்பதற்கு ஒரு ஏற்பாட்டை வைத்திருக்கிறது. ஐ.டி. துறையில் வேலை தேடுபவர் தேசிய திறனாளிகள் களஞ்சியத்தில் (National Skills Repository) பதிவு செய்து வைத்திருக்க வேண்டும். நிறுவனங்கள் திறமையாளர்களை அடையாளம் காண்பதற்கும், திறமையாளர்கள் தங்களை எளிதில் சந்தைப் படுத்திக் கொள்வதற்குமான ஏற்பாடுதான் என்று கூறப்பட்டாலும், இது உருவாக்கப் பட்டதன் நோக்கம் வேறு.




இந்திய ஐ.டி. நிறுவனங்களுக்குத் தமது பணிகளை அவுட்சோர்ஸ் செய்யும் அமெரிக்க, ஐரோப்பிய நிறுவனங்களுக்கு, தங்களது தரவுகளைக் கையாளும் இந்திய ஊழியர்கள் மீது நம்பிக்கை இல்லாத காரணத்தினால், ஊழியர்களின் ரேகை முதல் கருவிழி உள்ளிட்ட அனைத்து தரவுகளும் திரட்டப்பட வேண்டும் என்று கோரியதன் அடிப்படையில்தான் ஜனவரி, 2006-இல் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. ஒரு ஊழியர் எத்தனை நிறுவனங்களுக்கு மாறினாலும், அவரைப் பற்றிய எல்லாத் தரவுகளும் இதில் தொகுக்கப்படும் என்பதால், ஒரு ஊழியர் ஏதேனும் ஒரு நிறுவனத்தில் நிர்வாகத்தை எதிர்க்கும் பட்சத்தில் அவரது பெயர் கறுப்புப் பட்டியலில் ஏற்றப்பட்டு, அவர் வேறு எங்குமே வேலை தேட முடியாத நிலையை ஏற்படுத்துகின்றனர் ஐ.டி. முதலாளிகள். தொழிற்சங்கம் இல்லாத காரணத்தினால், சட்டவிரோதமான இந்தக் கிரிமினல் நடவடிக்கையை அம்பலமாக்கவோ, தடுக்கவோ ஊழியர்களால் இயலவில்லை.



**எல்.கே.ஜி. முதல் பொறியியல் பட்டம் வரை சுமார் 20 ஆண்டுகாலம் "படி, படியென்று படித்து", வேலையில் அமர்ந்த 7,8 ஆண்டுகளிலேயே "லாயக்கில்லை" என்று துரத்தப்படும் ஒரு மனிதனின் வாழ்க்கையை முதலாளித்துவத்தின் இலாப – நட்டக்கணக்கு பொருட்படுத்துவதில்லை.**

நாஸ்காம் தருகின்ற ஒரு புள்ளி விவரத்தைப் பார்ப்போம். நூறு கோடி டாலர் வருவாய் ஈட்டுவதற்கு இந்திய ஐ.டி. நிறுவனங்களுக்கு 2012-13 ஆம் ஆண்டில் 26,500 ஊழியர்கள் தேவைப்பட்டார்கள். 2013-14 ஆம் ஆண்டில் வெறும் 13,000 ஊழியர்களைக் கொண்டு அதே நூறு கோடி டாலர் ஈட்டியிருக்கின்றன ஐ.டி. நிறுவனங்கள் (NDTV, அக்-13). இது மட்டுமல்ல, இந்தியாவின் ஐ.டி. துறையில் புதிய ஊழியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தின் உண்மை மதிப்பு கடந்த 15 ஆண்டுகளில் இப்போதுதான் மிகவும் குறைவாக இருக்கிறது என்று மதிப்பிட்டிருக்கிறது கிரெடிட் சுயிஸ் என்ற முதலீட்டு நிறுவனம். ஆட்குறைப்பு, உழைப்புச் சுரண்டல் அதிகரிப்பு, ஊதிய வெட்டு ஆகிய மூன்றும் ஒரே நேரத்தில் ஊழியர்கள் மீது ஏவப்படுவதை மேற்கூறிய தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

**இலாபவெறி, தானியங்கிமயம் என்ற கிடுக்கிப்பிடி!**

''மாறிவரும் தொழில்நுட்பத்துக்கு ஏற்ப ஊழியர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ளாமை, இலாப விகிதத்தின் வீழ்ச்சி'' போன்ற நிர்ப்பந்தங்களின் காரணமாக வேறு வழியில்லாமல்தான் ஆட்குறைப்பு செய்யப்படுவது போன்ற ஒரு சித்திரத்தை கார்ப்பரேட் நிறுவனங்கள் உருவாக்குகின்றன. அது உண்மையல்ல. டி.சி.எஸ். மிகையாக இலாபம் ஈட்டியிருக்கும் இந்தஆண்டில்தான் ஆட்குறைப்பும் கூடியிருக்கிறது. ஊழியர்களுடைய உழைப்பின் உற்பத்தித்திறன் அதிகரித்து வருவதுதான் ஆட்குறைப்புக்கும் வழி வகுத்திருக்கிறது.

தானியங்கிமயம் (automation) மனித எந்திரமயம் (robotisation) செயற்கை நுண்ணறிவு (artificial intelligence) என ஐ.டி. துறையே புதிய சட்டகத்துக்குள் நுழைந்து விட்டதாகவும் இதற்குரிய திறமைகளை வளர்த்துக் கொள்ளாதவர்கள் தேவையற்றவர்களாக மாறுவதைத் தடுக்கவியலாது என்றும் கூறுகிறார்கள் கார்ப்பரேட் முதலாளிகள். உண்மையில் கீழிருந்து மேல் வரை பல்வேறு பணிகளுக்குமான நிரல்களை (programmes) அன்றாடம் எழுதுகின்ற பல்துறைப் பொறியாளர்கள், தம் பணியின் ஊடாக, தம்மைத்தாமே தேவையற்றவர்களாக்கிக் கொண்டு விடுகிறார்கள். இந்த நிகழ்ச்சிப்போக்கு மற்ற உற்பத்தி துறைகளில் நடப்பதைக் காட்டிலும் விரைவாக ஐ.டி. துறையில் நடந்தேறுவதைத்தான் நாம் காண்கிறோம். பொதுவாக எந்த தொழிலானாலும், அதில் தொழில்நுட்ப முன்னேற்றம் என்பது ஊழியர்களின் பணிச்சுமையைக் குறைக்க வேண்டும். ஆனால், இந்த முன்னேற்றத்தின் ஆதாயத்தை முதலாளித்துவம் அறுவடை செய்து கொள்வதால், தொழில்நுட்ப முன்னேற்றம் என்பது பணியில் இருக்கும் ஊழியர்களுக்கு முன்னிலும் அதிகமாக பணிச்சுமையைத்தான் கூட்டுகிறது. ஏராளமானோரை வேலையில்லாதவர்களாக்கி வெளியேற்றுகிறது.

''அமெரிக்க மூளையைவிட இந்திய மூளை மலிவு - இந்திய மூளையைவிட எந்திர மூளை மலிவு'' என்ற முதலாளித்துவ இலாப-நட்டக் கணக்குதான் ''தொழில்நுட்ப முன்னேற்றம்'' என்று பெயரில் மோகன்தாஸ் பய் போன்றோரால் நியாயப்படுத்தப்படுகிறது. எல்.கே.ஜி. முதல் பொறியியல் பட்டம் வரை சுமார் 20 ஆண்டுகாலம் ''படி, படியென்று படித்து'', வேலையில் அமர்ந்த 7,8 ஆண்டுகளிலேயே ''லாயக்கில்லை'' என்று துரத்தப்படும் ஒரு மனிதனின் வாழ்க்கையை முதலாளித்துவத்தின் இந்த இலாப - நட்டக் கணக்கு பொருட்படுத்துவதில்லை.

வேலையிலிருந்து துரத்துவது மட்டுமல்ல, பத்தாண்டுகள் உழைத்தவனுக்கு எந்தவித செட்டில் மென்டும் தராமல் வெளியேற்றுவதற்காகத்தான், பணித்திறன் குறைந்தவர் என்று முத்திரை, கட்டாய ராஜினாமா போன்ற வழிமுறைகள். மறுப்பவர்கள் நாஸ்காம் கருப்புப் பட்டியலைக் காட்டிப் பணிய வைக்கப்படுகின்றனர். இலாபத்தைத் தவிர வேறெந்த மதிப்பீடும் (value) இவர்களுக்கு கிடையாது என்பதே இவற்றிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டிய உண்மை.

**மன்மோகன் சிங்குக்கே இதுதான் கதி!**

இதனைப் புரிந்து கொள்ளாமல், ஹையர் அன்டு ஃபயர் (Hire and Fire) என்ற முதலாளித்துவத்தின் விதியை ஒப்புக்கொண்டு, ''பணித்திறனற்றவர் (under performer) என்று முத்திரை குத்தாமல் வெளியேற்றினாலாவது, இன்னொரு நிறுவனத்தில் நாங்கள் வேலை தேடிக்கொள்ள முடியுமே'' என்ற கோணத்தில் சிலர் அசட்டுத்தனமாக இறைஞ்சுகிறார்கள். தாங்கள் விரும்பிய வேகத்தில் புதிய தாராளவாதக் கொள்கைகளை அமல்படுத்தாமல் தடுமாறிய குற்றத்துக்காக, ஆனானப்பட்ட மன்மோகன் சிங்கையே ''அண்டர் பெர்ஃபார்மர்'' என முத்திரை குத்தித்தான் வெளியேற்றியது, ''நன்றி கெட்ட'' கார்ப்பரேட் முதலாளி வர்க்கம். அவ்வாறிருக்க, ஐ.டி. ஊழியர்கள் எம்மாத்திரம்?

இன்னொரு ஐ.டி. நிறுவனத்தில் வேலை கிடைத்துவிடும் என்று நம்பிக்கை வைப்பதற்குக்கூட அறிவுபூர்வமாக ஒரு அடித்தளம் இருக்க வேண்டும். டி.சி.எஸ்., இன்ஃபோசிஸ், விப்ரோ போன்ற ஐ.டி. நிறுவனங்களின் 80% வருவாய் அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் சார்ந்தே இருக்கிறது. தங்கள் நாட்டைக் காட்டிலும் மிகவும் குறைவான ஊதியத்தில் இந்தியாவில் ஊழியர்கள் கிடைக்கின்ற காரணத்தினால்தான், அமெரிக்க, ஐரோப்பிய தொழில் நிறுவனங்கள் இந்திய ஐ.டி. நிறுவனங்களிடம் பணிகளை அவுட் சோர்ஸ் செய்கின்றன.

நாராயணமூர்த்தி, டாடா, அசிம் பிரேம்ஜி ஆகியோருக்கும் கட்டிட வேலைக்கு ஆள் சப்ளை செய்யும் காண்டிராக்டர்களுக்கும் பெரிய வேறுபாடு இல்லை. தமது வாடிக்கையாளர்கள் அவுட்சோர்ஸ் செய்யும் வேலைகளுக்கு, ''நேரம், பொருட்செலவு, ஊழியர்களுக்கான ஊதியம்'' ஆகியவற்றைக் கணக்கிட்டு இன்வாய்ஸ் போட்டு அமெரிக்க-ஐரோப்பிய கம்பெனிகளுக்கு அனுப்பி வைத்து, அந்தப் பணத்தில் பாதிக்குப் பாதி கமிசன் அடிப்பதுதான் இவர்கள் செய்து வரும் தொழில்.

இந்த முறையிலான ஒப்பந்தத்தில் ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, இவர்களுடைய இலாபமடிக்கும் தொகையும் அதிகரிக்கும். இதுநாள் வரை ஏராளமாக ஊழியர்களைப் பணியமர்த்தியதற்குக் காரணம் இதுதான். மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையில் சுமார் 15 முதல் 20 சதவீதம் பேரை வேலையேதும் இல்லாமல் ''பெஞ்சில்'' அமரவைத்து, அவர்கள் பெயரிலும் கணக்கெழுதி பணம் வசூலித்து வந்தார்கள் இந்த நவீன இந்தியாவின் சிற்பிகள்.

**நீலக்காலராக மாற்றப்படும் வெள்ளைக்காலர்கள்!**

இந்திய ஐ.டி. நிறுவனங்களுக்கு வேலை கொடுக்கும் அமெரிக்க- ஐரோப்பிய நாடுகள் பொருளாதார மந்த நிலைமையிலிருந்து மீள முடியாத காரணத்தினால், அவை தமது இலாபத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, மேற்கூறிய ஒப்பந்த முறையை மாற்றுகின்றனர். ''எத்தனை ஊழியர்கள் என்பதைப் பற்றியெல்லாம் கவலையில்லை; குறிப்பிட்ட வேலையை முடித்து தருவதற்கு இவ்வளவு தொகை'' (outcome based pricing model) என்று ஒப்பந்தம் போடுகின்றனர். ஊழியர் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் தனது இலாப விகிதத்தை அதிகரித்துக் கொள்ளவும், பாதுகாத்துக் கொள்ளவும் திட்டமிடும் ஐ.டி. நிறுவனங்கள் ஆட்குறைப்பு நடவடிக்கையிலும் தானியங்கிமயமாதல் நடவடிக்கையிலும் இறங்குகின்றன.

## ஐ.டி. நிறுவனங்களுக்கு தொழிற்தகராறு சட்டம் பொருந்துமா?

டி.சி.எஸ். நிறுவனத்திலிருந்து ஆட்குறைப்பு நோட்டீஸ் வழங்கப்பட்ட ஒரு பெண் ஊழியர், தான் கருவுற்றிருக்கும் நிலையில் வேலைநீக்கம் செய்யப்படுவதாகவும், தன்னை வேலைநீக்கம் செய்வது தொழிற்தகராறு சட்டத்தின்படி செல்லத்தக்கதல்ல என்றும் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார். இதற்குப் பதிலளித்த டி.சி.எஸ். நிர்வாகம், தான் கருவுற்றிருக்கும் தகவலை அந்தப் பெண் ஊழியர் நிர்வாகத்துக்குத் தெரிவிக்கவில்லை என்றும், கருவுற்றிருக்கும் பெண்களைப் பணி நீக்கம் செய்வது தங்களது விதிமுறைகளுக்கே எதிரானது என்பதால் அந்தப் பெண்ணை மீண்டும் பணியமர்த்துவதாகவும், மற்றபடி தொழிற்தகராறு சட்டமெல்லாம் தங்கள் நிறுவனத்துக்குப் பொருந்தாது என்றும் கூறியது. அதாவது ''எங்கள் சட்டத்துக்குத்தான் நாங்கள் கட்டுப்படுவோமேயன்றி, உங்கள் சட்டத்துக்குக் கட்டுப்பட முடியாது'' என்பதுதான் டி.சி.எஸ். நிறுவனத்தின் வாதம்.

கர்நாடகாவில் தொழில் நிறுவனங்கள் நிலையாணைச் சட்டம், 1946-இன்படி, ஐம்பது பேருக்கு மேல் பணியாற்றுகின்ற ஒவ்வொரு நிறுவனமும், தொழிற்தகராறு சட்டத்தின் அடிப்படையிலான ஒரு நிலையாணையை வகுத்து அமல்படுத்த வேண்டும். ஐ.டி. முதலாளிகளை மகிழ்விக்கும் பொருட்டு அப்படியொரு நிலையாணையைக் காகிதத்தில்கூட வகுத்து வைத்துக் கொள்ளத்தேவையில்லை என்று கடந்த 18 ஆண்டுகளாக ஐ.டி. நிறுவனங்களுக்கு விலக்களித்திருக்கிறது கர்நாடக அரசு. தமிழகத்திலோ தாங்கள் ''ஷாப்ஸ் அண்டு எஸ்டாப்ளிஷ்மென்ட்ஸ் ஆக்ட்'' - இன் கீழ் வருவதாகப் பித்தலாட்டம் செய்து வருகின்றன ஐ.டி. நிறுவனங்கள்.

எல்லா ஐ.டி. நிறுவனங்களும் தொழில் தகராறு சட்டத்தின் கீழ்தான் வரும் என்பதை நிலைநாட்டுவதன் வாயிலாகத்தான் பணிப்பாதுகாப்பை உத்திரவாதம் செய்து கொள்ள முடியும். இதனை நிலைநாட்டுவதற்கே கூட ஊழியர்கள் தொழிற்சங்கமாகத் திரள்வது அவசியம்.



**ஐ.டி. துறை ஆட்குறைப்புக்கு எதிராக வினவு இணைய தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் வீடியோ பதிவுகளை ஆயிரக்கணக்கானோர் பார்த்திருப்பதும், கட்டுரைகளை ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் படித்திருப்பதும் ஐ.டி. ஊழியர்களிடையே போராட்டச் சிந்தனை அரும்பத் தொடங்கியிருப்பதைக் காட்டுகின்றன.**

இதுமட்டுமின்றி, முதலாளித்துவ உற்பத்தியின் தன்மை காரணமாக, வங்கிச் சேவை, காப்பீடு, கடன் வசூல், பயண முன்பதிவு என்பன போன்ற சேவைகள் மற்றும் அவற்றை நிர்வகிக்கும் முறைகள் ஒவ்வொன்றும் ஒருபடித்தானவையாக (commoditization) மாறி வருகின்றன. ரவா, மைதா போன்றவை பல பிராண்டுகளில் சந்தைப்படுத்தப்பட்டாலும், அவற்றின் பயன்பாடு ஒன்றுதான் என்பதைப் போலவே, கிரிண்ட்லேஸ், ஸ்டான்சார்ட் என்று வங்கிகள் வேறாக இருப்பினும் அவை வழங்கும் சேவையும் அவற்றை நிர்வகிக்கும் முறையும் அநேகமாக ஒன்றுதான் என்பதால், இன்ஃபோசிஸ், டி.சி.எஸ். போன்ற எந்த நிறுவனம் அந்தப் பணியைக் குத்தகைக்கு எடுத்து செய்தாலும், ''வேலையின் தரத்திலோ செய்யும் முறையிலோ பாரிய வேறுபாடு இல்லை. விலையில்தான் வேறுபாடு'' என்ற நிலை ஏற்பட்டு விட்டது. எனவே, அடக்கவிலையைக் குறைப்பதொன்றுதான் (cost cutting) இலாபத்தை அதிகரிப்பதற்கான வழி என்பதால், தானியங்கிமயமாதல் தீவிரப்படுத்தப்படுகின்றது.

இனி, வழமையான ஆளெடுப்பு முறைகளைக் கைவிட்டு, ''ஜஸ்ட் இன் டைம்'' (Just in time) என்ற முறைக்கு, அதாவது எந்தக் கணத்தில் தேவையோ அந்தக்கணத்தில் தேவைப்படும் ஆட்களை மட்டும் வேலைக்கு எடுத்துக் கொண்டால் போதுமானது என்று ஐ.டி. நிறுவனங்கள் கருதுகின்றன. தனித் திறன் வாய்ந்த சிலரை மட்டும் முறையாக பணியமர்த்திக் கொள்வது, எஞ்சியுள்ள ஆகப்பெரும்பான்மையான ஊழியர்களைப் பொருத்தவரை, ''எக்ஸ்போர்ட் ஆர்டர் இல்லையென்றால் வேலை இல்லை'' என்று கைவிரிக்கும் திருப்பூர் கம்பெனிகளின் வழிமுறைக்கு மாறத் திட்டமிடுகின்றன ஐ.டி. நிறுவனங்கள்.

பு.ஜ.தொ.மு. - ஐ.டி. ஊழியர்கள் பிரிவின் ஒருங்கிணைப்பாளர் தோழர் கற்பகவிநாயகம்.



நீலக்காலருக்கும் வெள்ளைக் காலருக்கும் இடையிலான வண்ண வேறுபாட்டை முதலாளி வர்க்கம் அகற்றி வருகிறது. காலைப்பொழுதில் நகர முச்சந்திகளில் கையில் தூக்கு வாளியும், கண்களில் ஏக்கமுமாக வேலை தேடிக் காத்திருக்கும் கட்டிடத் தொழிலாளிகளையும் பொறியியல், நிர்வாகவியல் பட்டதாரிகளையும் பிரிக்கும் எல்லைக் கோடு மங்கி வருகிறது.

பணத்தை எண்ணுவதையும், பங்குச் சந்தையில் சூதாடி இலாபமீட்டுவதையும் தவிர வேறு வேலை தெரியாத முதலாளி வர்க்கம், தன்னுடைய இலாபத்தை அதிகரித்துக் கொள்வதற்காக, ஆகப்பெரும்பான்மையான உழைப்பாளிகளைத் தேவையற்றவர்கள் என்றும் திறமையற்றவர்கள் என்றும் முத்திரை குத்திக் கழித்துக் கட்டுகிறது. உடலுழைப்பாளிகளோ, மூளை உழைப்பாளிகளோ அனைவருக்கும் நேர்ந்து வருவது இதுதான். உண்மையில் இந்த சமூகத்துக்கு எந்த விதத்திலும் தேவைப்படாதவர்கள், முதலீட்டாளர்கள் என்று கவுரவமாக அழைக்கப்படும் முதலாளி வர்க்கச் சூதாடிகள்தான்.

பன்னாட்டு நிறுவன வேலை, அதிக ஊதியம், அமெரிக்கச் சார்பு, தமது தகுதி-திறமை குறித்த மயக்கம், சக ஊழியனைப் போட்டியாளனாகக் கருதும் மனோபாவம் ஆகியவற்றுக்கு ஆட்பட்டிருக்கும் ஐ.டி. துறையினரும், காம்பஸ் இன்டர்வியூவில் தெரிவு செய்யப்படுவதற்காகத் தவமிருக்கும் மாணவர்களும் உண்மையைக் கண் திறந்து பார்ப்பதற்கான வாய்ப்பை தற்போதைய ஆட்குறைப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தியிருக்கின்றன.

நாராயணமூர்த்தியும் பில் கேட்சும் இலட்சிய நாயகர்களாகக் கருதப்படும் சமூகத்தில் நாம் தேவையற்றவர்களாவதைத் தவிர்க்க முடியாது. அவர்களையும் அவர்களுடைய வர்க்கத்தையும் தேவையற்றவர்களாக்கும் ஒரு சமூக அமைப்பைப் பற்றி உடனே சிந்திக்குமாறு அவர்கள் நம்மை நிர்ப்பந்திக்கிறார்கள்.

**• சூரியன்**

### ஐ.டி. நிறுவனங்கள்:

# இந்திய ‘வல்லரசின்’ வியர்வைக் கூடங்கள்!

> தமது ஊழியர்களை வக்கிரமாகச் சுரண்டுவதிலும், மனதளவில் சாகடித்து நடைப்பிணங்களாக மாற்றுவதிலும் ஐ.டி. நிறுவனங்களை விஞ்ச வேறு எவரும் கிடையாது.

**சி**ல இலட்சங்களில் வருடச்சம்பளம்; எளிதாகவும் எந்தக் கரைச்சலுமில்லாமல் கிடைக்கும் வீட்டு லோன், கார் லோன், கிரெடிட் கார்டு; வார இறுதிக் கொண்டாட்டம், வெளிநாட்டுப் பயணம், இத்யாதி... இத்யாதி. . . - இதுதான் ஐ.டி.துறை வேலை குறித்த அனைவரின் பார்வையாக இருக்கிறது. ஏழ்மையும் வறுமையும் நிறைந்த இந்திய மண்ணில் ஒரு சொர்க்கத்தை உருவாக்குவதற்காகவே ஐ.டி. துறை இங்கு வந்திருப்பதாகவும் எப்படியேனும் அந்நிறுவனங்களின் சம்பளப் பட்டியலில் நாமும் இடம் பிடித்திட வேண்டும் என்ற எண்ணம் நடுத்தர வர்க்கப் பெற்றோர்களிடமும் மாணவர்களிடமும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இப்படி உருவாக்கப்பட்டிருக்கும் பொதுக்கருத்துதான், நமது நாட்டையும் 30 இலட்சம் இளைஞர்களின் வாழ்க்கையையும் ஒட்டச் சுரண்டிக் கொண்டிருக்கும் ஐ.டி. நிறுவனங்களின் கொடுங்கோன்மையை வெளியே தெரியாமல் மறைத்துவிடுகிறது.

இந்தியாவில் செயல்படும் டி.சி.எஸ்., சி.டி.எஸ்., விப்ரோ, இன்ஃபோசிஸ், ஐ.பி.எம்., ஹெச்.சி.எல்., உள்ளிட்ட பல்வேறு ஐ.டி. நிறுவனங்கள், தங்களின் பணிக்கான ஊழியர்களைப் பல்வேறு கல்வி நிறுவனங்களில் இருந்து வளாக நேர்முகத் தேர்வு (Campus Interview) மூலமாக எடுக்கின்றனர். அந்தப் பொழுதிலிருந்தே இந்நிறுவனங்களின் மனித வளச் சுரண்டல் தொடங்கிவிடுகிறது. ‘‘எப்பொழுது வேலைக்குக் கூப்பிடுகிறோமோ அதிலிருந்து 1 வாரத்திற்குள் வந்து சேர்ந்து விட வேண்டும், இல்லையேல் வேலை கிடையாது’’ என்ற நிபந்தனையோடு வேலைக்கான கடிதத்தைப் (Offer Letter) பெறும் மாணவர்களின் கதி மிகப் பரிதாபமானது.

ஏனெனில், அடுத்த ஓராண்டுக்குள் தங்களுக்கு வரவிருக்கும் அயல்பணி வாய்ப்புகளை எதிர்பார்த்து ஆள் சேர்க்கும் இந்த நிறுவனங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு வேலை வழங்குவதற்கான கடிதம் மட்டுமே கொடுப்பார்களே தவிர, வேலை உத்தரவு கடிதம் தருவதில்லை. அந்நிறுவனங்களுக்கு அயல்பணி வேலைக்கான உத்தரவு வந்தவுடன்தான், வளாக நேர்முகத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு வேலையில் சேர்வதற்கான கடிதத்தை அனுப்புகின்றனர். இதற்கு குறைந்தபட்சம் 3 மாதங்களிலிருந்து 2 ஆண்டுகள் வரை அவர்கள் காத்திருக்க நேரிடும்.

படிப்பை முடித்து தேர்ச்சி பெற்று வெளியே வந்துவிட்ட இக்காலகட்டங்களில் இவர்கள் வேறெந்த நிறுவனத்திலும் வேலையில் சேருவதற்கு வாய்ப்பில்லாத சூழலே பெரும்பாலும் நிலவுகிறது. ஏனெனில், பெரும்

அடிமைத்தனத்திலும், அச்சுறுத்தலின் கீழும் இருத்தி வைக்கப்பட்டுள்ள ஐ.டி. நிறுவன ஊழியர்கள்.



பாலான சிறு நிறுவனங்கள், ''வேலையை விட்டு விலகிச் செல்வதற்கு 2 மாதங்களுக்கு முன்னாலேயே அதனைத் தெரிவிக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் 2 மாத சம்பளத்தைத் திரும்பச் செலுத்தி வெளியேற வேண்டும்'' என்ற நிபந்தனையோடுதான் ஊழியர்களைத் தேர்வு செய்கின்றன. இதன் காரணமாக கார்ப்பரேட் ஐ.டி. நிறுவனங்களில் வேலைக்குச் சேர விரும்புவர்கள் அந்நிறுவனங்களிலிருந்து பணி ஆணை வருவதற்கு முன்பாக, ஒன்று வெட்டி ஆஃபீசராகக் காலந்தள்ள வேண்டும்; அல்லது சிறு நிறுவனங்களின் நிபந்தனைகளுக்குப் பணிந்து போக வேண்டும் என்ற இக்கட்டு நேரிடுகிறது. இதைத் தாண்டி பணி ஆணை வந்து வேலையில் சேர்ந்த பிறகு, நிறுவனங்களில் நடத்தப்படும் திறனறித் தேர்வுகளைச் சந்திக்க வேண்டும். அதில் புதிய ஊழியர்கள் தேர்ச்சி பெறவில்லையென்றால், வேலையை விட்டு எந்த முன்னறிவிப்பும் இன்றித் தூக்கியடிக்கப்படுவார்கள். இதை எல்லாம் கடந்து ஒருவர் நிறுவனத்தில் நிலை பெற்றுவிட்டாலும், பணிச்சுமையும், வேலையிழப்பு என்ற கத்தியும் அவரது தலைக்கு மேலே தொங்கிக் கொண்டுதானிருக்கும்.

இந்தியாவில் செயல்படும் ஐ.டி.நிறுவனங்கள் பெரும்பாலும் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நிறுவனங்களுக்கான சேவைப் பணிகளைச் செய்வதால் இந்திய நேரப்படி காலை 9.30 மணிக்கு அலுவலகம் வரும் ஊழியர்கள், தங்களது ''கிளையண்ட்'' நிறுவனத்தின் மதிய உணவு இடைவேளை வரை, அதாவது இந்திய நேரப்படி இரவு 11.00 மணி வரை அலுவலகத்தில் இருந்து வேலை செய்தாக வேண்டும். புல்லுக்கட்டை முன்னால் கட்டி குதிரை வண்டியை ஓட்டுவது போல், ஐ.டி. ஊழியர்களை வேலை வாங்குவதற்காகவே கிரேடு (தரவரிசை) மற்றும் ஆன்சைட் (வெளி நாட்டுப் பணி) போன்ற புல்லுக்கட்டுகள் இருக்கின்றன. இரவு அதிக நேரம் வரை வேலை பார்ப்பவர்களுக்கு உயர்ந்த தரப்படி; அதன் அடிப்படையிலேயே வெளிநாட்டு வேலைக்கு ஆட்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்று நிறுவனங்கள் காட்டும் ஆசைக்குப் பலியாகும் ஊழியர்கள், அதனால் செக்கு மாடுகளைப் போலாகி விடுகிறார்கள்.

# உதயமானது ஐ.டி.துறை ஊழியர் சங்கம்!

டி.சி.எஸ். ஆட்குறைப்பு குறித்த செய்தியை வினவு இணைய தளம் (vinavu.com) அம்பலப்படுத்தியதைத் தொடர்ந்து, ஆட்குறைப்புக்கு எதிரான பிரச்சாரத்தில் பு.ஜ.தொ.மு. தோழர்கள் ஈடுபட்டனர். சங்கம் வைக்கும் உரிமையை நிலைநாட்டிக் கொள்வதுதான் ஆட்குறைப்புக்கு எதிரான போராட்டத்தின் முதல் படி என்ற அடிப்படையில் பு.ஜ.தொ.மு.வின் ஐ.டி. ஊழியர் பிரிவு அன்று தொடங்கப்பட்டது. படூரில் ஜனவரி 10-ம் தேதி மாலை நடைபெற்ற கூட்டத்தில் சுமார் 250 பேர் கலந்து கொண்டனர். அவர்களில் - பெரும்பான்மையினர் பல மாநிலங்களையும் சேர்ந்த ஐ.டி. ஊழியர்கள்; மற்றவர்கள் மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள்.

பு.ஜ.தொ.மு. வின் மாநிலப் பொருளாளர் தோழர் விஜயகுமார் ஒருங்கிணைத்து நடத்திய இக்கூட்டத்தில், உரையாற்றிய ஐ.டி. பிரிவின் ஒருங்கிணைப்பாளர் தோழர் கற்பகவிநாயகம், தனது 17 ஆண்டு கால ஐ.டி. பணி அனுபவத்திலிருந்து சங்கம் அமைப்பதன் தேவையை வலியுறுத்தினார். ஊழியர்களுடைய வாழ்க்கைப் பின்புலமும், ஐ.டி. துறை பணிச்சூழலும் ஊழியர்களின் மனநலப் பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைவதை விளக்கிய மனநல மருத்துவர் ருத்ரன், சங்கமாகச் சேர்வது அவர்களை இப்பிரச்சினைகளிலிருந்து விடுவிக்க எங்ஙனம் உதவும் என்பதை விளக்கினார்.

ஐ.டி. ஊழியர்களுக்குச் சங்கம் அமைக்கும் உரிமை சட்டப்படியே இல்லையா, சங்கத்தில் சேர்ந்தால் வேலை போகுமா, இந்த ஆட்குறைப்பை முறியடிக்க முடியுமா - என்பன போன்ற ஊழியர்களின் கேள்விகளுக்குத் தனது உரையில் விடையளித்தார் வழக்குரைஞர் பாலன் ஹரிதாஸ். நீதிமன்றங்கள் மூலம் நிவாரணம் பெற முயற்சிக்கின்ற அதேநேரத்தில், ஊழியர்கள் சங்கமாகத் திரண்டு போராடுவதுதான் அவர்களது வேலையையும் உரிமைகளையும் பாதுகாக்கப் பயன்படும் என்று விளக்கிப் பேசினார்கள், மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர்கள்.

தாங்கள் சங்கத்தில் சேருவதாக அங்கேயே இரண்டு ஊழியர்கள் அறிவித்திருப்பதும், ஐ.டி. துறை ஆட்குறைப்புக்கு எதிராக வினவு இணைய தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் வீடியோ பதிவுகளை ஆயிரக்கணக்கானோர் பார்த்திருப்பதும், கட்டுரைகளை ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் படித்திருப்பதும் ஐ.டி. ஊழியர்களிடையே போராட்டச் சிந்தனை அரும்பத் தொடங்கியிருப்பதைக் காட்டுகின்றன.

அனைத்து ஐ.டி நிறுவனங்களுக்கும் பிடிக்காத விசயம் பெண் ஊழியர்கள் குழந்தை பெற்றுக் கொள்வதுதான். பெண் ஊழியர்களின் இளமைக்காலம் முழுவதையும் ஒட்டச் சுரண்டவும், அவர்களது பிள்ளைப்பேறு விடுப்பைத் தவிர்க்கவும், முட்டைக்கரு சேமிக்கும் திட்டத்தை அவர்களுக்கு குறைவான விலையில் பெற்றுத்தருவது, அதற்கு உகந்தாற்போல் வங்கிக் கடன் பெற்றுத் தருவது - என களத்தில் முதல் ஆளாக ஐ.டி. நிறுவனங்கள் நிற்கின்றன. இதனை மீறிக் கர்ப்பமுற்று பிள்ளைப்பேறு விடுமுறை பெறும் பெண்களுக்கு கிரேடைக் குறைத்துப் போடுவது, அவர்களைப் பதவி உயர்வு படிக்கட்டில் ஒரு குறிப்பிட்ட அளவில்

நிறுத்தி வைப்பது போன்ற சதிகள் அரங்கேற்றப்படு கின்றன.

விப்ரோ நிறுவனம் "Wipro Academy of Software Excellence" (வேஸ்) என்கிற பெயரில் பி.காம்., பி.சி.ஏ., படித்தவர்களை வேலைக்கு அமர்த்தி, அவர்களை இராசஸ்தான் - பிலானியில் அமைந்துள்ள பிர்லா தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் கழகத்தோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் கீழ் பகுதி நேரமாக எம்.எஸ்., படிக்க வைக்கிறார்கள். அதற்கான வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் விப்ரோ நிறுவன வளாகத்திலேயே நடைபெறும். இந்த முறையின் மூலம் ஊழியர்களை நன்றிக்கடன் பட்டவர்கள் போல ஆக்கி, 10,000 ரூபாய் சம்பளத்திற்கு கொத்தடிமைகளைவிடக் கேவலமாகக் கசக்கிப் பிழிந்து வருகிறது, விப்ரோ.

ஊழியர் ஒருவருக்கு ப்ராஜெக்ட் முடிந்து விட்டால், அவர்களை பெஞ்சில் இருப்பவர்கள் என்று அழைப்பார் கள். அவர்கள் மூன்று மாதத்திற்குள் வேறு ஏதாவதொரு ப்ராஜெக்டில் சேர்ந்துவிட வேண்டும். இல்லை யென்றால், தானாகவே அவர்கள் வேலை போய்விடும். சில நிறுவனங்களில் பெஞ்சில் இருப்பவர்களுக்குச் சம்பளம் முழுமையாக வெட்டப்படும், அல்லது பகுதியளவு குறைக்கப்படும்.

இவ்வாறு பல்வேறு கீழ்த்தரமான வழிகளில் சுரண்டப்படும் ஊழியர்களை வேலையை விட்டுத் துரத்த முடிவெடுத்த பிறகு, அவர்கள் மீது நிர்வாகம் தொடுக்கும் உளவியல்ரீதியான தாக்குதல் மிகக் கொடுமையானது. ஒரு மாதம் முன்பு வரை சிறப்பாக வேலை செய்வதாக நிறுவனத்தால் பாராட்டப்பட்டவர், எதற்கும் லாயக்கில்லை என்று அவரே எண்ணும் வண்ணம் அவரிடம் புதிய புதிய குறைகளைக் கண்டு பிடித்து முன் வைப்பார்கள். இப்படி அவமானப்படுத் தப்பட்டு வேலையிலிருந்து துரத்தப்படும் ஊழியர், வேலை பறிக்கப்பட்ட பின்னும்கூடத் தனக்கு நேர்ந்த அவமானம், மன உளைச்சல், அநீதி குறித்து அருகில் உள்ள ஊழியர்களிடம்கூட வாய்விட்டுச் சொல்ல முடியாதவாறு ஹெச்.ஆர்.களால் மிரட்டப்படுவது ஐ.டி.நிறுவனங்களில் சர்வசாதாரணமாகக் காணக்கூடிய ஒன்று.

இப்படி பணியில் சேர்வதற்கு முன் தொடங்கி வேலையை விட்டுத் துரத்தப்படும் வரை இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் காட்டேரிகளாக ஐ.டி. நிறுவனங்கள் இருப்பதை எதிர்த்துப் போராட ஊழியர்கள் சங்கமாக அணி திரள்வது ஒன்றே தீர்வு.

● கதிர்

---

தலையங்கத் தொடர்ச்சி...

''ஜெயா சிறப்பு நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்திருப்பதால் அவ்வழக்கு முடியும்வரை அவரை நிரபராதியாகத்தான் கருத வேண்டும்; எனவே, ஜெயாவை அருண் ஜெட்லி சந்தித்திருப்பது சட்டப்படி தவறல்ல'' என சில மூத்த வழக்குரைஞர்கள் நியாயத்தை வளைத்துத் தெரிவித்திருக்கும் கருத்துக்களைக் கொட்டை எழுத்துகளில் பத்திரிகைகளில் பிரசுரித்து, பா.ஜ.க.வின் இரட்டை வேடத்தைக் கூச்ச நாச்சமின்றி மூடிமறைத்திருப்பதோடு, தண்டிக்கப்பட்ட குற்றவாளி ஜெயாவையும் விடுவித்துவிடுகிறது, பார்ப்பனக் கும்பல். ஆ.ராசாவிற்கும் கனிமொழிக்கும் அவர்கள் இந்த நியாயத்தைப் பொருத்துவதில்லை. ஏனென்றால், நீதிமன்றத்தால் தண்டிக்கப்படவில்லை என்றாலும் அவர்கள் இருவரும் தாழ்த்தப்பட்ட, சூத்திர சாதியைச் சேர்ந்தவர்கள். ஆனால், ஜெயாவோ நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருந்தாலும், அவர் பிரம்மஸ்ரீ கிரிமினல்.

2ஜி வழக்கில் ஊழலுக்கு எதிராக பெரும் சவுண்டு விட்ட உச்சநீதி மன்றம் ஜெயாவுக்கு மட்டும் கியூவில் முன்னுரிமை தந்து பெயில் வழங்கிய விவகாரத்தில் விஞ்சி நிற்பது பணப் பாசமா, பார்ப்பனப் பாசமா என்பதையே யாரும் கண்டுபிடிக்க முடியவில்லை. அடுத்து குடியரசு தினவிழா அணிவகுப்பின் அலங்கார வண்டிகளில், ஜெயாவின் திருவுருவப்படங்கள் கம்பீரமாக அணிவகுத்துச் செல்ல, கவர்னரும், தலைமைச் செயலரும், போலீசு டி.ஜி.பி.யும் தண்டிக்கப்பட்ட குற்றவாளிக்கு விரைப்பாக நின்று சல்யூட் அடிப்பதைக் காண்கிறோம். பிணையில் இருந்த போது தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டதற்காக சவுதாலாவின் பிணையை ரத்து செய்து சிறைக்கு அனுப்பியது டெல்லி உயர்நீதி மன்றம். உச்ச நீதிமன்ற, மிச்ச நீதிமன்ற நீதிபதிகளின் பார்வையில் இவை யெல்லாம் படவில்லை போலும்! இதற்குப் பெயர்தான் சட்டத்தின் ஆட்சியாம்!

மன்மோகன்சிங் அரசாங்கத்தை சோனியாகாந்திதான் கீ கொடுத்து இயக்கி வருகிறார் என்றும்; சோனியா காந்தியால் நியமிக்கப்பட்டிருந்த தேசிய ஆலோசனைக் குழுவை சமையலறை அமைச்சரவை என்றும் நக்கலடித்தும் விமர்சித்தும் பேசி வந்த தேசியப் பத்திரிகைகள் தமிழகத்தில் ஒரு தண்டிக்கப்பட்ட குற்றவாளி பினாமி ஆட்சி நடத்திவருவது குறித்தும், ஷீலா பாலகிருஷ்ணன், ராமானுஜம் - என இங்கும் ஒரு சூப்பர் அமைச்சரவை இயங்கி வருவது குறித்தும் ஒரு வார்த்தையும் பேசாமல், கல்லுளிமங்கனாய் நடந்து கொள்கின்றன. பா.ஜ.க.வோ இன்னும் ஒருபடி மேலே போய், ''அவசரச் சட்டங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் நோக்கில்தான் ஜெயா-ஜெட்லி சந்திப்பு நடந்ததாக''க் கூறியிருப்பதன் மூலம், சட்டத்திற்கு அப்பாற்பட்ட அதிகார மையமான ஜெயாவை, சட்ட பூர்வமாகவே அங்கீகரித்து விட்டது.

பார்ப்பான் கொலை செய்தால் சிகைச்சேதம்; சூத்திரன் கொலை செய்தால் சிரச்சேதம் - என சாதிக் கொரு நீதி பேசுவதுதான் மனுநீதி. இந்த ஒருதலை பட்சமான பார்ப்பன நீதியைத்தான் ஜெயா என்ற கிரிமினல் விசயத்தில் பா.ஜ.க முதல் நீதிமன்றங்கள், ஊடகங்கள் உள்ளிட்ட அனைவரும் கடைப்பிடிக் கின்றனர். மனுநீதிதான் சட்டம் என்று அமலாகிறது. காலம் கனியும்போது வெளிப்படையாகவே அறிவிப்பார்கள்.

●

## மோடி அரசின் அவசரச் சட்டங்கள்:

# கார்ப்பரேட் நிறுவனங்களின் பகற்கொள்ளைக்கான ஏற்பாடுகள்!

**தனியார் முதலீட்டை ஈர்ப்பது என்ற பெயரில் நாட்டின் வளங்களும் பொதுச்சொத்துக்களும் கார்ப்பரேட் முதலாளிகளின் தடையற்ற கொள்ளைக்குத் திறந்து விடப்படுகின்றன.**

''இந்தியாவில் தயாரிப்போம்'' (Make in India) என்ற திட்டத்தை மோடி அறிவித்தவுடனேயே, ''இப்படிபட்ட ஒன்றை எதிர்பார்த்துதான் பன்னாட்டு நிறுவனங்களும் உள்நாட்டு தரகு முதலாளிகளும் காத்துக்கொண்டு இருந்தது போலவும், இனி அந்நிய முதலீடு கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டப் போவது போலவும்'' கார்ப்பரேட் பத்திரிகைகள் வலிந்துவலிந்து எழுதித் தள்ளின. ஆனால், நடப்பதோ அதற்கு நேர்எதிராக உள்ளது. ''முதலில் அரசாங்க காசைப் போட்டு அடிக் கட்டுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுங்கள், குறைந்த வட்டியில் எங்களுக்குக் கடன் கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள்; மற்றதை பிறகு பார்க்கலாம்'' எனப் பன்னாட்டு நிறுவனங்களும் உள்நாட்டுத் தரகு முதலாளிகளும் பச்சையாகக் கூறிக் கையை விரித்து விட்டார்கள்.

பிரதமர் மோடியின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்பிரமணியனும் அரசுக்கு அளித்துள்ள 2014-ஆம் ஆண்டிற்கான அரையாண்டு பொருளாதார அறிக்கையில், ''பொது முதலீடுதான் தனியார் முதலீட்டை ஈடு செய்வதோடு, அதனைக் கவர்ந்திழுக்கும்'' எனநயத்தகு முறையில் குறிப்பிட்டு, கார்ப்பரேட் முதலாளிகளின் கருத்துக்கு ஒத்தூதியிருக்கிறார்.

தனியார்மயத்தின் மிகத் தீவிரமான ரசிகனான இந்தியா டுடே ஏடு, ''பொது முதலீட்டுக்கு மறுவாழ்வு தருவதை முற்போக்கு வளர்ச்சிக்கான முக்கியக் காரணியாக்க வேண்டும். அதற்குப் பதில் வேறு முதலீடு இருக்க வேண்டும் என்பதல்ல. அதற்கு மறுவாழ்வு தந்து ஆதரவு தரப்பட வேண்டும். பொதுத்துறை நிறுவனங்களிடம் வீணாகத் தேங்கிக் கிடக்கும் 'தூங்கும் முதலீடான' இரண்டு இலட்சம் கோடி ரூபாயைக் கட்டமைப்புத் திட்டங்களுக்கு உயிர் கொடுக்கப் பயன்படுத்தலாம்'' என அரசுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறது. கேட்பது பிச்சை என்றாலும், கார்ப்பரேட் விசுவாசிகளின் பந்தா மட்டும் குறையவில்லை.

நிதிப் பற்றாக்குறையால் தள்ளாடிக் கொண்டிருக்கும் மைய அரசால் எப்படி முதலீடுகளைச் செய்ய முடியும் என்ற கேள்வியை அலசும் இந்து நாளிதழ், ''அலைக்கற்றை ஏல விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தைப் பயன்படுத்தலாம். பெட்ரோல்-டீசல் மீது விதிக்கப்பட்டுள்ள கூடுதல் உற்பத்தி வரியின் மூலம் கிடைக்கும் வருமானத்தைப் பயன்படுத்தலாம்'' என மோடிக்கு வழிகாட்டுகிறது. பொதுமக்களின் கையை வெட்டி முதலாளிகளுக்கு சூப் வையுங்கள் என்பதுதான் இந்த ஆலோசனையின் வக்கிரமான பொருள்.

கார்ப்பரேட் கும்பல் எள் என்றால் எண்ணெயாக நிற்கக் கூடிய வரல்லவா நமது பிரதமர். அதனால் அரசாங்க கஜானாவை மட்டுமல்ல, அடித்தட்டு மக்களின் அற்ப உடமைகளையும் கார்ப்பரேட்டுகளின் பலிபீடத்தில் நிறுத்திவிட்டார், அவர். காப்பீடு துறையில் 49 சதவீதம் அளவிற்கு அந்நிய முதலீட்டை அனுமதிக்கும் சட்டத் திருத்தம், நிலம் கையகப்படுத்தும் சட்டத் திருத்தம், தொழில் பழகுநர் சட்டத் திருத்தம், நிலக்கரிச் சுரங்கங்களையும், இரும்பு, பாக்சைடு போன்ற அரிய வகை தாதுப்

ஆஸ்திரேலியாவின் குவீன்ஸ்லாந்து மாநிலத்திலுள்ள கார்மைக்கேல் நிலக்கரிச் சுரங்கத்தை அதானி குழுமத்திற்கு வாங்கிக் கொடுக்க நடந்த பேச்சுவார்த்தையில், அதற்காக ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா 6,200 கோடி ரூபாய் கடனாக அளிக்க ஒப்புக் கொண்டது. (கோப்புப் படம்)



பொருட்களையும் ஏல முறையில் ஒதுக்கீடு செய்யும் சட்டத் திருத்தம் - என அடுத்தடுத்து அவசரச் சட்டங்களை அறிவித்து, அதன் வழியாக நமது நாட்டின் கனிம வளங்களை, விவசாய நிலங்களை, பொது மக்களின் சேமிப்பை, தொழிலாளர்களின் உழைப்பை ஏகாதிபத்திய நிறுவனங்களும், உள்நாட்டுத் தரகு முதலாளிகளும் கூட்டாகச் சேர்ந்து கொண்டு தடையின்றிக் கொள்ளையடிப்பதற்கான ஏற்பாடுகளைத் தொடங்கி வைத்துவிட்டது மோடி அரசு.



ஜப்பானின் கூட்டோடு, உ.பி. மாநிலத்திலுள்ள காசியை
நவீன நகராக உருவாக்கும் ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்ச்சியில்
நரேந்திர மோடியோடு கலந்துகொண்ட
ஜப்பானின் பிரதமர் ஷின்ஸோ அபே (வலது ஓரம்).

காங்கிரசு கூட்டணி அரசு 2013-ஆம் ஆண்டில் நிறைவேற்றிய புதிய நிலம் கையகப் படுத்தும் சட்டத்தில், அரசு மற்றும் தனியார் இணைந்து செயல்படுத்தும் திட்டங்கள் என்றால், அத்தனியார் நிறுவனங்கள் 70 சதவீத நில உரிமையாளர்களின் சம்மதத்தைப் பெற வேண்டும். தனியார் திட்டங்கள் என்றால் 80 சதவீத நில உரிமையாளர்களின் ஒப்புதலைப் பெற வேண்டும்; விவசாயிகளை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தும் விளைவால் ஏற்படக்கூடிய சமூகத் தாக்கங்களை மதிப்பீடு செய்து அறிக்கை அளிக்க வேண்டும்; நகர்ப்புற நிலமாக இருந்தால் அரசு வழிகாட்டி மதிப்பீட்டுக்கு மேல் 2 மடங்கும், கிராமப்புறமாக இருந்தால் 4 மடங்கும் விலையாக நிர்ணயித்து வழங்க வேண்டும் என்றவாறு சில கவர்ச்சிகரமான (populist) சலுகைகள் அளிக்கப்பட்டிருந்தன. எனினும், தேசிய நெடுஞ்சாலைகள், ரயில் பாதைகள், அணுசக்தி திட்டங்கள், இராணுவப் பயன்பாடு உள்ளிட்ட 13 வகையான அரசின் திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்தப் பட்டால், நில உரிமையாளர்களின் சம்மதத்தையும் பெற வேண்டியதில்லை, சமூக தாக்கம் பற்றிய மதிப்பீடையும் செய்ய வேண்டியதில்லை என்றவாறு விதிவிலக்குகளையும் அச்சட்டத்திலேயே வைத்திருந்தது.

விவசாயிகளின் சம்மதத்தைப் பெறுவதும், சமூகத் தாக்கம் குறித்த மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதும் தான் காங்கிரசு அரசு கொண்டுவந்த சட்டத்தின் உயிர் நாடியாகக் கூறப்பட்டது. அந்த உயிர்நாடியைத் திருத்தங்களின் மூலம் ஒழித்துக்கட்டிவிட்டது, மோடி அரசு. பாதுகாப்பு, பெருந்தொழிற்பேட்டைகள், வீட்டுவசதித் திட்டங்கள், கிராமப்புற அடிக்கட்டுமானத் திட்டங்கள், சமூக அடிக்கட்டுமானத் திட்டங்கள் என்ற இந்த ஐந்து பிரிவுகளின்கீழ் வரும் திட்டங்களுக்கு அது அரசுத் திட்டமாக இருந்தாலும், முழுக்க முழுக்கத் தனியார் திட்டமாக இருந்தாலும், நில உரிமையாளர்களின் சம்மதத்தைப் பெற வேண்டிய அவசியமும் இல்லை, சமூகத் தாக்கம் குறித்த மதிப்பீட்டு அறிக்கைத் தயாரிக்க வேண்டிய தேவையும் இல்லை என மோடி அரசு கொண்டுவந்திருக்கும் அவசரச் சட்டம் வரையறுக்கிறது. எந்தவொரு திட்டத்தையும் இந்த ஐந்து பிரிவுக்குள் அடக்கிவிட முடியும் என்பதால், இனி நிலங்களை அபகரிப்பது ஆற்று மணல் கொள்ளை போல நடக்கக்கூடும்.

இனி தனியார்கள் கட்டும் கக்கூஸைக்கூட சமூக அடிக்கட்டுமானத் திட்டம் என வரையறைத்துவிட முடியும் என்பதால், கார்ப்பரேட் நிறுவனங்களின் நிலக் கொள்ளையை விவசாயிகளால் சட்டப்படி தடுத்து நிறுத்த முடியாது. பெரிய செலவு எதுவும் இல்லாமல், எதிர்ப்பும் இல்லாமல் சிறுவிவசாயிகளை அப்புறப் படுத்தி, அவர்களது நிலங்களை கார்ப்பரேட் நிறுவனங்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்கும் அடியாளாக அவதாரமெடுத்திருக்கிறது, மோடி அரசு.

கார்ப்பரேட் நிறுவனங்கள் நிலக்கரிச் சுரங்கங்களை வணிகரீதியான பயன்பாட்டுக்கு ஏலம் எடுப்பதையும்; அப்படி ஏலம் எடுத்த சுரங்கங்களை மற்றொருவருக்கு கைமாற்றிவிடுவதையும் அனுமதிக்கும் விதத்தில் நிலக் கரிச் சுரங்க ஒதுக்கீடு சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இவை, மன்மோகன் சிங் ஆட்சியில் நடந்த நிலக்கரி ஊழலைவிட, மிகப்பெரும் ஊழலைப் பிரசவிக்கும் அடிப்படையைத்தான் கொண்டுள்ளன. குறிப்பாக, 2ஜி அலைக்கற்றைகளை ஏலம் எடுத்த நிறுவனங்கள் அவற்றை வேறொரு நிறுவனங்களுக்கு கைமாற்றிவிட்டுக் கொள்ளை இலாபம் அடைந்ததைப் போன்ற முறைகேடுகள் நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடில் இனி அடிக்கடி நிகழும். ஆனால், 2ஜி விவகாரத்தைப் போல அதனை யாரும் ஊழல் என்றோ, முறைகேடு என்றோ குற்றஞ்சுமத்த முடியாது. ஏனென்றால், சுரங்கங்களைக் கைமாற்றிவிடுவதைச் சட்டபூர்வமாக்கி விட்டார், யோக்கியவான் மோடி.

நிலம், நிலக்கரி உள்ளிட்ட நாட்டின் பொதுச் சொத்தான இயற்கை வளங்களைத் தனியாருக்குத் தாரை வார்க்கும் இந்த அவசரச் சட்டங்களுக்கு அப்பால், ''பொது முதலீட்டை அதிகரிப்பதற்குச் சில சிறப்பான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்'' என நிதியமைச்சர் அருண் ஜெட்லி தரகு முதலாளிகளிடம் உறுதியளித்திருக்கிறார். அச்சிறப்பான நடவடிக்கைகள் வரி விதிப்பு என்ற பெயரில் மக்களைக் கொள்ளையடிப்பதும், அரசு வசமுள்ள மக்களின் சேமிப்புகளை முதலாளிகளுக்குப் படையல் போடுவதும்தான்.

இதன் தொடக்கமாக, தொழிலாளர் வைப்பு நிதியில் கைவைக்கத் துணிந்திருக்கிறது, மோடி அரசு. அந்நிதி

யிலிருந்து 7 இலட்சம் கோடி ரூபாயை எடுத்து, அதன் மூலம் ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கப் போவதாக, கேழ்வரகில் நெய் வடியும் திட்டமொன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் ஏழைகளுக்கு வீடு கிடைக்கிறதோ இல்லையோ, ரியல் எஸ்டேட் கம்பெனிகள், இரும்பு, சிமெண்ட் நிறுவனங்கள் கொழுத்த இலாபம் அடைவது உறுதி செய்யப்படும்.

எதிர்வரும் மார்ச்சுக்குள் 43,500 கோடி ரூபாய் பெறுமான பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்று நிதி திரட்டும் நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. இது ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடித்து - இலாப மீட்டும் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளைத் தனியாருக்குத் தாரை வார்ப்பது மற்றும் அதில் கிடைக்கும் பணத்தைப் பொது முதலீட்டுக்குத் திருப்பி விடுவது - முதலாளிகளின் மடியில் விழச் செய்யும் தந்திரம் நிறைந்தது.



நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடு சட்டத்தில் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்களை எதிர்த்து கோல் இந்தியா நிறுவனத்தின் தொழிலாளர்களும் ஊழியர்களும் கொல்கத்தாவில் அமைந்துள்ள அந்நிறுவனத்தின் தலைமை அலுவலகம் முன்பு நடத்திய ஆர்ப்பாட்டம்.

ஏழையின் கண்ணில் சுண்ணாம்பையும் பணக்காரனின் கண்ணில் வெண்ணெயையும் வைக்கும் பாரபட்சமான அரசுதான் இது என்பதை பெட்ரோல் விலையைக் கொண்டே விளங்கிக் கொள்ளலாம். அதன் மீது விதிக்கப்படும் உற்பத்தி வரி கடந்த சில மாதங்களில் நான்குமுறை அடுத்தடுத்து கூட்டப்பட்டதால், 2012-ஆம் ஆண்டில் ரூ.9.48 ஆக இருந்த ஒரு லிட்டர் பெட்ரோலுக்கான உற்பத்தி வரி, இப்பொழுது ரூ.16.95 ஆக அதிகரித்திருக்கிறது. இந்த வரி உயர்வின் மூலம் மட்டும் மைய அரசிற்குக் கிடைக்கவுள்ள கூடுதல் வருமானம் 18,000 கோடி ரூபாயாகும்.

எனினும், இந்தக் கூடுதல் வரி விதிப்பால் இந்திய மேல்தட்டு வர்க்கம் பெரும் பாதிப்பு அடைந்துவிடக் கூடாது என்ற பாரபட்ச நோக்கோடு, அவர்கள் பயணிக்கும் விமானத்திற்கான பெட்ரோல் மீது கூடுதல் வரி விதிக்காமல் தவிர்த்துவிட்டது, மோடி அரசு. இதனால் பொதுமக்கள் பயன்படுத்தும் பெட்ரோல் ரூ.58.91-க்கு விற்கப்படும்பொழுது, விமான பெட்ரோல் ரூ.52.42 என மலிவு விலையில் விற்கப்படுகிறது. மேன்மக்களுக்கு காட்டப்பட்ட இப்படிபட்ட சலுகைகள் எதையும் ரயில் பயணிகளுக்குத் தரப் போவதில்லை என்பதையும் அகங்காரத்தோடு அறிவித்துவிட்டது, மோடி அரசு.

இது மட்டுமின்றி, ஏழைகளின் அரை வயிற்றுக் கஞ்சியிலும் மண்ணை அள்ளிப் போடவும் இந்த அரசு தயங்காது என்பதை சாந்தகுமார் அறிக்கை எடுத்துக் காட்டியிருக்கிறது. உணவு மானியத்தைக் குறைக்கும் வழிகளை ஆராய்வதற்காக மோடி அரசால் நியமிக்கப்பட்ட அக்குழு, ''இந்திய உணவுக் கழகத்தை முற்றிலும் மாற்றியமைத்து, நாட்டின் 67 சதவீத மக்களுக்கு உணவுப் பாதுகாப்புச் சட்டப்படி உணவுப் பொருட்களை வழங்குவதற்குப் பதிலாக, 40 சதவீத பேருக்கு மட்டும் உணவுப் பொருட்களை வழங்கி உணவு மானியத்தை வெகுவாகக் குறைத்துவிடலாம்'' என இரக்கமின்றி அரசுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறது. மானிய வெட்டுகள், பல்வேறு வரி விதிப்புகளின் மூலம் ஏழைகளைச் சுரண்டி கஜானாவை நிரப்பிக் கொள்ளும் மோடி அரசு, பொது முதலீடு, வரிச் சலுகைகள் என்ற பெயரில் அப்பொதுப் பணத்தைத் தின்று கொழுக்கும் உரிமையைப் பணக்கார வர்க்கத்திற்கு அளிக்கிறது.

தனியார்துறை முதலீடைக் கவருவது என்ற பெயரில் அரசின் கஜானாவைத் திறந்துவைப்பதொன்றும் இதற்கு முன் நடவாத புதிய விசயமல்ல. கடந்த மன்மோகன் சிங் ஆட்சியில் வங்கிக் கடன்களாகவும், வரிச் சலுகைகளாகவும் பொது முதலீடு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வாரி வழங்கப்பட்டது. அதனால் ஏற்பட்ட பலன் என்ன? கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வங்கிக் கடன்களால் பொதுத்துறை வங்கிகளின் வாராக் கடன் பெருகி, அவை திவாலாகும் நிலைக்குத் தள்ளப்பட்டன. கடந்த ஆட்சியில் ஒவ்வொரு பட்ஜெட்டிலும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ஐந்து இலட்சம் கோடி ரூபாய் பெறுமான வரிச் சலுகைகளால் அரசின் பற்றாக்குறை அதிகரித்ததேயொழிய, நாட்டிற்கோ, மக்களுக்கோ அதனால் எந்தப் பலனும் கிட்டவில்லை. வரிச்சலுகைகளைப் பெற்ற நோக்கியா, வோடாஃபோன் உள்ளிட்ட பல நிறுவனங்கள் வரி மோசடியிலும் ஈடுபட்டுப் பொதுப்பணத்தைச் சுருட்டிக் கொண்டதைத் தான் கண்டோம். பொது நலன் கருதிதான் அலைக்கற்றைகளையும் நிலக்கரிச் சுரங்கங்களையும் குறைந்த விலைக்கு ஏலம் விட்டதாக காங்கிரசு கட்சி கூறியது. அப்பொது நலன் கார்ப்பரேட் பகற்கொள்ளைக்குத்தான் வழியைத் திறந்துவிட்டது. இப்படிபட்ட ஊழலும் மோசடியும் கார்ப்பரேட் பகற்கொள்ளையும் இல்லாமல், மோடி தனியார் முதலீட்டை அள்ளி வருவார் என நம்புவதற்கு காதில் பூதான் முடிந்திருக்க வேண்டும்.

● செல்வம்

# "ஆரிய - பார்ப்பன எதிர்ப்புப் போரின் தளப்பிரதேசமாகத் தமிழ்நாட்டைக் கட்டியமைப்போம்!"

## – தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் பிரச்சார இயக்கம்

சனவரி - 25, 2015 - இந்தித் திணிப்புக்கெதிராக, நடைபெற்ற தமிழக மாணவர்களின் வீரஞ்செறிந்த போராட்டம் பொன்விழா ஆண்டை நிறைவு செய்து 51-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறது.



சென்னை – விருகம்பாக்கம் அரங்கநாதன் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தும் பு.மா.இ.மு.வினர்.

இதனையொட்டி மொழிப்போர் தியாகிகளின் நினைவை நெஞ்சிலேந்தியும், பார்ப்பன எதிர்ப்புப் போரின் தளப்பிரதேசமாகத் தமிழ்நாட்டை கட்டியமைக்க அறைகூவியும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் பேருந்து, ரயில் பிரச்சாரம், சைக்கிள் பேரணி, பள்ளி - கல்லூரிகளில் வாயில் கூட்டங்கள், விடுதிகளில் அறைக் கூட்டங்கள், அரங்குக் கூட்டங்கள் என விரிவான அளவில் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு, மொழிப்போர் தியாகிகளின் பொன்விழா ஆண்டு நிறைவை கடைபிடித்தனர்.

சென்னை, கோவை, கரூர், கடலூர், சிதம்பரம், விருத்தாசலம், வேதாரண்யம், விழுப்புரம், தருமபுரி, புதுச்சேரி, தஞ்சை, திருச்சி ஆகிய பகுதிகளில் இவ்வமைப்பினர் மொழிப்போர் தியாகிகளின் திருவுருவப்படங்களுக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர். திருச்சியில், மத்திய பேருந்து நிலையம் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து பேரணியாகப் புறப்பட்டு, தென்னூர் இந்தி பிரச்சார சபாவை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

மிக முக்கியமாக, தமிழகம் முழுவதிலும் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மத்தியில் விரிவான பிரச்சாரத்தைக் கொண்டு சேர்த்ததோடு, அவர்கள் பங்கேற்போடு வாயில் கூட்டங்களையும், அறைக்கூட்டங்களையும் பு.மா.இ.மு. வினர் நடத்தினர். சென்னையில் மாநிலக் கல்லூரி, ராணி மேரிக் கல்லூரி உள்ளிட்ட கல்லூரிகளில் ''வீரஞ்செறிந்த மொழிப்போர்'' வீதி நாடகத்தை நடத்தினர். புதுவைப் பல்கலைக்கழகம் இரண்டாவது நுழைவாயில் முன்பாக சன-23 அன்று பறையிசை முழக்கத்தோடு நடந்த வாயிற்கூட்டத்தில், திரளான மாணவர்களோடு, பேராசிரியர்களும் பங்கேற்றனர்.



திருச்சியில்...





புதுவைப் பல்கலையில்...

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை தலைமை தாங்கி வழிநடத்திய முன்னணியாளர்கள் கூடிப் பேசிய பச்சையப்பன் கல்லூரி விடுதி அறைஎண்:80; சென்னையில் மூலக்கொத்தளத்தில் அமைந்துள்ள தியாகி நடராசனின் நினைவிடம்; விருகம்பாக்கம் அரங்கநாதன் நினைவிடம்; திருச்சியில் கீழப்பழூர் சின்னசாமி, விராலிமலை சண்முகம் ஆகியோரின் நினைவிடங்களில் மலர்வளையம் வைத்து மரியாதை செய்தனர். தியாகி சிவலிங்கம் வாழ்ந்த பகுதியான கோடம்பாக்கம் காமராசர் காலனியில் திரளான அப்பகுதி மக்களின் பங்கேற்போடு தெருமுனைக் கூட்டத்தை நடத்தினர். இத்தெருமுனைக் கூட்டத்தில், சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் நிகழ்த்திய ''வீரஞ்செறிந்த மொழிப்போர்'' நாடகம் 50 ஆண்டுகளுக்கு முந்தைய மொழிப்போரை கண்முன் கொண்டுவந்து நிறுத்தியதோடல்லாமல், அனைவரையும் உணர்ச்சிப் பெருக்கில் ஆழ்த்தியது.

சென்னையில் நடைபெற்ற நினைவேந்தல் கூட்டத்தில், மொழிப்போர் தியாகி விருகம்பாக்கம் அரங்கநாதனின் மகன் அமுதவாணன் மற்றும் விருத்தாசலத்தில் நடைபெற்ற தெருமுனைக்கூட்டத்தில் மொழிப்போர் தியாகி கீழப்பழூர் சின்னசாமியின் மனைவி கமலம் மற்றும் மகள் திராவிடச் செல்வி ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

– பு.ஜ.செய்தியாளர்

# திவாலாகிப்போன அரசியல் - சமூகக் கட்டமைவைத் தகர்த்தெறிவோம்! மக்கள் அதிகாரத்தை நிறுவுவோம்!

தமிழகத்தின் அரசியலில் மட்டுமல்ல, நமது நாடு முழுவதுமான அரசியலிலும் பாரிய விளைவை ஏற்படுத்தக்கூடிய மிக முக்கியமான அரசியல் முடிவுகளை, ஜனநாயகபூர்வமான உட்கட்சி அரசியல் விவாதத்தைத் தொடர்ந்து, 2015, ஜனவரி 2-3 தேதிகளில் நிகழ்ந்த மாநில சிறப்புக் கூட்டத்தில், இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) -இன் மாநில அமைப்புக் கமிட்டி எடுத்திருக்கிறது. அவற்றின் சாரம் வருமாறு:

இப்போது நமது நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுக் கட்டமைப்பு முழுவதும் தீராத, மீளமுடியாத, நிரந்தரமான, மிகமிக அசாதாரணமான நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளது. அதன் கட்டுமான உறுப்புகள் அனைத்தும் அவற்றுக்குரியவையாக வரையறுக்கப்பட்ட பணிகளை ஆற்றாது, திவாலாகி, தோற்றுப்போய், நிலைகுலைந்து எதிர்நிலைச் சக்திகளாக (bankrupted, failed, collapsed and turned into opposite forces) மாறிவிட்டன.

நாட்டின் அரைக்காலனி - அரை நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு, தரகு முதலாளிய அரசியல் அமைப்பு எதிர்கொண்ட நெருக்கடிகளுக்குத் தீர்வாக ஏகாதிபத்தியங்களால் திணிக்கப்பட்ட தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற கொள்கையும், கட்டுமான மாற்றங்களும் அரசியல் - பொருளாதார - சமூகச் சிக்கல்களை மேலும் கடுமையாக்கி முற்றச் செய்துவிட்டன.

மேற்கண்ட போக்குகள் ஒரு உச்ச நிலையை எட்டி, இன்றைய சமூக கட்டமைப்பின் பொருளாதாரம், அரசியல், பண்பாடு போன்ற அனைத்து கட்டுமானங்களும், கட்டமைப்பு முழுவதும் தீராத, தீர்வு காண இயலாத நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டுள்ளது. இவற்றின் கையாலாகாத்தனத்தை, காலாவதியாகிப்போன நிலையை, இற்றுப் போனதை, திவாலாகிப் போனதை, தோற்றுப் போனதையே இது காட்டுகிறது. நாட்டின் நடப்புகளே இதற்குச் சான்று கூறுகின்றன.

> “இப்போது நமது நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுக் கட்டமைப்பு முழுவதும் தீராத, மீளமுடியாத, நிரந்தரமான, மிகமிக அசாதாரணமான நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளது. அதன் கட்டுமான உறுப்புகள் அனைத்தும் அவற்றுக்குரியவையாக வரையறுக்கப்பட்ட பணிகளை ஆற்றாது, திவாலாகி, தோற்றுப்போய், நிலைகுலைந்து எதிர்நிலைச் சக்திகளாக மாறிவிட்டன.”

இந்தக் கட்டமைப்பை தாங்கிப் பிடித்து, நியாயப்படுத்தி மக்களிடம் அங்கீகாரம் பெற்றுத் தந்து வந்த ஆளும் வர்க்கத்தின் சித்தாந்தங்களும், அரசியல் கொள்கைகளும், பண்பாட்டு நெறி முறைகளும், நீதி நெறிமுறைகளும், அரசியல் சட்டமும், விதி முறைகளும், ஒழுங்குமுறைகளும்கூடத் திவாலாகி, தோற்றுப் போய் விட்டன. சித்தாந்த, அரசியல், பண்பாட்டு ஆயுதங்கள், கருவிகள் எல்லாவற்றையும் பிரயோகித்துப் பார்த்தும் நெருக்கடியிலிருந்து மீளமுடியாமல் மேலும் மேலும் நெருக்கடி எனும் கருந்துளைக்குள் போய்க்கொண்டிருக்கும் பரிதாப நிலையையே இது வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

மத்தியில் பிரதமர், மாநிலத்தில் முதலமைச்சர், மற்றும் மத்திய - மாநில அமைச்சர்கள், மாநிலத் தலைமை போலீசு அதிகாரிகள், அதிகார வர்க்கத்தினர் உள்ளிட்ட உயர் அரசுப் பதவிகளை வகிப்பவர்களில் பலர் கிரிமினல் குற்றவாளிகளாக உள்ளனர். இவர்கள் கிரிமினல் குற்றவாளிகளாக இருந்தும் தண்டிக்கப்படவில்லை; மாறாக, அவர்கள் மீண்டும் மீண்டும் ஆட்சியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் அல்லது நியமிக்கப்படுகிறார்கள்.

குஜராத்தில் இசுலாமியரைப் பெருந்திரளாகக் கொலைசெய்த கிரிமினலான பிரதமர் மோடி மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் பொறுப்பைக் கீழமை நீதிமன்றங்களிடம் உச்சநீதி மன்றம் தள்ளிவிட்டது. தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கும்பல் மீதான சொத்துக்குவிப்பு வழக்கை, தனது வழிகாட்டுதலைத் தானே மீறி 18 ஆண்டுகளாகத் தள்ளித் தள்ளி வைத்தது. அக்கும்பலின் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டபோதும், அவசர அவசரமாக உச்சநீதி மன்றம் தலையிட்டு, விதிவிலக்கு(!) என்றே சொல்லிக் கொண்டு, தாராளமான சலுகைகளுடன் பிணையில் விடுவித்தது.

ஜெயலலிதாவைப் போல, மமதாவைப் போல, ஜெகன் மோகன் ரெட்டியைப் போல, சரத் பவாரைப் போல, மாயாவதி-முலாயமைப் போல, லாலுவைப் போல, சௌதாலாவைப்போல, எடியூரப்பாவைப்போல, சந்திர பாபுநாயுடுவைப்போல ஏராளமான அரசியல்வாதிகள் இலஞ்ச-ஊழல், அதிகாரமுறைகேடுகளில் ஈடுபட்டுப் பல இலட்சம் கோடி ரூபாய் கள்ளப்பணத்தைக் குவித்து வைத்திருக்கிறார்கள். இவர்கள் மீது கிரிமினல் குற்றச்சாட்டுகள் வரும் போது அவை அரசியல் சதிகள் -சூழ்ச்சிகள், அரசியல் பழிவாங்குதல்கள் தாம் என்று கூறி, கூலிப் படையை வைத்துப் போராட்டங்களை ஏற்பாடு செய்கிறார்கள்.

**இந்திய அரசே ஏகாதிபத்தியங்களுக்குச் சேவை செய்கின்ற, ஒரு மிகப் பெரும் கார்ப்பரேட் கொள்ளை நிறுவனமாகிவிட்டது. பிரதமரே அதன் தலைமை நிர்வாக அதிகாரியாகவும், மாநில முதலமைச்சர்களே அதன் இயக்குநர்களாகவும் செயல்படுகிறார்கள்.**

நீதித்துறை, உளவுத்துறை, போலீசு ஆகிய மேலிருந்து கீழ் வரையிலான குற்றத் தடுப்பு - தண்டனை வழங்கும் அரசு அதிகார அமைப்புகளை இந்தக் கிரிமினல் குற்றவாளிகளே தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களிடம் உச்ச, உயர்நீதி மன்றங்களே தமது பொறுப்புகளைத் தட்டிக்கழித்துத் தாராளமாக நடந்து கொள்கின்றன. நீதிபதிகளே இலஞ்ச ஊழல், பாலியல் குற்றவாளிகளாக, கிரிமினல் குற்றக்கும்பல்களின் டவாலிகளாக இருக்கின்றனர்; நீதியே விற்பனை சரக்காகி - நீதித்துறையே நிர்வாணமாகி நிற்கிறது.

இந்திய அரசே ஏகாதிபத்தியங்களுக்குச் சேவை செய்கின்ற, ஒரு மிகப் பெரும் கார்ப்பரேட் கொள்ளை நிறுவனமாகிவிட்டது. பிரதமரே அதன் தலைமை நிர்வாக அதிகாரியாகவும், மாநில முதலமைச்சர்களே அதன் இயக்குநர்களாகவும் செயல்படுகிறார்கள். அம்பானி, அதானி, மிட்டல், பிர்லா, டாடா, ஜிண்டால் போன்ற பெரும் தரகு முதலாளிகள் அரசுப் பொதுச்சொத்துக்களைக் கொள்ளையடித்து, பல இலட்சக்கணக்கான கோடி ரூபாய் கருப்புப் பணத்தை அந்நியநாட்டு வங்கிகளில் குவித்துவைத்து ஹவாலா மோசடிகளில் ஈடுபடுகிறார்கள். சட்டமுறைப்படியான நடவடிக்கைகள் எடுத்தால் முதலீடுகளை முடக்கிவிடுவதாக மிரட்டுகிறார்கள். உள்நாட்டு, அந்நிய கார்ப்பரேட் நிறுவனங்களும், அவர்களின் பழைய, புதிய தரகு முதலாளிகளும் பெருமளவிலான கிரானைட், மணற் கொள்ளையிலும், கனிம வள, உலோகத் தாதுக் கொள்ளையிலும் ஈடுபட்டுக் காடுகளையும் மலைகளையும் நீர்நிலைகளையும் அழித்து நாட்டையே பாலைவனமாக்கி வருகிறார்கள்.

அதேசமயம், அரசு நிர்வாக அமைப்புகள், குறிப்பாக அவற்றின் அடக்குமுறை நிறுவனங்கள் நாட்டின் குடிமக்கள் அனைவரின் வாழ்க்கையிலும் தலையிட்டு ஒடுக்குவதாகவும், எங்கும் நீக்கமற நிறைந்து, வரைமுறையற்ற அதிகாரமும் ஆதிக்கமும் செலுத்துவதாகவும் உள்ளன. இராணுவம், துணை இராணுவம், போலீசு, உளவு அமைப்புகள், அதிகார வர்க்க அமைப்புகள் கிரிமினல் குற்றமிழைக்கும்போது, அவர்களைத் தண்டிப்பதற்கு உச்சநீதி மன்றமே அஞ்சுகிறது. அவர்களுக்கு எதிரான வழக்குகளில் விசாரணைகள் தரும் ஆதாரங்கள் இருந்தும், சட்ட நியதிப்படி நடந்து கொள்வதற்குப் பதில் சமரசமாக முடிவுகள் எடுக்கின்றது. குறிப்பாக, காஷ்மீர், வடகிழக்கு மாநிலங்கள், குஜராத் மற்றும் மாவோயிஸ்ட் இயக்கம் பரவியுள்ள மாநிலங்களில், இராணுவம், துணை இராணுவம், போலீசு, உளவு அமைப்புகள் ஆகிய நிறுவனங்கள் நடத்தும் போலி மோதல் கொலை வழக்குகளில் இதற்கான சான்றுகளைக் காணலாம். பயங்கரவாத, பிரிவினைவாத பீதி கிளப்பி மக்களுக்கு எதிராக கடுமையான பெருந்திரள் கண்காணிப்பு, அடக்குமுறைகள் ஏவி விடப்படுகின்றன. கிரிமினல் குற்றக் கும்பல்கள் - ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகள் - போலீசு மற்றும் அதிகார வர்க்கத்தினர் அடங்கிய முக்கூட்டு, சிவில் சமூகத்தின் மீது ஏறிமிதித்து, முற்று முழுதான ஆதிக்கம் செலுத்துகின்றது.

நாட்டின் பொருளாதாரமோ ஏகாதிபத்திய உலகப் பொருளாதாரத்தோடு பிணைக்கப்பட்டு, கடந்த பத்தாண்டுகளாக உற்பத்திப் பின்னடைவு, தேக்க-வீக்கம், அன்னிய செலாவணிப் பற்றாக்குறை, இந்திய நாணய மதிப்பு வீழ்ச்சி என்று மீளமுடியாதவாறு கடும் நெருக்கடிக்குள், சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டுவிட்டது. ஆலைமூடல், ஆட்குறைப்பு, கட்டணச்சுமையேற்றியும், விலைவாசியையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் விண்ணை முட்டுவதாக எகிறச் செய்தும், அரசே ஏழை-எளிய மக்களின் தலையிலேறி மிதிக்கின்றது. மக்களுக்கு கல்வி, அடிப்படைப் பொதுச் சுகாதாரம்- மருத்துவம், குடிநீர், கழிப்பிடம், குடியிருப்பு எல்லாம் கானல்நீராகவே உள்ளன. விவசாயிகள், மீனவர்கள், பழங்குடி மக்கள், நெசவாளிகள், கைவினைஞர்கள், சிறு வர்த்தகர்களின் வாழ்வாதாரங்கள் பறிக்கப்பட்டு, கார்ப்பரேட் தரகு முதலாளிகளின் ஆதாயத்துக்காக குவிக்கப்படுகின்றன.

ஒடுக்கப்படும் சாதியினர், மதச் சிறுபான்மையினர், பெண்கள் மீதான பாலியல் வக்கிரங்கள், வன்கொடுமைப் படுகொலைகள் கொஞ்சமும் சகிக்க

முடியாதவையாகி, கட்டுப்படுத்த முடியாதவையாகி, அநாகரிகத்தின் உச்சநிலையை எட்டிவிட்டன. சாதிவெறி, மதவெறி, பாலியல்வெறித் தாக்குதல்கள் காரணமாக மக்கள் தொகையில் முக்கால் பங்குக்கும் மேலானவர்கள் வாழத் தகுதியற்றதாக நாடு மாறிவிட்டது. ஒடுக்கப்படும் சாதியினர் மீது பேரதிர்ச்சி கொள்ளும் அளவிலான தாக்குதல்கள், மதச் சிறுபான்மையினர் மீது பாசிசப் பயங்கரவாதப் படுகொலைகள், பெண்கள் மீது அநாகரிகமான பாலியல் கொடூர வக்கிரங்கள் என்று நாடே தலைகுனியும் வன்கொடுமைச் சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நடக்கின்றன. அவற்றுக்கு வழமையான வழக்கு மன்றங்களில் நீதி கிடைக்காதென்பது உறுதியாகிவிட்டது. இயற்றப்படும் புதிய சிறப்புச் சட்டங்களும் அமைக்கப்படும் சிறப்புப் புலனாய்வுக் குழுக்களும் சிறப்பு விசாரணை ஆணையங்களும் சம்பந்தப்பட்ட வழக்குகளைக் கிடப்பில் போட்டு, ஊற்றி மூடுவதற்கான குறுக்கு வழிகளாகிவிட்டன. இந்த அக்கிரமங்கள், அநியாயங்களை எதிர்த்து ஒன்றும் செய்ய முடியவில்லையே, என்றும் எதையாவது செய்து இவை எல்லாவற்றையும் ஒழிக்க வேண்டும் என்ற கோபாவேசத்துடனும் மக்கள் குமுறுகின்றனர்.

இந்த அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகள் முற்றுவதன் வெளிப்பாடாக, மக்கள் தனித்தனிப் போராட்டங்களில் தன்னெழுச்சியாக ஈடுபடுவது பெரிதும் அதிகரித்து வருகின்றது. எனினும், அவர்கள் அவற்றுக்கிடையிலான ஒற்றுமையையும், தொடர்பையும் ஒருங்கிணைந்த முறையிலானவையாக தொகுத்துப் பார்க்க இயலாதவர்களாக இருக்கிறார்கள். அன்றாட வாழ்க்கைத் தேவைக்கான போராட்டங்களிலேயே அவர்கள் மூழ்கிக் கிடக்கிறார்கள். ஆளும் வர்க்கங்களும் ஊடகங்கள் மூலம் பல்வேறு வகைகளில் மக்களின் கவனத்தைச் சிதறடிக்கின்றன. தாது மணற்கொள்ளை, ஆற்று மணற்கொள்ளை, மீத்தேன் எரிவாயு எடுப்பு, எரிவாயுக் குழாய் அமைப்பு, காவிரி நீர் முதலான பல்வேறு தனித்தனிப் பிரச்சினைகளுக்காகத் தன்னெழுச்சியாகப் போராட்டங்களில் ஈடுபடும் மக்களிடம், அவற்றுக்கிடையிலான பொதுத் தன்மையையும் உறவையும் தொகுத்துப் பார்க்கவேண்டிய அவசியத்தையும், தனித்தனித் தீர்வுகளை நாடும் போராட்டங்களுக்குப் பதிலாக, புரட்சிகர அரசியல் தீர்வுகளைக் கொண்ட பொது முழக்கங்களை முன்வைத்துப் போராடவேண்டியதன் முக்கியத்துவத்தையும் புரியவைக்கவேண்டும்.

மோடி போன்றவர்கள் அன்றாடம் ஒரு சர்ச்சைக்குரிய பேச்சு அல்லது அறிவிப்பின் மூலம் மக்களிடையே விவாதத்திற்குரிய நிகழ்ச்சி நிரலை உருவாக்குகிறார்கள். பார்ப்பனப் பாசிசக் கும்பல் ஆத்திரமூட்டும் மதவெறி நடவடிக்கைகளின் மூலம் மறுகாலனியாக்க நடவடிக்கைகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திட்டமிட்டே திருப்புகிறது. அதே நேரத்தில் தனது பார்ப்பன பாசிச நடவடிக்கைகளுக்கு மக்களைப் பழக்கப்படுத்திப் பணியவும் வைக்கிறது. இதனை முறியடிக்கும் விதத்தில், நாடும் மக்களும் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் அனைத்துக்கும் காரணம், கட்டமைப்பு நெருக்கடியே என்ற ஒருங்கிணைந்த, முழுமையானதொரு பார்வையை மக்களுக்குக் கற்றுத்தருவதன் மூலம், புதிய, அவசியமான, விவாதத்திற்குரிய நிகழ்ச்சி நிரலை நாம் மக்கள் முன்பு வைத்திட வேண்டும்.

> “நாட்டின் அரசியல், பொருளாதார, சமூகக் கட்டமைப்பு நெருக்கடிகள் முற்றி ஓர் உச்ச நிலையை எட்டிவிட்டதை, அரசு மற்றும் ஆளும் வர்க்கங்கள் ஆளும் தகுதியை இழந்துவிட்டதை மக்களிடம் கொண்டு செல்வதுடன், ஆளும் வர்க்கங்களின் அதிகாரத்தைத் தட்டிக் கேட்கவும், அவர்களின் அதிகாரத்துக்கு சவால்விடவும் மக்களைத் திரட்டவேண்டும்.”

அதாவது, நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக கட்டமைப்பு நெருக்கடிகள் முற்றி ஓர் உச்ச நிலையை எட்டிவிட்டதை, அரசு மற்றும் ஆளும் வர்க்கங்கள் ஆளும் தகுதியை இழந்துவிட்டதை மக்களிடம் கொண்டு செல்வதுடன், ஆளும் வர்க்கங்களின் அதிகாரத்தைத் தட்டிக் கேட்கவும், அவர்களின் அதிகாரத்துக்கு சவால் விடவும் மக்களைத் திரட்ட வேண்டும். அதிகாரத்தை மக்கள் தாமே கையில் எடுத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த வேண்டும். ஆகவே, எல்லாச் சிக்கல்களுக்கும், கட்டமைப்பு நெருக்கடிக்குமான தீர்வின் தொடக்கமாக, மக்களின் அதிகாரத்தை மையப்படுத்துகின்ற ஒரு புதிய, அவசியமான பொது அரசியல் அரங்கத்தைக் கட்டி, முழக்கங்களை வகுத்து மைய இயக்கத்தை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதுதான் நாட்டின் இன்றைய அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளில் புரட்சிகர இயக்கத்திற்குரிய பொறுப்பும் கடமையுமாக இருக்கிறது.

ஆழமான விவாதத்திற்குப் பிறகு, உடனடிக் கடமை குறித்த இம்முடிவை ஒருமனதாக நிறைவேற்றி, மாநிலச் சிறப்புக் கூட்டம் புரட்சிகர எழுச்சியுடன் நிறைவுற்றது.

இவண்,

31.01.2015

செழியன்,
செய்தித் தொடர்பாளர்,
மாநில அமைப்புக் கமிட்டி,
இந்தியப் பொதுவுடைமைக் கட்சி
(மார்க்சிஸ்ட்- லெனினிஸ்ட்),
தமிழ்நாடு.

## இலங்கைத் தேர்தல்:

# இனவாதிகள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்!

**இலங்கை அதிபர் தேர்தலில், போர்க்குற்றவாளி இராஜபக்சேக்களின் வீழ்ச்சியோடு ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள், ஈழத்தமிழருக்கும் சிங்களவருக்கும் இஸ்லாமியருக்கும் சில உண்மைகளைச் சொல்லுகின்றன.**

இலங்கை அதிபர் தேர்தலில், சிங்கள இன வெறிப் போர்க் குற்றவாளிகளான இராஜபக்சேக்களின் வீழ்ச்சி மோடி, சோனியா போன்ற பாசிசக் கூட்டாளிகளுக்கும், இந்து ராம், சோ, சு.சாமி முதலிய கைக்கூலிகளுக்கும் அதிர்ச்சிகரமாகவும்; எஞ்சியுள்ள புலிகள், புலம்பெயர்ந்த புலி ஆதரவாளர்களுக்கும் இங்குள்ள தமிழினவாதிகளுக்கும் எதிர்பாராததாகவும் அமைந்தது. இலங்கை அரசியலில் இவ்வாறானதொரு மாற்றம் நிகழும் என்பது அவர்கள் அனைவரும் கனவிலும் எண்ணிப் பாராதது.

பிரபாகரனின் தற்கொலைப் போர்ப் பாதையைச் சாதகமாகக் கொண்ட சிங்கள இன வெறி பாசிச இராணுவம் விடுதலைப்புலிகளோடு இலட்சக்கணக்கான ஈழத்தமிழர்களை இனப்படுகொலை புரிந்து ஈழப் போரில் அடைந்த வெற்றியின் கவர்ச்சி மங்கிப்போவதற்கு முன்பு, பலனை மேலும் அறுவடை செய்துகொள்வது மற்றும் சோதிடர்களின் ஆரூடங்களையும் வைத்து அரசியல் கணக்குப்போட்டார், இராஜபக்சே. அவரது பதவிக் காலம் முடிவதற்கு இன்னும் இரண்டாண்டுகள் இருந்தபோதும், அதிபர் தேர்தலில் மூன்றாவது முறையாகப் போட்டியிட முடியாது என்றாலும், சட்டத்தைத் திருத்தி தேர்தலை எதிர்கொண்டார். சிங்கள இன வெறி புத்தச் சாமியார்களின் உருமயக் கட்சி, ஜே.வி.பி. உள்ளிட்ட போலி கம்யூனிஸ்ட் குழுக்கள், தமிழின - இசுலாமியத் துரோகிகளின் குழுக்களுக்கு அதிகார, பதவி எச்சிலையை வீசி, வளைத்துப்போட்டு சிறுபான்மையாக இருந்த அவரது சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியைப் பெரும்பான்மையாக உருவாக்கிக் கொண்ட இந்த சிங்கள இனவெறி பாசிச இராஜபக்சே கும்பல், இலங்கையில் அசைக்க முடியாத சக்தியாகத் தன்னைக் கருதிக் கொண்டது.

ஆனால், இராஜபக்சே கும்பல் மூன்றாவது முறை அதிகாரத்தைக் கைப் பற்றிக் கொண்டிருந்தால் ஈழத்தமிழர்கள் -இசுலாமியர் ஆகிய சிறுபான்மையினருக்கும் சிங்கள சமூகத்துக்கும் பேரழிவை விளைவித்திருக்கும். அக்கும்பல் நடத்தி வந்த ஜனநாயக விரோத, சட்டவிரோத, மக்கள் விரோத வெள்ளைவேன் ஆள்கடத்தல் - பாசிசக் கொலைவெறியும் இலஞ்ச-ஊழலும் அதிகார முறைகேடுகளும் நிரம்பி வழியும் இராஜபக்சேக்களின் குடும்ப அதிகாரத்தைக் கண்டு, இனங்களைக் கடந்து இலங்கை மக்களில் பெரும்பான்மையினர் அதற்கெதிராகக் குமுறிக் கொண்டிருந்தனர். இதனால்தான் முற்றிலும் எதிர்பாராத வகையில், மக்கள் ஆதரவு பெற்ற எதிர்த்தரப்பை அக்கும்பல் திடீரென்று தேர்தல் அரசியல் களத்தில் கண்டது.

இராஜபக்சே கும்பலின் சுகாதார அமைச்சராக இருந்த மைத்திரிபாலா சிறீசேனா வெளியேறினார். அவரோடு வெளியேறிய போட்டி சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரும் முதன்மை எதிர்க்கட்சி

இலங்கையின் புதிய அதிபர் மைத்ரிபாலா சிறீசேனா மற்றும் புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்கே.





யான ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டுச் சேர்ந்து புதிய ஜனநாயக முன்னணியை அமைத்தனர். அதன் பொது வேட்பாளரான மைத்திரிபாலா சிறீசேனா ஜாதிகா ஹெல உருமயா, ஜே.வி.பி. போன்ற சிங்கள இனவெறி அமைப்புகள், தமிழ் மற்றும் இசுலாமிய மக்கள் ஆதரவைப் பெற்று அதிபராகியுள்ளார். கொடுங்கோலன், போர்குற்றவாளி இராஜபக்சே கும்பல் வீழ்ந்தது. இலங்கையில் ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் நிலைநாட்டப்போவதாக வாக்குறுதியளித்த கட்சிகளின் கூட்டணி அரசு ஏற்பட்டுவிட்டது.

இதனால், இலங்கையின், ஈழத் தமிழர்களின் இனச் சிக்கலுக்கு தீர்வு ஏற்பட்டுவிடும் என்று மிகை நம்பிக்கை கொள்ள முடியாது. என்றாலும், இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்த அரசியல் மாற்றங்கள் சிங்களவருக்கும் இசுலாமியருக்கும் சில உண்மைகளைச் சொல்லுகின்றன. ஈழத்தமிழர்கள் மற்றும் இசுலாமியர்களின் வாழ்வுரிமைகளை அங்கீகரிக்கும்படி சிங்கள சமூகம் நிர்பந்திக்கப்பட்டிருக்கிறது. ஈழத்தமிழர்கள் மற்றும் இசுலாமியர்களின் ஆதரவில்லாமல், சிங்கள இனவெறி பாசிச சக்திகளின் கோரப்பிடியிலிருந்து விடுபடவும் தமது ஜனநாயக உரிமைகளைப் பெறவும் முடியாது. அதேசமயம், இலங்கையில் ஒரு ஜனநாயக ஆட்சியில்லாமல், சிங்கள மக்கள் மத்தியில் கணிசமான ஆதரவைப் பெறாமல் ஈழத் தமிழர்களும் இசுலாமியர்களும் தமது வாழ்வுரிமைகளைப் பெறவும் முடியாது.

ஈழத் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான முரண்பாடு எவ்வித மாற்றத்துக்கும் இடமில்லாதது; அவர்கள் எந்தவொரு புள்ளியிலும் ஒரு பொதுநோக்கில் ஒரே அணிவரிசையில் நிற்க முடியாது; சிங்கள மக்கள் அனைவரும் தங்களுக்குள் முரண்பாடுகளின்றி, வெவ்வேறு பிரிவுகளின்றி, எவ்வித மாறுதலுமின்றி முக்காலத்திலும் ஒரே வார்ப்பாக ஈழத்தமிழர்களுக்கு ஒரு பகை இனம்; அவர்களிடையே ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நட்புப் பாராட்டக்கூடிய சக்திகள் எவரும் கிடையாது - இவ்வாறான பார்வையையே மார்க்சியம் கற்றவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் தியாகு, மணியரசன் போன்ற தமிழினவாதிகளும் கொண்டிருக்கிறார்கள்.

எனவேதான், புலிகளின் போர் வெற்றி மட்டுமே ஈழச் சிக்கலுக்கான ஒரே தீர்வு என்று நம்பச் சொன்னார்கள். புலிகளின் அழிவுகளுக்குப் பிறகு ஏகாதிபத்தியமும் மற்றும் சர்வதேச சமூகமும்தான் ஈழத் தமிழர்களுக்கும் புலி ஆதரவாளர்களுக்கும் கதியென்று வழி சொன்னார்கள். இராஜபக்சேக்களின் அரசியல் வீழ்ச்சியும் ஈழத்தமிழர்களின் சில கோரிக்கைகளையேனும் ஏற்கும் சிறீசேனா-ரணில் அரசு அமைந்திருப்பதும், ஈழச் சிக்கலுக்கான தீர்வுகளை மாறாநிலையியல் பார்வையில் அணுகக்கூடாது என்பதை அவர்களுக்கு இடித்துரைக்கிறது. இந்த உண்மையை புதிய ஜனநாயகம் சொன்னபோதெல்லாம், தமிழினவாதிகள் எல்லோரும் நாம் ஈழத்தமிழர்களுக்கு எதிரானவர்கள் என்று அவதூறு செய்தார்கள்.

கனவு நொறுங்கிப் போன அதிர்ச்சியில்
சிங்கள இனவெறி பாசிச போர்க்குற்றவாளி
இராஜபக்சே.



2013 டிசம்பர் புதிய ஜனநாயகம் இதழில் பின்வருமாறு எழுதினோம்: தமிழினவாதிகள் தங்கள் இலட்சியமாகச் சொல்லிக்கொள்ளும் தமிழீழத் தனியரசு மீது அவர்களுக்கு உண்மையில் நம்பிக்கையோ, அக்கறையோ துளியும் கிடையாது. அதனால்தான் அதை அடையும் பாதையைப் பற்றியும், அதை அடைந்தாலும் தக்க வைத்துக் கொள்வது எப்படி என்பதைப் பற்றியும் பேச மறுக்கிறார்கள்.

ஒன்று, சிங்களப் பேரினத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தின் மூலம் பாசிச சிங்கள இராணுவத்தையும் அரசையும் வீழ்த்தி, தமிழீழத் தனியரசைப் பிரகடனம் செய்ய வேண்டும். பிரகடனம் செய்தால் மட்டும் போதாது; சர்வதேச சமூகம் இல்லையானாலும், பிற ஒரு சில நாடுகளாவது அதை அங்கீகரிக்க வேண்டும். இதற்காகத்தான் பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் முப்பது ஆண்டுகளாக நடந்தது. அதன் முடிவும் அனுபவமும் என்னவென்று அனைவரும் அறிவோம். மீண்டும் ஒரு படை கட்டி தமிழீழத் தனியரசுக்கான போர் கனவிலும் நடைபெறாது என்று சொல்லத் தேவையில்லை. (புலி ஆதரவாளர்களும் தமிழினவாதிகளும் புளுகித் திரிவது போல, தப்பித்துத் தலைமறைவாக உள்ள பிரபாகரனும் பிற புலிகளும் ஒருவேளை திரும்பி வந்து மீண்டும் ஈழ விடுதலைப் போர் தொடுக்கலாமோ என்னவோ).

இரண்டு, புலி ஆதரவாளர்களும் தமிழினவாதிகளும் திராவிடக் கட்சிகளும் முயற்சிக்கும் வகையில் இவர்கள் நடத்தும் போராட்டங்கள், விண்ணப்பங்கள் மூலம் அழுத்தம் கொடுத்து இந்திய அரசோ அல்லது இவர்களில் ஒரு பிரிவினர் நம்புவது போன்று மோடி பிரதமராகியோ இந்திய ஆட்சியாளர்களிடம் ஈழ ஆதரவு நிலை உருவாகி அல்லது அமெரிக்கத் தலைமையிலுள்ள சர்வதேச சமூகம் ஈழத் தமிழர்களின் துயரம் கண்டு நெக்

குருகிய பொதுவாக்கெடுப்புக்கான, அதாவது ஈழத்தமிழருக்குத் தன்னுரிமைக்கான வாய்ப்புக் கிட்டலாம்; அதாவது, இவர்கள் நடத்தும் வேட்டையில் கொம்புடன் கூடிய முயலைப் பிடிக்கலாம் என்கிறார்கள்.

மூன்று, சிங்களப் பேரினவாத, பௌத்த மதவெறி பாசிச இராஜபக்சே கும்பலை அதிகாரத்தில் இருந்து தூக்கி எறிந்து இலங்கையில் ஒரு ஜனநாயக அரசு அமைந்து, அது ஈழத் தமிழர்களின் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமையை ஏற்க வேண்டும். இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகளும் வர்க்க முரண்பாடுகளும் மிக வேகமாக முற்றி வரும் சூழலில் புலிப் பூச்சாண்டியைக் காட்டியே சிங்களப் பேரினவாத, பௌத்த மதவெறியில் சிங்கள மக்களை நீண்ட காலத்துக்கு பாசிச இராஜபக்சே கும்பல் தனது அதிகார ஆதிக்கத்தில் இருத்தி வைத்திருக்க முடியாது என்பதையே அங்குள்ள நிலைமைகள் தெளிவாகக் காட்டுகின்றன. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு சில ஆயிரம் வீரர்களையும் துருப்பிடித்த ஆயுதங்களையும் கொண்டிருந்த சிங்கள இராணுவம் இன்று நான்கு இலட்சம் வீரர்களையும் அதிநவீன ஆயுதங்களையும் கொண்ட முப்படைகளையும் பெற்று, உலகின் பெரிய இராணுவங்களில் ஒன்றாகி விட்டது. சிங்கள இராணுவம் மட்டுமல்ல, இலங்கை அரசின் எல்லா உறுப்புகளிலும் பாசிச இராஜபக்சே குடும்பக் கும்பலின் ஆதிக்கம் நிறைந்து விட்டது. அதற்கு எதிராகப் பெரும்பான்மையான சிங்கள மக்கள் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

> "இராஜபக்சேக்களின் அரசியல் வீழ்ச்சியும், ஈழத்தமிழர்களின் சில கோரிக்கைகளையேனும் ஏற்கும் சிறீசேனா–ரணில் அரசு அமைந்திருப்பதும், ஈழச் சிக்கலுக்கான தீர்வுகளை மாறாநிலையியல் பார்வையில் அணுகக்கூடாது என்பதைத் தமிழினவாதிகளுக்கு இடித்துரைக்கிறது."

ஆனால், அம்மக்கள் எவ்வளவு பெரிய மக்கள் சக்தியைத் திரட்டினாலும் ஈழத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் இசுலாமிய மக்கள் ஆதரவின்றி பாசிச இராஜபக்சே கும்பலின் அதிகார ஆதிக்கத்தை வீழ்த்த முடியாது. அதேபோல, சிங்கள உழைக்கும் மக்களின் ஆதரவின்றி ஈழத்தமிழர்களும், மலையகத்தமிழர்களும், இசுலாமியர்களும் என்னதான் போராடினாலும் தமது உரிமைகளைப் பெறவும் முடியாது. இது யாருடைய விருப்பங்களுக்கும் அப்பாற்பட்ட புறநிலை எதார்த்தம். நாம் கூறுவது, ஆளும் வர்க்கங்கள் சொல்லுவதைப் போல சரண்டலுக்கான, அம்மக்களை ஒடுக்கி வைப்பதற்கான சமனற்ற கட்டாய ஒற்றுமையல்ல. சம உரிமை அடிப்படையிலான, ஜனநாயக முறையிலான ஒற்றுமை. பாசிச இராஜபக்சே குடும்பக் கும்பல் ஆதிக்கத்தைத் தூக்கியெறிவதற்கான போராட்டத்தில் பங்குபற்றியதற்கு ஈடாகவும் முன்நிபந்தனையாகவும் ஈழத் தமிழர்களும், மலையகத் தமிழர்களும், இசுலாமியர்களும் தமது உரிமைகளாகக் கோர முடியும். இதைத்தான் ஈழத்தமிழர்கள் உட்பட இலங்கையின் அனைத்து முற்போக்கு, ஜனநாயக சக்திகள் (அவை சிறியவையானாலும்) தமது பாதையாகத் தெரிந்தெடுத்துக் கொண்டு, இயக்கங்களைக் கட்டமைத்து வருகிறார்கள். இவ்வாறான பாதையைத்தான் ம.க.இ.க.-வினர் ஆதரிக்கின்றனர்.

ஆனால், இதெல்லாம் நடைமுறை சாத்தியமற்றவை, சிங்கள வருக்குச் சாதகமானவை, தமிழீழத் தனியரசை நிராகரிப்பதற்குச் சொல்லப்படும் சாக்குப்போக்குகள் என்று தமிழினவாதிகள் வாதிடுகின்றனர். இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில், இத்தனைக்கும் பிறகு, சிங்கள அரசு ஈழத் தமிழர்களின் உரிமைகளைச் சிறிதும் ஏற்க மறுக்கும் நிலையில், எஞ்சிய பல்லாயிரம் ஈழத் தமிழர்களும் முள்வேலி முகாமுக்குள், இராணுவக் கொடுங்கோன்மையின் கீழ் வதைபடும் நிலையில் தமிழீழத் தனியரசுக்கும் குறைவான எதையும் பேசுவது துரோகம் என்று குதிக்கிறார்கள்.

தமிழினவாதிகள் மேலே தொகுத்துச் சொல்லும் இதே நிலைமைகளின் காரணமாகத்தான், பாசிச இராஜபக்சே கும்பலை அதிகாரத்தில் இருந்து வீழ்த்தாமல் ஈழச் சிக்கலில் ஒரு அடி கூட முன்வைக்க முடியாது; அதைத் தூக்கி எறிந்து, சிங்கள-ஈழத் தமிழ் பாட்டாளி மக்களின் தலைமையில் இலங்கையில் ஒரு புதிய ஜனநாயக அரசு அமைப்பது; அதை நிறைவேற்றுவதன் மூலம் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமையைப் பெறுவது என்ற பாதையைச் சரியானதென்று முன்வைக்கப்படுவதை ம.க.இ.க. வினர் ஏற்கின்றனர்.

இவ்வாறு தெளிவாகச் சொன்ன பிறகும் ம.க.இ.க. வினர் ஈழத்துக்கு எதிரானவர்கள் என்று தமது அவதூறுகளைத் தமிழினவாதிகள் தொடர்ந்தனர். ஆனால், இப்போதைய இலங்கையின் அரசியல் மாற்றங்களைச் சாக்கு வைத்து, தேசிய சுயநிர்ணய உரிமையைக்கூட கைவிட்டு அதிகாரப் பகிர்வு, 13-வது சட்டத்திருத்தம் ஆகியவற்றுக்குள் சுருங்கிக் கொள்கிறார்கள். இனியாவது பகுத்தறிவுக்குப் பொருந்தாத தீர்வுகளையும் குறுகிய இனவாதங்களையும் கைவிட்டு, எதார்த்த அரசியல் நிலைமைகளையும் எதிரிகளையும் நட்பு சக்திகளையும் சரியாக மதிப்பிட்டு, ஈழத்மிழினத்துக்கான தன்னுரிமையுடன் கூடிய புதிய ஜனநாயகத்துக்கான இயக்கங்களை முன்னெடுக்க வேண்டும்.

● ஆர்.கே.

### திருச்செங்கோடு பெண்களை இழிவுபடுத்துவது எது?

# மாதொருபாகன் கூறும் மரபா? ஆணாதிக்க - கவுண்டர் சாதிப் பண்பாடா?

**மாதொருபாகன் நாவலுக்கான எதிர்ப்பு கொங்கு வேளாளக் கவுண்டர் சாதி உணர்விலிருந்து பிறந்து, ஆர்.எஸ்.எஸ். துணையுடன் திருச்செங்கோடு இந்துக்களின் 'மான'ப் பிரச்சினையாக மாற்றப்பட்டது.**

**மா**தொருபாகன் நாவலுக்கு எதிராக கொங்கு வேளாளக் கவுண்டர் சங்கத்தினரும், ஆர்.எஸ்.எஸ்.காரர்களும் இணைந்து அரங்கேற்றிய காலித்தனங்களும், சாதி, மத வெறியர்களுடன் கைகோர்த்து நின்று மக்கள் முதல்வர் அம்மாவின் அரசு, பெருமாள்முருகனுக்கு எதிராக நடத்திய கட்டைப் பஞ்சாயத்தும் அப்பட்டமான பாசிச நடவடிக்கைகள் என்பதை விளக்கத்தேவையில்லை. கொங்கு வேளாளக் கவுண்டர் சாதி உணர்விலிருந்து பிறந்து, ஆர்.எஸ்.எஸ். துணையுடன் திருச்செங்கோடு இந்துக்களின் உணர்வாக மாற்றப்பட்ட இந்த 'மானப்பிரச்சினையில்' திருச்செங்கோடு பகுதியில் நடத்தப்பட்ட கடையடைப்பும், 'போராட்டங்களும்' தவிர்க்க இயலாமல் நமக்கு வடிவேலுவின் பிரபல நகைச்சுவைக் காட்சியொன்றைத்தான் நினைவூட்டுகின்றன.

''கடவுளைக் காட்டுகிறேன்'' என்று வசூல் வேட்டை நடத்திய வடிவேலுவிடம் பணத்தைக் கொடுத்த மக்கள், ''கடவுளைக் காட்டு'' என்று கேட்க, ''யாருடைய பெண்டாட்டியெல்லாம் பத்தினியோ, அவிங்க கண்ணுக்கு மட்டும்தான் கடவுள் தெரிவார்'' என்று சொல்லிவிட்டு, பக்திப் பரவசத்துடன் இறைவா என்று கூவியபடியே வானத்தைப் பார்த்து கன்னத்தில் போட்டுக் கொள்வார் வடிவேலு. உடனே மானத்துக்கு அஞ்சி எல்லோரும் வானத்தைப் பார்த்து கன்னத்தில் போட்டுக்கொள்வார்களே, அந்த நகைச்சுவைக் காட்சிதான் நினைவுக்கு வருகிறது. அந்தப் படத்தின் பெயர் பண்ணாரி அம்மன் என்று நினைவு! இதே கொங்கு வட்டாரத்தின் தெய்வம்தான்!

''நம்ம பெண்களை ஒழுக்கம் கெட்டவர்கள் என்று பெருமாள்முருகன் எழுதிவிட்டான், கடையை அடைக்கிறாயா, இல்லையா?'' என்று சாதிச் சங்கத்துக்காரன் கேட்கும்போது, பொண்டாட்டி பத்தினியாக இருக்கும்பட்சத்தில் யாரொருவனும் கோவப்பட்டு கடையை அடைத்துத்தானே ஆகவேண்டும். இல்லையென்றால் பெண்டாட்டியின் கற்பைச் சங்கத்துக்காரன் அல்லவா சந்திக்கு இழுப்பான்! நாவலுக்கு எதிராக திருச்செங்கோட்டில் உருவாக்கப்பட்ட பொதுக்கருத்து என்பது இப்படித்தான் உருவாகியிருக்கிறது, அல்லது உருவாக்கப்பட்டிருக்கிறது.

சமீபத்திய தொலைக்காட்சி விவாதமொன்றில் கவுண்டர் சங்கத்துக்காரர் (எழுச்சி பெற்ற இந்துவாகவும் இருக்கலாம்) ஒருவர் இப்படி பேசினார். ''நாலு வருசமாக கொழந்தை இல்லாத தம்பதி. பொண்ணுக்கு திருச்செங்கோடு. திருவிழாவுக்குப் போய்ட்டு வந்ததும் கர்ப்பமாயிருக்கு. புருசன் சந்தேகப்படுறான். இதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்'' என்று கோபாவேசமாக கேட்டார். ஒரு கதையைப் படித்துவிட்டு 4 வருசம் குடும்பம் நடத்திய மனைவியின் நடத்தையை சந்தேகப்படுகிறான் கணவன் எனும்போது, அவன் மீதுதான் கோபப்பட வேண்டும் என்று அந்த எழுச்சி பெற்ற இந்துவுக்குத் தோன்றவில்லை. கர்ப்பிணி சீதையைச் சந்தேகப்பட்டு காட்டுக்குத்துரத்திய ராமனைத் தேசிய நாயகனாகக் கொண்டாடும் கூட்டமல்லவா?

மாதொருபாகன் நாவலை எழுதிய எழுத்தாளர் பெருமாள்முருகன்.



ஒருமுறை நாகப்பட்டினத்தில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டின் போது பெரியாரை அவமானப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு, ''நாகம்மை தேவடியாள்'' என்று ஊர் முழுவதும் சுவரில் எழுதியிருந்தார்களாம் ஆஸ்திக மெய்யன்பர்கள். இதைக் கண்டு கொதித்துப் போன தொண்டர்களை அடக்கிய பெரியார், ''நாகம்மை பத்தினி என்று கூறக் கேட்டால் மகிழ்ச்சி அடைபவனாக இருந்தால்தானே, அவரைத்

தேவடியாள் என்று சொல்வதைக் கேட்டு நான் கோபப்படுவதற்கு? போய் வேலையைப் பாருங்கள்!'' என்றாராம். அப்படிப்பட்ட பெரியார் பணியாற்றிய மண்ணில்தான் இன்று இத்தகைய சாதி, மதவெறிச் சக்திகள் ஆட்டம் போடுவதைப் பார்க்கிறோம். நடைபெற்ற செய்திகள் வாசகர்களுக்குத் தெரியுமாதலால் விசயத்துக்கு வருவோம்.


சாதி, மதவெறியர்களுடன் கைகோர்த்துக் கொண்டு மக்கள் முதல்வர் அம்மாவின் அரசு, எழுத்தாளர் பெருமாள்முருகனுக்கு எதிராக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்திய கட்டப் பஞ்சாயத்து.

சாதிய சமூகத்தில் குழந்தைப் பேறின்றித் தவிக்கும் கொங்கு வேளாளக் கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த ஒரு தம்பதியரின் துயரத்தைப் பேசுகிறது மாதொருபாகன் கதை. சாதிய, ஆணாதிக்க சமூக அமைப்பில் குழந்தையில்லாத பெண்கள் அனுபவிக்கும் சித்திரவதைகள் நாம் அறியாததல்ல. மலட்டுத் தன்மை ஆணுக்கா, பெண்ணுக்கா என்று அறிய முடியாத சவுகரியத்தால், சமீப காலம் வரையில் பெண்தான் மலடி எனத் தூற்றப்பட்டாள். கணவன் இரண்டாம் தாரம் கட்டி விடுவானோ என்று பெண் அஞ்சவேண்டியிருந்தது. ஆணோ, தான் ஆண்மை உள்ளவன் என்று நிரூபிக்கவேண்டியிருந்தது. இந்தப் பின்புலத்தில் பெண்ணினத்துக்கு இழைக்கப்படும் அநீதிகள் எண்ணிலடங்காதவை. கேட்கக் கூசுபவை.

மேற்கூறிய கதையிலும்கூட பொன்னாள் என்ற அந்தப் பெண் மலடி என்ற துயரத்துக்கு ஒரு தீர்வு தேடித் தான் திருவிழாவுக்குப் போகிறாளேயன்றி, காமக் கிளர்ச்சிக்கு ஆட்பட்டுச் செல்லவில்லை. அதுவும் அவளாகச் செல்லவில்லை. குடும்பத்தால் அனுப்பப்படுகிறாள். கதையின்படி திருவிழாவுக்கு வருகின்ற இளைஞர்கள் தான், பெண்களைக் குறி வைத்து வருகிறார்கள். பொறுக்க வருகிறார்கள் என்றும் சொல்லலாம்.

சொல்லப்போனால், ''எங்க ஊர் (அல்லது சாதி) ஆண்களை பெருமாள்முருகன் பொம்பள பொறுக்கிகளாக எப்படிச் சித்தரிக்கலாம்?'' என்றுதான் ஈசுவரன் கட்சிக்காரர்கள் கோபப்பட்டிருக்க வேண்டும். அப்படி ஒரு ஆள் கூடக் கோபப்படவில்லை என்பதுதான் நாம் கவனிக்க வேண்டிய விசயம். ஒரு ஆம்பிளை தனது ஆம்பிளைத்தனத்துக்காகப் பெருமைப்படத்தனே முடியும்? ஒருவேளை, ''நாவல் கூறும் காலத்தில் நாம் வாழாமல் போனோமே'' என்று ஏங்கியும் இருக்கலாம்.

இவர்களுடைய கவலை தங்கள் தூய்மை பற்றியதோ, தங்கள் குலப் பெண்டிரின் தூய்மை பற்றியதோ அல்ல. தங்கள் சாதியின் தூய்மை பற்றியது.

''தன்னுடைய மனைவி யாரேனும் ஒரு தீண்டாச் சாதிக்காரனுடன் சேர்ந்து விட்டால் என்ன செய்வது?'' என்பதுதான் நாவலில் அந்தப் பெண்ணுடைய கணவன் வெளிப்படுத்தும் கவலை. ஈசுவரன் கட்சிக்காரர்களுடைய கவலையும் அதுதான். அதனால்தான் ஆதாரம் கேட்கிறார்கள். திருவிழாவில் அப்படி ஒரு மரபு இருந்தது என்று நிரூபிக்கச் சொல்வதன் மூலம் சாதித் தூய்மை குறித்து தாங்கள் பரப்பி வரும் பொய்மைகளை உண்மையெனக் காட்ட முயற்சிக்கிறார்கள்.

''திருச்செங்கோட்டில் அப்படி ஒரு மரபு இருந்ததற்கு என்ன ஆதாரம்?'' என்று கேட்டு கொந்தளிப்பவர்கள், தங்களது சாதியின் வரலாற்றை, சாதித் தூய்மைக்கான ஆதாரத்தை மரபணுச் சோதனை மூலம் நிரூபித்துக் காட்டுவார்களா? நிரூபிக்க முடியாது. ஆகவே, சாதியின் தூய்மையை எங்கே, எப்படித் தொலைத்தார்கள் என்பதற்கு அவர்கள்தான் விளக்கமளிக்க வேண்டும்.


தமிழகத்திலும் இந்தியாவிலும் உள்ள இத்தனை ஆயிரம் சாதிகளில், ஒவ்வொரு சாதியும் எப்படி, எந்த தேதியில் உருவாகின? அவற்றின் வரலாறு என்ன? யாராவது சொல்ல முடியுமா? ஆரிய - திராவிட இனக் கலப்பு ஏற்பட்டே நூற்றாண்டுகள் பல கடந்து விட்டன. வரலாறு முழுவதும் பல்வேறு போர்களில் கவர்ந்து கொண்டு செல்லப்பட்ட பெண்கள், பஞ்ச காலங்களில் இடம்பெயரும்போது ஏற்பட்ட சாதிக்கலப்புகள், சாதிய சமூகத்தின் ஜனநாயக மறுப்பின் காரணமாக இன்றைக்கும் கிராமப்புறங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் கள்ள உறவுகள்... என சாதித்தூய்மை என்ற பித்தலாட்டத்தை நிராகரிப்பதற்கான ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன. அவ்வளவு ஏன், வெள்ளைக்காரன் நம் நாட்டை ஆண்ட ஒப்பீட்டளவில் குறுகிய காலத்திற்குள்ளேயே கலப்பு ஏற்பட்டு, ஆங்கிலோ இந்தியர்கள் என்றொரு புதிய பிரிவினர் நாடு முழுவதும் உருவாகி விட்டார்கள் எனும்போது, இத்தனை ஆயிரம் ஆண்டுகளில் நடந்திருக்க கூடிய சாதிக்கலப்பு, இனக்கலப்பு பற்றிச் சொல்லவா வேண்டும்?

சாதித்தூய்மை கிடையாது என்பதும் அதை நிலைநாட்ட முடியாது என்பதும், அவர்களுக்கும் தெரியும். அதனால்தான் பிளேட்டைத் திருப்பிப் போட்டு தமது பெண்களின் கற்புக்காகக் குமுறிக் கொந்தளிக்கிறார்கள். கற்பின் பின்னால் ஒளிந்து கொண்டு இல்லாத சாதித் தூய்மை குறித்து தம் சாதிக்காரர்களுக்கு வெறியூட்டுகிறார்கள். வேறு எந்த வழியிலும் சொந்த சாதி உழைக்கும் மக்களின் மதிப்பையோ நம்பிக்கையையோ பெற முடியாத இந்த சாதிச் சங்கத் தலைமைகள், தமது சாதியினர் மீது செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்ளப்

பயன்படுத்தும் தந்திரம் இது. இவர்களுடைய கவலை கற்போ, தூய்மையோ அல்ல. ஆதிக்கம்!

எம்.எஸ். சுப்புலட்சுமி கதையை எடுத்துக் கொள்வோம். அவர் இசை வேளாளர் சமூகத்துப் பெண் என்பதற்காக துவக்க காலத்தில் அவரை மட்டம் தட்டிய பார்ப்பனர்கள், பிற்காலத்தில் அவர் ஒரு பார்ப்பனரை மணந்து, பார்ப்பனியத்துக்குத் துதி பாடி, மன்னனைவிடப் பெரிய ராஜ விசுவாசியாகத் தன்னை நிரூபித்துக் கொண்டதால், அவருக்கும் மடிசார் கட்டிவிட்டு, மாமி கணக்கில் சேர்த்து விட்டார்கள்.

வன்னிய சாதியில் சாதாரணக் குடும்பத்தில் பிறந்த திவ்யாவைப் போன்றவர்களுக்கு சாதி நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்றாகத் தெரிகிறது. ஆனால் வன்னியர், கவுண்டர், தேவர் உள்ளிட்ட ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த கல்வி வள்ளல்கள், கந்து வட்டிக்காரர்கள், காண்டிராக்டர்கள், அதிகார வர்க்கத்தினர், நீதிபதிகள், அறிவுஜீவிகள் ஆகியோருக்கு தங்களுடைய சமூக, பொருளாதார, அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள சாதி தேவைப்படுகிறது. அதனால்தான் மாதொருபாகன் நாவல் தமிழில் வெளி வந்த போது எழும்பாத பிரச்சினை, ஆங்கில மொழி பெயர்ப்பு வெளிவந்தவுடன் வந்திருக்கிறது. எங்கேயாவது சிலிக்கான் வேலியில் செட்டில் ஆகியிருக்கும் சின்னக் கவுண்டர்களின் மனம் புண்பட்டிருக்கும்.



மறைந்த ஆர்.எஸ்.எஸ்.இன் சித்தாந்த குரு கோல்வால்கர்

நத்தம் காலனியைக் கொளுத்திய கையோடு, சாதிக் கட்சிகளின் கூட்டணியை உருவாக்கி திராவிட இயக்கத்தை ஒழிக்கப்போவதாக ராமதாசு அறிவித்தபோது, அதற்கு முந்திக் கொண்டு ஆதரவு கொடுத்தது கொங்கு வேளாளக் கவுண்டர்களின் கட்சி. அ.தி.மு.க.-வின் ஓட்டு வங்கியும், ஆர்.எஸ்.எஸ்.-இன் செல்வாக்குப் பகுதியும், தமிழகத்திலேயே அதிக கிராமங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனிக்குவளை வைத்திருப்பதும் கொங்கு மண்டலம்தான். அதே நேரத்தில் ‘‘வன்கொடுமைச் சட்டத்தால் தாங்கள் அநியாயமாகப் பாதிக்கப்படுவதால், அந்த சட்டத்தையே நீக்க வேண்டும்’’ என்று மூர்க்கமாக குரல் கொடுப்பதும் இக்குறிப்பிட்ட சாதியினர்தான். திருச்செங்கோட்டில் பெருமாள்முருகனுக்கு எதிராக அரசே முன்நின்று நடத்திய கட்டப் பஞ்சாயத்தையும், கடையடைப்பு போன்ற நடவடிக்கைகளையும் இந்தப் பின்புலத்திலும் புரிந்து கொள்ளவேண்டும்.

மீண்டும் மாதொருபாகன் கதைக்கு வருவோம். கடந்த 20 ஆண்டுகளாக நம் நாட்டின் மீது திணிக்கப்பட்டு வரும் ‘‘தொழில் வளர்ச்சியும்’’ அது தோற்றுவித்திருக்கும் வாழ்க்கையும், நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினரிடையே குழந்தைப் பேறின்மையை அதிகரித்திருக்கிறது. கருத்தரிப்பதற்காக மாதொருபாகன் நாயகியைக் காட்டிலும் கொடிய துன்பங்களுக்குப் பெண்கள் ஆளாக்கப்படுகிறார்கள். கருத்தரிப்பதற்காக திருவிழாவுக்குப் போன பொன்னாள் அனுபவிக்கும் பதற்றத்தை விடவும் அதிகமான பதற்றத்தை, தங்கள் சொந்தப் படுக்கையறையிலேயே அனுபவிக்கிறார்கள் பெண்கள்.

குழந்தைப் பேறின்மைக்கு ஆண் மலட்டுத்தன்மையும் குறிப்பிடத்தக்க காரணமாக இருக்கிறது. இதற்கு என்ன செய்வது? அறிவியல் முன்னேறிவிட்டதால் திருச்செங்கோடு திருவிழாவுக்குப் பதிலாக விந்து வங்கிகள் வந்து விட்டன. இந்த வங்கிகளில் தமது விந்துவை காசுக்கு விற்பவர்கள் பெரும்பாலும் மாணவர்கள், இளைஞர்கள். விந்துவை வாங்க வருபவர்கள் (அதாவது பெண்ணின் கணவன் மற்றும் குடும்பத்தினர்) விந்துவுக்குரிய இளைஞனின் நிறம், உயரம், ஆரோக்கியம், கல்வித் தகுதி ஆகியவற்றை மட்டுமல்ல சாதியையும் கேட்கிறார்கள். தன்னுடைய சாதிக்காரனின் விந்துவாக இருக்க வேண்டும் என்பதை உத்திரவாதம் செய்து கொள்கிறார்கள் என்கிறார், பாட்னா நகரில் ஃபுரோசன் செல் (Frozen cell) என்ற விந்து வங்கியை நடத்தும் டாக்டர் சவுரவ் குமார். ‘‘இனிமேல் பிராமின், பூமிகார், யாதவ், ராஜ்புத் என்று சோதனைக் குழாய்களில் எழுதி ஒட்ட வேண்டியதுதான் பாக்கி. அந்த அளவுக்கு பைத்தியம் பிடித்து அலைகிறார்கள்’’ என்கிறார்

> “எந்த சாதியைச் சேர்ந்த பெண்ணாக இருந்தாலும், அவளுடைய முதல் பிள்ளைக்கு ஒரு நம்பூதிரிதான் அப்பனாக இருக்கவேண்டும். அதற்குப் பின்னர்தான் அவளுடைய கணவனின் மூலம் அவள் மற்ற பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற விதி இருந்தது. இதனை ஒழுக்கக்கேடு என்று கூற முடியாது.”
> – கோல்வால்கர்.

இன்னொரு மகப்பேறு மருத்துவர். (செய்தி-பிறப்பதற்கு முன்னரே தொடங்குகின்றன சாதிப்பிரிவுகள், நியூயார்க் டைம்ஸ், ஜூலை 12, 2012)

இந்தக் கேவலத்தைக் காட்டிலும், மாதொருபாகன் கூறும் அந்தத் திருவிழா மரபு மிகவும் நாகரிகமான வழி முறையாகத் தெரியவில்லையா? ''இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கமிட்டிருக்குதோ?'' என்று நவீன அறிவியல் வளராத அந்தக் காலத்தில் கேட்டார் சிவ வாக்கிய சித்தர். அறிவியலின் துணை கொண்டு சாதியை நிலைநாட்டிக் கொள்ள விரும்பும் வெறியர்கள், ''இலக்கமிடு'' என்று சமூகத்தை மிரட்டுகிறார்கள். சாதி வாரியாக கல்லூரி தொடங்கியிருக்கும் இந்த வர்க்கம், விந்து வங்கிகளையும் சாதிவாரியாகத் தொடங்க வாய்ப்பிருக்கிறது.

இப்பிரச்சினையில் கொங்கு வேளாளக் கவுண்டர் சங்கத்துடன் இராம. கோபாலனும் கைகோர்த்துக் களத்தில் நிற்பதால், மேற்படி பிரச்சினை குறித்து, ஆர்.எஸ்.எஸ்.-இன் சித்தாந்தத் தலைவரான கோல்வால்கர் முன்வைத்திருக்கும் அரிய கருத்தினைக் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்வோம். குஜராத் பல்கலைக்கழகத்தின் சமூக அறிவியல் துறை மாணவர்கள் மத்தியில், தனது ஆரிய இனவெறிக் கோட்பாட்டை முன்வைத்து டிச, 17, 1960 அன்று கோல்வால்கர் ஆற்றிய உரையின் பகுதி இது.

''இன்று கலப்பினங்களை உருவாக்கும் சோதனைகள் விலங்குகளின் மீதுதான் செய்யப்படுகின்றன. அத்தகைய சோதனைகளை மனிதர்கள் மீது செய்து பார்க்கும் தைரியம், நவீன விஞ்ஞானிகள் என்கிறார்களே, அவர்களுக்குக்கூட இல்லை. இன்று மனிதர்களிடையே கலப்பினத்தை நாம் காண்கிறோம் என்றால், அது அறிவியல் சோதனையின் விளைவல்ல, கீழ்த்தரமான காமத்தின் விளைவு. இந்த விசயத்தில் நமது முன்னோர்கள் செய்திருக்கும் சோதனைகளை நாம் பார்ப்போம். கலப்பினச் சேர்க்கை மூலம் மனித இனத்தை மேம்படுத்தும் பொருட்டு, வடநாட்டைச் சேர்ந்த நம்பூதிரி பிராமணர்கள் கேரளத்தில் குடியமர்த்தப்பட்டனர். நம்பூதிரி குடும்பத்தின் முதல் மகன் வைசிய, சத்திரிய அல்லது சூத்திரப் பெண்ணைத்தான் மணக்க வேண்டும் என்ற விதி அன்று உருவாக்கப்பட்டது. இதைவிடத் தைரியமான இன்னொரு விதி என்னவென்றால், எந்த வர்க்கத்தைச் (சாதியையும் மொ-ர்) சேர்ந்த திருமணமான பெண்ணாக இருந்தாலும், அவளுடைய முதல் பிள்ளைக்கு ஒரு நம்பூதிரிதான் அப்பனாக இருக்க வேண்டும். அதற்குப் பின்னர்தான் அவளுடைய கணவனின் மூலம் அவள் மற்ற பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற விதி இருந்தது. இன்றைக்கு இந்தப் பரிசோத னையை ஒழுக்கக்கேடு என்று கூறுவார்கள். இந்த விதி முதல் குழந்தைக்கு மட்டும்தான் என்பதால் அதனை ஒழுக்கக் கேடு என்று கூற முடியாது. (''எம்.எஸ்.கோல்வால்கர், ஆர்கனைசர், ஜனவரி-2, 1961, பக்கம்-5)

*(2004 ஆம் ஆண்டில் கோல்வால்கரின் எழுத்துகளை 12 தொகுதிகளாக வெளியிட்ட ஆர்.எஸ்.எஸ்., 5 - வது தொகுதியில் 28-32 பக்கங்களில் இடம்பெற்றுள்ள இந்த உரையிலிருந்து மேற்கண்ட வரிகளை சத்தம் போடாமல் நீக்கிவிட்டது. ஆனால் என்ன செய்வது, நூலகங்களிலிருந்து ஆர்.எஸ்.எஸ். இன் அதிகாரபூர்வ ஏடான ஆர்கனைசர் பத்திரிகையை இதுவரை நீக்க முடியவில்லை)*

கோல்வால்கர் குறிப்பிடும் இழி மரபை ஒழிக்கத்தான் பெரியார் போராடினார். பெரியாரையும் திராவிட இயக்க மரபுகளையும் ஒழிக்க வேண்டும் என்பதைத் தமது கொள்கையாக கொண்டிருக்கும் கொங்கு வேளாளக் கவுண்டர் சங்கத்தினரும் பிற சாதி சங்கத்தினரும், பா.ஜ.க.-வுடன் கூட்டணி வைத்திருக்கிறார்கள். வெறும் கூட்டணி போதுமா? கோல்வால்கர் கூறும் நமது பெருமைமிகு ஹிந்து பாரம்பரியத்தையும், மோடியால் விதந்தோதப்படும் ஹிந்து ஞானமரபையும் பின்பற்ற வேண்டாமா?

மற்றெல்லா வகையிலும் பார்ப்பனமயமாக்கத்தை ஏற்றுக் கொள்ளும் இவர்கள், கோல்வால்கர் சொல்லும் இந்த வழியைக் கடைப்பிடிப்பதற்கு மட்டும் கூச்சப்படத் தேவையில்லை. கோல்வால்கரின் மேற்கண்ட உரையை ஆயிரக்கணக்கில் அச்சடித்து, திருச்செங்கோடு மக்களிடையே வழங்கட்டும். எந்த மரபு தங்களை இழிவு செய்கிறது என்பதை அம்மக்கள் அதற்குப் பின்னர் தீர்மானிக்கட்டும்.

● மருதையன்

## கருத்துரிமையும் கருத்து கூறாமலிருக்கும் உரிமையும்!

பெருமாள்முருகனுக்கு ஆதரவு தெரிவித்த பல இலக்கியவாதிகள், சாதிய, இந்துவெறி அமைப்புகளின் வன்முறை குறித்து மிகவும் மேலோட்டமான கண்டனத்தையே தெரிவித்திருந்தனர். சாதித்தூய்மை என்ற கருத்தின் பின்னால் ஒளிந்திருக்கும் சாதிவெறியையும், இந்து மதவெறியையும் நேருக்கு நேர் தாக்கி அம்பலப்படுத்தாமல் ஒளிந்து கொள்ள விரும்பியவர்களுக்கு கருத்துரிமை என்பது பாதுகாப்பான கவசமாகப் பயன்பட்டது. அதாவது, பெருமாள்முருகனின் கருத்துரிமைக்காக குரல் கொடுத்த அதே நேரத்தில், தங்களுடைய கருத்து கூறாமல் இருக்கும் உரிமையை அவர்கள் பாதுகாத்துக் கொண்டார்கள் என்றே கூற வேண்டும்.

இலக்கியத்தளத்துக்கு வெளியே அரசியல்ரீதியில் சாதி ஒழிப்பு, பொதுவுடைமைக் கருத்தியலில் இயங்குபவர்கள் தான், மாதொருபாகன் என்ற இலக்கியம் தோற்றுவித்த சமூக எதிர்விளைவுக்கு முகம் கொடுத்தார்கள். தங்களுக்கு எதிரான எந்த உண்மையையும் வெளியிட அனுமதிக்க மாட்டோம் என்று சாதி, மதவெறியர்கள் ஆர்ப்பரிக்கும் சூழலிலும், இலக்கியவாதிகளுக்கு அரசியல் கூடாது எனப் பேசுவது, அவர்களுக்கு வழங்கும் மறைமுக ஆதரவு என்பதைப் படைப்பாளிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

# பா.ஜ.க. - அகாலிதளக் கூட்டணியின் அருவருப்பான அதிகார போதை!

**பஞ்சாபைக் கவ்வியிருக்கும் போதைமருந்து பிரச்சினையை பா.ஜ.க.வும், அகாலிதளமும் தமது சுயநல அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்த எடுத்த முயற்சிகள், அவர்களின் முகங்களில் சேற்றைப் பூசிவிட்டன.**

பஞ்சாபின் அகாலி தள அமைச்சர் பிக்ரம் சிங் மஜிதியா-வுக்கும் போதை மருந்து குற்றக் கும்பலுக்கும் தொடர்பு உள்ளதாக அண்மையில் மத்திய அமலாக்கத் துறை சம்மன் அனுப்பியதைத் தொடர்ந்து, பஞ்சாபில் போதை மருந்து பெருக்கத்துக்கும், அதில் ஆட்சியாளர்களின் பங்கு குறித்தும் ஒருவர் மீது ஒருவர் பழிபோட்டு, ஓட்டுக்கட்சிகள் நடத்திய போராட்டங்களும் பேரணிகளும் இன்னுமொரு கேலிக்கூத்தாகவே முடிந்துள்ளன.

பஞ்சாபில் ஓட்டுக்கட்சிப் பிரமுகர்கள் மட்டுமின்றி, அதிகார வர்க்கம், போலீசு, எல்லைப் பாதுகாப்புப்படை அடங்கிய ஒட்டுமொத்த அரசு எந்திரமே போதை மருந்து குற்றக் கும்பலின் கூட்டாளியாக உள்ளது. பிரபல பாடகர் மக்கான், குத்துச் சண்டை வீரர் விஜேந்தர் சிங், முன்னாள் டி.எஸ்.பி. ஜெக்திஷ் சிங் போலா முதலானோரும் போதை மருந்து கடத்தில் ஈடுபட்ட கனடாவைச் சேர்ந்த சில சீக்கியர்களும் ஏற்கெனவே கைதாகியிருப்பதும், ஓட்டுக்கட்சிப் பிரமுகர்களும் போலீசு அதிகாரிகளும் அவர்களின் கள்ளக் கூட்டாளிகளாக இருப்பதும் நாடெங்கும் நாறிப்போயுள்ளது.

பஞ்சாபைச் சீரழிக்கும் மிகப் பெரிய சமூக பிரச்சினையாக வளர்ந்துள்ள போதை மருந்து பழக்கத்துக்கு எதிராக நிற்பதாக நாடகமாடும் காங்கிரசு, அகாலி தளம், பா.ஜ.க. ஆகிய கட்சிகளோ போதை மருந்து இரகசிய உலகப் பேர்வழிகளின் திரைமறைவுக் கூட்டாளிகளாகவே உள்ளனர். போதை மருந்தால் வரும் கள்ளப் பணத்தைத் தேர்தலில் வாரியிறைக்கின்றனர். தேசியம், தேசிய ஒருமைப்பாடு, பயங்கரவாத எதிர்ப்பு என்று கூப்பாடு போட்டுக்கொண்டு, பஞ்சாப் இளைஞர்களின் வாழ்வையே சீரழித்துள்ளனர்.


இப்போது மீண்டும் போதை மருந்து விவகாரத்தில் அகாலிதள அமைச்சரின் தொடர்பு அம்பலமானதும், அமைச்சர் பிக்ரம் சிங் மஜிதியா பதவி விலக வேண்டுமென எதிர்க்கட்சிகளான காங்கிரசும், ஆம் ஆத்மி கட்சியும் போராட்டங்களை நடத்தின. அதேசமயம், போதை மருந்துகளற்ற பஞ்சாபை உருவாக்குவோம் என்ற முழக்கத்துடன் அமைச்சர் பிக்ரம் சிங் பதவி விலக வேண்டுமென்று கூட்டணிக் கட்சியான பா.ஜ.க.வும் போராட்டங்களையும் பேரணிகளையும் நடத்தி, தன்னை யோக்கிய சிகாமணியாகக் காட்டிக் கொள்ள முயற்சித்தது.

அதைத் தொடர்ந்து, பா.ஜ.க. ஆளும் மாநிலங்களான ம.பி. மற்றும் ராஜஸ்தானில் ஓபியம் எனப்படும் போதைப்பொருள் உற்பத்தி மற்றும் கடத்தலைத் தடுத்தால்தான், பஞ்சாபிலும் தடுக்க முடியும் என்று அகாலிதளக் கட்சி எதிர்ப்போராட்டத்தில் இறங்கி பா.ஜ.க.வைச் சாடியது. சீக்கிய இனப் பெருமைக்கு இழிவுதரும் வகையில் சீக்கியர்களைத் தீவிரவாதிகளாகவும் போதைமருந்து கடத்தல்காரர்களாகவும் இழிவுபடுத்த பா.ஜ.க. முயற்சிக்கிறது என்று குற்றம் சாட்டியது. பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிலிருந்து கடத்திவரப்படும் போதை மருந்துகளைத் தடுக்க எல்லைப் பாதுகாப்புப்

பஞ்சாப் துணை முதல்வர் சுக்பீர்சிங் பாதலுடன் பா.ஜ.க.வின் மைய அமைச்சர் நிதின் கட்காரி.



படை தவறிவிட்டது என்று கூறி எல்லைப் பகுதிகளில் அகாலிதளக் கட்சி ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. அதை எதிர்க்கக் கிளம்பிய பா.ஜ.க.வோ, எல்லைப் பாதுகாப்புப்படை மீது வீண்பழி போடுவதாகவும், இது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் இறையாண்மைக்கும் எதிரான செயல் என்றும் எதிர்க்குற்றம் சாட்டி தேசபக்த வேடம் போட்டு பேரணிகளை நடத்தியது. போதை மருந்து குற்றக் கும்பலின் கூட்டாளிகளான போலீசாரும் எல்லைப் பாதுகாப்புப் படையினரும் போதை மருந்துகளைக் கைப்பற்றி எரிப்பதாக புகைப்படங்களுடன் செய்திகளை வெளியிட்டுத் தம்மை யோக்கிய சிகாமணிகளாகக் காட்டிக் கொள்ளும் கேலிக்கூத்தும் அரங்கேறியது.



பஞ்சாப் மட்டுமின்றி, அண்டை மாநிலங்களிலும் போதைப் பொருள் உற்பத்தி நடக்கிறது என்றும், பாகிஸ்தான், ஆப்கானிலிருந்து போதைப்பொருட்கள் கடத்தப்படுவதை எல்லைப் பாதுகாப்புப் படை தடுக்கத் தவறிவிட்டது என்றும் அகாலிதளம் கட்சி கூறுவது உண்மைதான். அதேபோல, போதை மருந்து குற்றக் கும்பலுடன் அமைச்சர் பிக்ரம் சிங் மஜிதியா தொடர்பு கொண்டிருப்பதும் உண்மைதான். போதை மருந்து விவகாரத்தில் ஆட்சியாளர்களின் கள்ள உறவு அம்பலமாகியிருப்பது இப்போது முதன்முறையல்ல என்பதும் உண்மைதான். ஆனாலும், போதைமருந்து விவகாரத்தில் ஓட்டுக்கட்சி பிரமுகர்களின் தொடர்பு அம்பலமாகும்போது ஒருவர் மீது ஒருவர் பழிபோட்டு அரசியல் ஆதாயம் தேடும் நாய்ச்சண்டை மட்டும்தான் தொடர்கிறதேயன்றி, பஞ்சாபைக் கவ்வியுள்ள போதை மருந்துப் பழக்கத்தைத் தடுக்க எந்த ஓட்டுக்கட்சியிடமும் உருப்படியான திட்டமோ, நடவடிக்கையோ இல்லை.

பஞ்சாப் முதல்வர் பிரகாஷ் சிங் பாதல் அமைச்சரவையில் அவரது மகன் சுக்பீர் சிங் பாதல் துணை முதல்வராகவும் அகாலி தளக் கட்சியின் தலைவருமாகக் கோலோச்சுகிறார். சுக்பீர் சிங் பாதலின் மனைவியான ஹர்சிம்ரத் கவுல் மத்திய அமைச்சராக உள்ளார். அவரது தம்பியும், சுக்பீர் சிங் பாதலின் மைத்துனரும்தான் பிக்ரம் சிங் மஜிதியா. ஏற்கெனவே பஞ்சாபில் பாதல் குடும்ப ஆட்சியின் ஆதிக்கத்தாலும் ஊழல் - அதிகார முறைகேடுகளாலும் அக்கட்சியும் ஆட்சியும் அம்பலப்பட்டுப் போயுள்ள நிலையில், போதை மருந்து விவகாரத்தை வைத்து அகாலி தளத்தைத் தனிமைப்படுத்தி தங்களைத் தூய்மையான, ஊழல் கறை படியாத மாற்றுத் தலைமையாகக் காட்டி அரசியல் ஆதாயம் தேட பா.ஜ.க. முயற்சித்தது. இதற்காகவே பா.ஜ.க. தலைவரான அமித்ஷா, பஞ்சாபில் போதை மருந்து எதிர்ப்புப் பிரச்சாரப் பயணத்தை மேற்கொண்டார்.

கடந்த சில மாதங்களாக அகாலி தளத்துக்கு எதிரான போக்கைக் கடைபிடித்த பா.ஜ.க. இப்போது திடீர் பல்டி அடித்துக் கூட்டணி உறவைத் தொடர்வதாக அறிவித்துள்ளது. பஞ்சாப் முதல்வர் பிரகாஷ் சிங் பாதலுக்கு மோடி அரசு ''பத்ம விபூஷண்'' பட்டம் அளிக்கிறது. பஞ்சாபில் போதை மருந்துக்கு எதிரான அமித் ஷாவின் பிரச்சாரப் பயணமும் ரத்து செய்யப்பட்டுள்ளது. அகாலி தளத்துக்கும் பா.ஜ.க.வுக்குமிடையிலான கூட்டணியை யாராலும் பிரிக்க முடியாது என்று மைய அரசின் போக்குவரத்துத்துறை அமைச்சரான நிதின் கட்காரி பஞ்சாபுக்குப் பறந்து சென்று அறிவிக்கிறார். பஞ்சாபின் அடிக்கட்டுமானத் துறை வளர்ச்சிக்கென்று ரூ. 18,000 கோடி மதிப்பில் திட்டங்களை அறிவித்து, பஞ்சாப் துணை முதல்வர் சுக்பீர் சிங்குடன் கைகோர்த்துக் கொண்டு செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கிறார். பா.ஜ.க.வின் இந்தத் திடீர் பல்டிக்குக் காரணம் டெல்லி சட்டமன்றத் தேர்தல்தான்.

பஞ்சாபில் போதை மருந்து குற்றக் கும்பலுடன் தொடர்புடைய அகாலி தள அமைச்சர் பதவி விலக வேண்டுமென பிரச்சாரம் செய்யும் ஆம்ஆத்மிகட்சியும் காங்கிரசும், டெல்லி சட்டமன்றத் தேர்தலில் இதை வைத்து தங்களைத் தனிமைப்படுத்திவிடும் என்ற அச்சத்தாலும், டெல்லி சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு எதிரான ஆம் ஆத்மி கட்சியின் பிரச்சாரத்துக்குக் கிடைத்துவரும் ஆதரவைக் கண்டும் பா.ஜ.க. அரண்டு போயுள்ளது. இதனாலேயே அகாலிதளத்துக்கு எதிராக முறுக்கிக் கொண்டிருந்த பா.ஜ.க. இப்போது வெட்கமின்றி கூழைக்கும்பிடு போட்டுக் கொண்டிருக்கிறது.

காங்கிரசும் ஆம் ஆத்மியும் டெல்லியிலோ அல்லது பஞ்சாபிலோ ஆட்சிக்கு வந்துவிடக் கூடாது என்ற நோக்கத்திலேயே அகாலி தளமும் பா.ஜ.க.வும் செயல்படுகின்றனவே தவிர, மிகப்பெரிய சமூகப் பிரச்சினையாக உருவெடுத்து பஞ்சாபைப் பீடித்துள்ள போதை மருந்து பழக்கத்தை ஒழிக்க உருப்படியாக எந்த நடவடிக்கையும் அக்கட்சிகளிடம் இல்லை. அகாலிதளம் பேசும் சீக்கிய இனப் பெருமையும், பா.ஜ.க. பேசும் தேசபக்தியும் சீக்கிய இன நலனுக்கானதல்ல; தேசிய நலன்களுக்கானதும் அல்ல. இருப்பினும் சீக்கிய இனப் பெருமையையும், தேசியம் - தேசபக்தியையும் காட்டி போதை மருந்து விவகாரத்தில் ஆட்சியாளர்களின் பங்கை மூடிமறைத்து, ஓட்டுக்கட்சிகளுக்கிடையிலான நாய்ச்சண்டையாக மாற்றி சீக்கியர்களை ஏய்ப்பதென்பது அகாலி தளத்துக்கும் பா.ஜ.க.வும் வசதியாக உள்ளது. ஆனால், பஞ்சாப் மாநிலமோ போதை மருந்தாலும், மறுகாலனியத் தாக்குதலாலும் மூர்க்கமாகச் சீரழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

● குமார்

## கிரானைட் கொள்ளை:

# கிராமப்புறங்களின் மீது நடத்தப்படும் போர்!

கிரானைட் கொள்ளையால் கிராமப்புற மக்கள் சந்தித்துள்ள பாதிப்புகளும், அவலங்களும்; இயற்கை நாசப்படுத்தப்பட்டிருப்பதும் மீள் உருவாக்கம் செய்ய முடியாத பேரழிவாக எழுந்து நிற்கின்றன.

தமிழகத்தில் நடந்துள்ள/நடந்துவரும் கிரானைட் கொள்ளை பற்றிய அதிர்ச்சியூட்டும் தகவல்களையும் புள்ளிவிவரங்களையும் பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்கெனவே பத்திரிகைகள் வாயிலாக வெளிக் கொணர்ந்துள்ளனர். குறிப்பாக, தமிழகத்தில் இயங்கிவரும் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் மதுரை மாவட்டப் பகுதிகளில் அதிகார வர்க்கத்தின் துணையோடு நடந்துள்ள கிரானைட் கொள்ளை, முறைகேடு பற்றி ஒரு முழுமையான வீடியோ படமொன்றை வெளியிட்டிருக்கிறது.

கிரானைட் கற்களை வெட்டியெடுத்து, பாலிஷ் செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் 'தொழில்' தமிழகத்தில் 20 மாவட்டங்களில் நடந்துவருகிறது. இதில் மதுரை மாவட்டத்திலுள்ள கீழவளவு, கீழையூர், இ.மலம்பட்டி, செம்மினிபட்டி ஆகிய நான்கு பகுதிகளில் மட்டும் 83 கிரானைட் குவாரிகள் முறைகேடாக நடந்து வந்ததையும் அக்குவாரிகளில் இருந்து 39,30,431 கன மீட்டர் கிரானைட் கற்கள் சட்டவிரோதமாக வெட்டியெடுக்கப்பட்டதால், தமிழக அரசுக்கு 16,338 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதையும் மதுரை மாவட்ட ஆட்சியராக இருந்த சகாயம் அரசுக்கு அறிக்கையாக அளித்தார். அந்த அறிக்கையிலேயே, ''அறிவியல் பூர்வமான நவீனகாலத் தொழில் நுட்ப உதவியோடு ஆய்வு செய்தால் இந்த நிதியிழப்பு இன்னும் ஒரு மடங்கு கூடுதலாக இருக்க வாய்ப்புண்டு'' என்றும் குறிப்பிட்டுள்ளார், அவர்.

இதோடு மற்ற மாவட்டங்களில் நடந்துள்ள கிரானைட் கொள்ளையை, அக்கற்களின் சந்தை மதிப்பின்படி கணக்கிட்டுப் பார்த்தால் தமிழக அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு தோராயமாக பத்து இலட்சம் கோடி ரூபாயைத் தொடக்கூடும் என்கிறது பூவலகின் நண்பர்கள் அமைப்பு. பணவடிவிலான இந்த இழப்பு ஒருபுறமிருக்க, கிரானைட் கொள்ளையால் சாதாரண மக்கள் சந்தித்துள்ள பாதிப்புகளும், அவலங்களும்; இயற்கை நாசப்படுத்தப்பட்டிருப்பதும் மீள் உருவாக்கம் செய்ய முடியாத பேரழிவாக எழுந்து நிற்கின்றன. இந்தக் கொள்ளையும், நாசமும், பேரழிவும் அரசுக்குத் தெரியாமல், தலையாரி தொடங்கி மாவட்ட ஆட்சியர் வரையிலான அதிகார வர்க்கத்தின் ஒத்துழைப்பின்றி நடந்துவிடவில்லை என்பதற்கு ஐ.ஏ.எஸ். அதிகாரி சகாயத்திடம் பொது மக்கள் அளித்துள்ள புகார்களும்; கூறு போடப்பட்ட மலைகளும், சிதைக்கப்பட்ட புராதனச் சின்னங்களும், நாசமாக்கப்பட்ட கண்மாய்களும், ஓடைகளும், வயல்வெளிகளும்; தரைமட்டமாக்கப்பட்டு அழிக்கப்பட்ட கிராமங்களும் சாட்சியங்களாக உள்ளன.

### கிராமங்களின் அழிவு

கிரானைட் கொள்ளையைக் கிராமப்புறங்களின் மீது நடத்தப்பட்ட போர் என்றே குறிப்பிடலாம். சாகுபடி நிலங்களையும் மேய்ச்சல் பூமியையும் விழுங்கி, கண்மாய்களையும் ஓடைகளையும் குளங்களையும் பாசன வாய்க்கால்களையும் ஆக்கிரமித்துக் கிராமப்புற பொருளாதாரத்தைச் சீர்குலைத்ததோடு, பல கிராமங்களை இருந்த சுவடே தெரியாமல் அழித்திருக்கிறது,

கிரானைட் கொள்ளையின் வீச்சையும் கொடூரத்தையும் எடுத்துக் காட்டும் கீழவளவு பகுதியில் அமைந்துள்ள பொக்கிஷ மலை என்ற சர்க்கரை பீர் மலை.



கிரானைட் மாஃபியா கும்பல். புது தாமரைபட்டி, ரெங்கசாமிபுரம், டி.குண்டங்கால், சிவலிங்கம் என்ற ஊர்களெல்லாம் ஆள் அரவமற்று கிரானைட் கழிவுகள் கொட்டப்பட்ட குப்பைத் தொட்டிகளாக மாறிக்கிடப் பதை அக்கிராம மக்கள் சகாயத்திடம் சாட்சியமாகப் பதிவு செய்துள்ளனர்.



85 ஏக்கர் பரப்பளவு கொண்டதாக இருந்த சூரியனேந்தல் கண்மாய், வெறும் இரண்டு ஏக்கராக குறுகிப்போன அவலத்தை ஆய்வு செய்யும் சகாயம்.

புது தாமரைபட்டி கிராமத்தை பி.ஆர்.பி. நிறுவனம் ஆக்கிரமித்த கதை வேதனையும் வக்கிரமும் நிறைந்தது. ''கிராமத்தைச் சுற்றி கிரானைட் தோண்டுவதற்கு பி.ஆர்.பி. கம்பெனி வைத்த வெடிகளால், வீடு கள் பிளந்து இடிந்து விழுந்தன. இது பற்றி புகார் சொன்னதால், அங்கு வேலைபார்க்கும் நபர்கள் எங்கள் தெரு வில் உள்ள அடிபம்பில் வந்து ஜட்டி யுடன் குளித்தார்கள். சிலசமயம் ஜட்டியுங்கூட இருக்காது. இதனால பொம்பளைங்க பயந்துகிட்டு தண்ணீர் எடுக்கப் போக மாட்டாங்க. ஒருநாள் தனியா போன ஒரு பெண்ணுக்குப் பாலியல் தொல்லை தந் தாங்க. அந்தக் காலியைப் பிடித்து மரத்தில் கட்டி வைத் தோம். பி.ஆர்.பி. மைத்துனர் வந்து அவனை மீட்டார். அதற்குப் பிறகு அவர்கள் தினமும் தொல்லை தந்தாங்க. ஐந்து தலைமுறைகளாக புது தாமரைபட்டியில் வாழ்ந்து வந்த நாங்கள், அதன் பிறகு மானத்தை அடகுவைத்து குடியிருக்க முடியாம வேறு இடம் போய்விட்டோம்'' என சகாயத்திடம் கதறி அழுதபடியே சாட்சியம் அளித் திருக்கிறார், அக்கிராமத்தைச் சேர்ந்த முருகன்.

கீழையூர் அருகேயுள்ள ரெங்கசாமிபுரத்தைச் சேர்ந்த விவசாயிகளை மிரட்டி நிலங்களைப் பறித்துகொண்டும், மிரட்டலுக்குப் பயப்படாத விவசாயிகளின் நிலங்களில் கிரானைட் கழிவுகளைக் கொட்டியும், வாய்க்கால் மற்றும் பாசனக் கிணறுகளை மண்ணைப் போட்டு மூடியும் அக்கிராமத்தைத் தடம் தெரியாமல் அழித்திருக் கிறது, கிரானைட் கொள்ளைக் கும்பல்.

மேலூர் அருகே இடையபட்டி கிராமத்தில் அமைந்துள்ள சூரியனேந்தல் கண்மாய் ஏறத்தாழ 85 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இதில் 83 ஏக்கரில் கிரானைட் கழிவுகளைக் கொட்டி, இந்தக் கண்மாயை வெறும் 2 ஏக்கராகக் குறுக்கிச் சீரழித்துவிட்டது, கிரானைட் கொள்ளைக் கும்பல். இக்கண்மாயில் 80 அடி ஆழம் வரை தோண்டி கிரானைட் கற்கள் கொள்ளை யிடப்பட்டுள்ளன. அப்பகுதி மக்கள் அளித்த புகாரை ஆதாரமாகக் கொண்டு இக்கண்மாயை சகாயம் ஆய்வு செய்தபொழுது, இக்கண்மாய் வெறும் 2 ஏக்கர் பரப் பளவு கொண்டதென்றும், 1.27 ஹெக்டேர் நிலத்திற்கு மட்டுமே பாசன வசதி அளிப்பதாகவும் வருவாய்த்துறை அதிகாரிகள் கூசாமல் புளுகினர்.

கீழவளவு பகுதியில் அமைந்துள்ள பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான 47 ஏக்கர் பரப்பு கொண்ட சிறு மாணிக்கம் கண்மாயை பல்லவா கிரானைட் என்ற நிறு வனம் ஆக்கிரமித்து, கிரானைட் கழிவுகளைக் கொட்டி அழித்துள்ளது. இதே பகுதியில் அமைந்துள்ள 1.44 ஏக்கர் பரப்புள்ள பழுதூர் ஊரணி, 9 ஹெக்டேர் பரப்புள்ள வேப்பங்குளம் கண்மாய் ஆகியவற்றைக் கழிவுகளைக் கொட்டி மேடாக்கி, அதன் மீது தனது ஷெட்டுகளை அமைத்திருக்கிறது, பி.ஆர்.பி. நிறுவனம். செட்டிகுளம் கண்மாயில் 76 அடி ஆழம் வரை தோண்டி கிரானைட் கற்கள் வெட்டியெடுக்கப்பட்டதால், அக்கண்மாயின் தோற்றமே மாறிப்போய்விட்டது.

இவை தவிர, பாறைக்குளம் கண்மாய், மேலப்பட்டி குளம், மேடங்குளம், கொல்லங்குண்டு கண்மாய், கீழையூர் சிசி கண்மாய், எரிச்சியூர் மணியன் கண்மாய், பிள்ளையார் கண்மாய், கொணப்பகோன் கண்மாய், இடையன் கண்மாய் - என கீழவளவு பகுதியில் மட்டும் காணாமல் போய்விட்ட 42 கண்மாய்களை வலைவீசித் தேடிக் கொண்டிருக்கிறார், சகாயம். ''கிணற்றைக் காணோம்'' என்ற வடிவேலுவின் காமெடி சீன், மதுரை மாவட்டம், மேலூர் பகுதியில் நிஜமாகவும் குரூரமா கவும் அரங்கேறியிருக்கிறது. இக்கண்மாய்களின் அழிவு என்பது அவற்றைப் பாசனத்திற்கு நம்பியிருந்த கிராமங் களின் அழிவு என விளங்கிக் கொள்வதற்கு பெரிய ஆராய்ச்சி எதுவும் தேவையில்லை.

கண்மாய்கள் மட்டுமல்ல, மதுரை மாவட்டத்தில் கிரானைட் வெட்டியெடுக்கப்பட்ட 80 சதவீத இடங்கள் அரசு மற்றும் பொதுமக்களுக்குச் சொந்தமானவைதான். மதுரை மாவட்டத்தில் கிரானைட் 'தொழில்' செய்து வரும் நிறுவனங்களுள் ஒன்றிடம் மட்டும் 20,000 ஏக் கருக்கும் மேற்பட்ட சாகுபடி நிலங்கள் சட்டவிரோத மாகக் குவிந்திருப்பதாகவும், அதனை மீட்கக் கோரியும் மதுரை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக இருந்த பாலகிருஷ்ணன் நீதிமன்றத்தில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்திருக்கிறார்.

கிரானைட் கொள்ளையர்கள் எந்தளவிற்குச் சட்ட விரோதமாகவும் கொடூரமாகவும் கிராமப்புற விவசாயி



மதுரை அருகேயுள்ள குண்டாங்கல் பகுதியில் வாழ்ந்துவந்த 83 குடும்பங்கள் கிரானைட் மாஃபியா கும்பலால் துரத்தியடிக்கப்பட்டதை சாட்சியமாக அளிக்கும் விவசாயி.

களைச் சூறையாடி நடுத்தெருவில் நிறுத்தியிருக்கிறார்கள் என்பதை திருதாவூரும் புதுத் தாமரைப்பட்டியும் எடுத்துக்காட்டுகின்றன. திருவாதவூரில் 1,245 ஏக்கர் விளைநிலங்களை பி.ஆர்.பி. நிறுவனம் ஆக்கிரமித்துக் கொண்டதாக அவ்வூரைச் சேர்ந்த செல்வராஜ் என்ற விவசாயி சகாயத்திடம் புகார் அளித்திருக்கிறார். அவ்வூரிலுள்ள மொத்த சாகுபடி பரப்பே 1,300 ஏக்கர் தான் என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுதுதான் இந்த ஆக்கிரமிப்பின் பரிமாணத்தைப் புரிந்துகொள்ள முடியும். மேலும், அவ்வூரிலுள்ள 1,500 ஏக்கர் அரசு நிலங்களையும் அந்நிறுவனம் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது.

புதுத்தாமரைப்பட்டியைச் சேர்ந்த பாசுவதம் என்ற 62 வயது மூதாட்டி, ''10 வருடங்களுக்கு முன்பு ஐ.ஆர்.8 என்ற நெல், ஏக்கருக்கு 110 மூட்டைகள் வீதம் விளைந்து விருது வாங்கின பூமி இது. கிரானைட் இருக்குனு தெரிந்ததும் எங்களை மிரட்டியும், தராதவர்களை அடித்தும் வாங்கினார்கள். இப்போ எல்லா நிலங்களும் போய் கட்டிட வேலைக்கும் போறோம். நெல், தானியம்னு பொன்விளைந்த பூமி இப்போ சுடுகாடா கிடக்கு'' என சகாயத்திடம் கண்கலங்கி சாட்சியம் அளித்திருக்கிறார்.

அதே ஊரைச் சேர்ந்த பூமா என்ற இன்னொரு மூதாட்டி, ''என் நான்கு ஏக்கர் நிலத்தை மிரட்டிக் கேட்டும் தரலை. அதனால என் நிலத்துக்குப் போக விடாமல் வேலி போட்டு அடைத்துவிட்டனர். அறுவடை செய்யக்கூட முடியல. ஒத்த பொம்மனாட்டியா இவங்ககூட மோதிக்கிட்டு இருக்கேன்'' என சகாயத்திடம் கூறி, தனது வயலைக் காண்பித்திருக்கிறார். பாசனக் கண்மாய்களையும், இரு போகம் விளையக்கூடிய நிலங்களையும் ஆக்கிரமித்து, அவற்றைக் குப்பைத் தொட்டிகளாகச் சீரழித்த பிறகு, எந்த கிராமமாவது உயிர்த் துடிப்போடு இருக்குமா?

### மலை விழுங்கி மகாதேவன்கள்

திருவாதவூர் அருகேயுள்ள ஓவா மலை, கீழவளவு பகுதியிலுள்ள பொக்கிஷ மலை என்ற சர்க்கரை பீர் மலை, அரிட்டாபட்டியில் உள்ள பெருமாள் மலை உள்ளிட்ட ஏழு மலைகள்; கீழையூர், கீழவளவு கிராமங்களுக்கு இடையே அமைந்துள்ள பஞ்சபாண்டவர் மலை, இ.மலம்பட்டியிலுள்ள புறாக்கூண்டு மலை மற்றும் இம்மலைகளில் இருந்த சுனைகள், புராதனச் சின்னங்கள், மலைகளைச் சுற்றியிருந்த கண்மாய்கள் அனைத்தையும் பி.ஆர்.பி., ஒலிம்பஸ், பி.கே.எஸ்., சிந்து உள்ளிட்ட நிறுவனங்கள் தமக்குள் கூறுபோட்டுக் கொண்டு சிதைத்துள்ளன.

பொக்கிஷ மலையை, நடுப்பகுதி எனக்கு, வால் பகுதி உனக்கு, சைடு பகுதி அவருக்கு - என துண்டு துண்டாக அறுத்து பங்குபோட்டுக் கொண்டன பி.ஆர்.பி., பி.கே.எஸ்., ஒலிம்பஸ் நிறுவனங்கள். ''இந்த மலையைக் காப்பாற்ற நாங்கள் சட்டப்படி எல்லா இடங்களுக்கும் சென்று முறையிட்டும் மலையைக் காப்பாற்ற முடியவில்லை'' என சகாயத்திடம் அரசு அதிகாரிகளின் ஒத்துழைப்போடு பொக்கிஷ மலை களவாடப்பட்டதை விளக்கியிருக்கிறார், அப்பகுதி ஜமாஅத் தலைவர் முகமது காசிம்.

கிரானைட் கொள்ளை பற்றி சாட்சியம் அளித்ததால், போலீசார் தன்னைக் கடத்திக் கொண்டு போய் மிரட்டியதை சகாயத்தின் காலில் விழுந்து சொல்லும் வாச்சாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த அய்யங்காளை.



இந்து, முசுலீம் மதங்களைச் சேர்ந்தவர்கள் யார் திருமணம் செய்தாலும் பொக்கிஷ மலை என்ற சர்க்கரை பீர் மலைக்கு வந்து வேண்டிக் கொண்டால் அவர்களுக்கு ஆண் குழந்தை பிறக்கும் என மக்களிடம் வழிவழியாக நம்பிக்கை இருந்து வரும் அளவிற்கு இம்மலை அப்பகுதியில் மத நல்லிணக்கத்தின் எடுத்துக்காட்டாக விளங்கியிருக்கிறது. அப்படிபட்ட புராதன மலை இன்று அலோங்கோலமாகிக் கிடக்கிறது.

92 அடி உயரம், 200 அடி நீளத்தில் 21 ஏக்கரில் அமைந்

திருந்த புறாக்கூண்டு மலை இன்று அரசு ஆவணங்களில் மட்டுமே உள்ளது. 2006 -இல் இம்மலையை டாமின் நிறுவனத் திடமிருந்து குத்தகைக்கு எடுத்த பி.ஆர்.பி. நிறுவனம், அம்மலை யில் புதைந்திருந்த காஷ்மீர் ஒயிட் என்ற விலையுயர்ந்த கிரானைட் கற்களை வெட்டியெடுப்பதற்காக மூன்றே மாதத்தில் பரந்து விரிந் திருந்த இம்மலையை உருத்தெரி யாமல் சிதைத்துவிட்டது.

திருதாவூரில் அமைந்துள்ள ஓவா மலை 3,000 ஆண்டுகளுக்கும் மேற் பட்ட புராதன மலையாகும் என்பதோடு, தமிழ் மக்களின் கலாச்சார, வரலாற்றுச் சின்ன மாகவும் திகழ்ந்துள்ளது. 2,300 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் எழுதிப் படிக்கும் பண்பாட்டைப் பெற்றிருந்த தற்கு ஆதாரமாக இம்மலையில் கல்வெட்டுகள் இருந் துள்ளன. இம்மலை குகையில் 10 சமணர் படுகைகள் இருந்துள்ளன. இம்மலைக்கு மேலுள்ள சிவன் கோவிலுக்கு மாணிக்கவாசகர் வந்து சென்றிருக்கிறார். இவை அனைத்தும் பி.ஆர்.பி. மற்றும் சிந்து கிரானைட் கொள்ளைக் கும்பலால் சேதப்படுத்தப்பட்டுவிட்டன. புராதனச் சின்னங்கள் அமைவிடத்திலிருந்து 300 மீட்டர் சுற்றளவு பாதுகாக்கப்பட்ட பகுதி என்ற சட்டம் அப்பட்டமாக மீறப்பட்டு, அவை சேதப்படுத்தப் பட்டுள்ளன.

ஓவா மலையில் அமைந்திருப்பதைப் போலவே அரிட்டாபட்டியில் உள்ள மலைகளிலும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்களும், சமணர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகளும் உள்ளன. தேசிய புராதனச் சின்னங்களாக இவை அறிவிக்கப்பட் டிருப்பினும், அதையெல்லாம் ஒரு பொருட்டாகக் கரு தாமல் இம்மலையில் சமணர் பள்ளியைக் குடைந்து கிரானைட் கற்கள் வெட்டியெடுக்கப்பட்டுள்ளன. இம் மலையில் பிரிட்டிஷ் அரசால் உருவாக்கப்பட்ட 365 ஏக்கர் பரப்பளவு கொண்ட சமுத்திரம் நீர்த் தேக்கமும் கிரானைட் கொள்ளையால் அழிந்து போனது.

**நரபலி உள்ளிட்ட கிரிமினல் குற்றங்கள்**

கிரானைட் குவாரிகளில் புதிய பொக்லைன், புதிய கிரேன் இயந் திரங்களை இயக்குவதற்கு முன்பு நரபலி கொடுப்பது வாடிக்கையாக நடந்துள்ளது. குறிப்பாக, பி.ஆர்.பி. நிறுவனத்தில் நரபலி கொடுப்பது கோழியை அறுத்துப் பலி கொடுப்பது போல சர்வசா தாரணமாக நடந்திருப்பதை அந் நிறுவனத்தில் வேலைபார்த்து, பின்னர் வெளியேறிவிட்ட சேவற்கொடி யான், பழனிவேல் ஆகிய இருவரும் சகா யத்திடம் மனுவாகவே எழுதிக் கொடுத்துள்ளனர்.

சேவற்கொடியோன் பி.ஆர்.பி. நிறுவனத்தில் 1998 முதல் 2003 வரை ஓட்டுநராகப் பணிபுரிந்துள்ளார். அந்தச்சமயத் தில் ஆந்திரா, பீகார், ஒடிசா ஆகிய மாநிலங்களில் இருந்து வேலைக்கு வந்த பல ஏழைத் தொழி லாளர்களை நரபலி கொடுத்துவிட்டு, அவர்கள் விபத்தில் இறந்துவிட்ட தாகக் கூறி இப்படுகொலைகளை மூடி மறைத்துவிடுவார்கள் என்றும்; மதுரை, கரூர், புதுக்கோட்டை பகுதிகளில் சுற்றித் திரிந்த மனநலம் பாதிக்கப்பட்டவர்களைப் பிடித்து வந்து நரபலி கொடுத் திருப்பதையும் சேவற்கொடியோன் தனது மனுவில் தகுந்த விவரங்களோடு குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக, மதுரை நகரில் சுற்றித்திரிந்த இரண்டு மனநலம் பாதிக் கப்பட்டவர்களை நரபலி கொடுப்பதற்காக மனோகரன் என்பவர் கூட்டிவந்தபோது, நான்தான் காரை ஓட்டி வந்தேன் என்று தனது மனுவில் சேவற்கொடியோன் கூறி யிருக்கிறார்.

முன்னாள் இராணுவச் சிப்பாயான பழனிவேல் 1998 முதல் 2008 வரை பி.ஆர்.பி. நிறுவனத்தில் ஓட்டுநராகப் பணியாற்றியிருக்கிறார். கள்ளுதின்னி சேகர், ஜோதிபாசு, பழனி, சுப்பிரமணி ஆகிய நால்வரும் ஒரு மந்திர வாதியோடு சேர்ந்துகொண்டு 25 வயது மதிக்கத்தக்க மன நலம் பாதிக்கப்பட்ட இளைஞரைப் பொக்கிஷ மலைக்கு அருகேயுள்ள பல்லவா கிரானைட் குவாரியில் நரபலி கொடுத்ததை நான் நேரடியாகவே பார்த்தேன் என்று மனு கொடுத்திருக்கிறார், அவர்.

தாமரைப்பட்டி கிராமத்திலுள்ள பி.கே.எஸ். குவாரியில் கோபிகா என்ற மூன்று வயது சிறுமி 2008 -ஆம் ஆண்டில் நரபலி கொடுக்கப்பட்டார். இப்

குவாரிக்குத் தனது நிலத்தைத் தர மறுத்ததால், கிரானைட் மாஃபியா கும்பலால் தனது கை வெட்டப்பட்டதை சகாயத்திடம் சாட்சியமாக அளிக்கும் இ.மலப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ராஜா.




**கிரானைட்:**
**மெகா கூட்டணி - மகா கொள்ளை!**
டி.வி.டி. விலை ரூ.40.00
கிடைக்குமிடம்:
கீழைக்காற்று வெளியீட்டகம், சென்னை - 600 002.
பேச: 044 - 2841 2367
ப.இராமலிங்கம், மதுரை.
பேச: 97916 53200

படுகொலை தொடர்பான குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரி பொதுமக்கள் போராடியதையடுத்து லாரி டிரைவர் ரவியை போலீசார் கைது செய்தனர். இந்த வழக்கில் இன்னும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் படவில்லை என்பது ஒருபுறமிருக்க, லாரி டிரைவர் ரவி, ''போலீஸ் தன் மீது பொய்வழக்கு போட்டிருப்பதாக'' சகாயத்திடம் மனு கொடுத்திருக்கிறார்.

இக்கிரிமினல் குற்றங்கள் தவிர, ஆட்களைக் கடத்திக் காணாமல் போகச் செய்வது, கொலைவெறியோடு தாக்கி முடமாக்குவது என்பதெல்லாம் வரைமுறையின்றி நடந்துள்ளன. இ.மலம்பட்டியைச் சேர்ந்த ராஜா தனது நிலத்தைத் தர மறுத்ததற்காகத் தாக்கப்பட்டதில், அவர்தனது இடது கையை இழந்து முடமாகிப் போனார். திருமங்கலத்தைச் சேர்ந்த ஹேமத்தாய் என்ற பெண், கிரானைட் பிரச்சினை தொடர்பாக சிலரால் அழைத்துச் செல்லப்பட்ட தனது கணவர் சுரேஷ்குமார் அதன்பின் வீடு திரும்பவில்லை என சகாயத்திடம் மனு அளித்திருக்கிறார். பஞ்சபாண்டவர் மலையில் கிரானைட் வெட்டியெடுப்பதைத் தடுக்கும் தீர்மானம் போட்டதற்காகத் தன்னை வெட்ட முயன்றார்கள், இதற்கு அதிகாரிகளும் உடந்தையாக இருந்தார்கள் என அம்பலப்படுத்தியிருக்கிறார், கீழையூர் ஊராட்சி மன்றத் தலைவர் தர்மலிங்கம்.

**தீர்வு, எந்தப் பாதையில்?**

பல இலட்சம் கோடி ரூபாய் பெறுமான மக்களின் சொத்துக்களான கிரானைட் கற்கள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன. இதற்கும் மேலாக, பல கிராமங்கள் அழிக்கப்பட்டு, பல ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரங்கள் நாசமாக்கப்பட்டு, அவர்கள் அகதிகளாக, கையேந்திகளாகத் துரத்தியடிக்கப்பட்டுள்ளனர். கண்மாய்கள், ஓடைகள், கால்வாய்கள், பழமை வாய்ந்த மலைகள் உள்ளிட்ட இயற்கையும், தமிழ் மக்களின் வரலாற்று ஆதாரங்களான புராதனச் சின்னங்களும் மீள் உருவாக்கம் செய்ய முடியாதவாறு அழிக்கப் பட்டுள்ளன.

பி.ஆர்.பி. கும்பலால் பல்லவா குவாரியில் 25 வயதுடைய மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞர் நரபலி கொடுக்கப்பட்டதைச் சாட்சியமாக அளித்துள்ள பி.ஆர்.பி. நிறுவனத்தின் முன்னாள் ஊழியர் சேவற்கொடியோன்.



இவையெல்லாம் அரசுக்குத் தெரியாமல் நடந்து விடவில்லை. புராதனச் சின்னங்கள் அமைந்துள்ள மலைகளை ''தீர்வையற்ற தரிசு, பயனற்ற குளம்'' என வருவாய்த் துறையினரே போலி ஆவணம் தயாரித்துக் கொடுத்து கிரானைட் கொள்ளைக்குத் துணை போயுள்ளனர். பஞ்சபாண்டவர் மலையை, குளம் என அரசு ஆவணங்களில் பதிவு செய்து, கிரானைட் மாஃபியாக்களிடம் ஒப்படைத்திருக்கிறது, அதிகார வர்க்கம். தலையாரிக்கு ரூ.1,000, வி.ஏ.ஓ.வுக்கு ரூ.5,000, வட்டாட்சியர், கோட்டாட்சியருக்கு ரூ.50,000 என இலஞ்சப் பணம் மேலிருந்து கீழ்வரை பாய்ந்திருக்கிறது. ஓய்வுபெற்ற அதிகாரிகள் கிரானைட் மாஃபியாக்களிடமே வேலைக்குச் சேர்ந்து பொதுச் சொத்துக்களை சுலபமாகவும் மொத்தமாகவும் கொள்ளையடிப்பதற்குத் திட்டம் போட்டுக் கொடுத்து வருகிறார்கள்.



ஏழு ஆண்டுகளுக்கு முன்பு தனது மூன்று வயது குழந்தை கோபிகா, பி.கே.எஸ்.குவாரியில் நரபலியாகக் கொடுக்கப்பட்டதைச் சாட்சியமாக அளித்துள்ள புதுத்தாமரைப்பட்டியைச் சேர்ந்த உஷா.

அதேசமயம், இக்கொள்ளையைத் தடுப்பதற்கும், புராதனச்சின்னங்களைக் காப்பதற்கும் பகுதி மக்கள் நடத்திய போராட்டங்கள் கிரானைட் மாஃபியா கும்பலாலும், போலீசு உள்ளிட்ட அதிகார வர்க்கத்தாலும் கொடூரமாக நசுக்கப்பட்டிருக்கிறது. கிரானைட் கொள்ளை மற்றும் அட்டூழியங்கள் குறித்து சகாயத்திடம் புகார் மனு அளிக்கும் பொதுமக்கள் உளவுத்துறையால் கண்காணிக்கப்படுகின்றனர். சகாயத்திடம் பி.ஆர்.பி. நிறுவனம் மீது புகார் மனு அளித்த ஒரே காரணத்திற்காக வாச்சம்பட்டியைச் சேர்ந்த அய்யங்காளை என்பவரை போலீசார் கடத்திச் சென்று துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதோடு, அவர் குடும்பத்தினர் மீது பொய்வழக்கும் போட்டுள்ளனர்.

இப்படிப்பட்ட நிலையில் என்ன செய்வது என்பதுதான் நம்முன் உள்ள கேள்வி. சென்னை உயர்நீதி மன்றமும் சகாயம் கமிசனும் கிரானைட் மாஃபியா கும்பலைக் கவனித்துக் கொள்ளும் என ஏமாளித்தனமாக நம்பி கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்க போகிறோமா? அல்லது தமிழகத்தின் செல்வ வளங்களைக் காப்பதை, அதனைச் சுரண்டிக் கொழுத்த மாஃபியா கும்பலைத் தண்டிப்பதை நம் கரங்களில் எடுத்துக் கொள்ளும் போராட்டங்களை நடத்தப் போகிறோமா என்பதைத் தமிழக மக்கள் தீர்மானிக்க வேண்டிய தருணமிது.

● குப்பன்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

என்றொரு நெருங்கிய நண்பன் இருப்பதையும் சித்திரவதையினூடாகக் கேட்டுத் தெரிந்து கொண்டு, அன்றிரவே யுவராஜின் வீடு புகுந்து, தூங்கிக் கொண்டிருந்த யுவராஜை போலீஸ் நிலையத்திற்குத் தூக்கி வந்து, அச்சிறுவனையும் திருட்டுக் குற்றத்தை ஒப்புக்கொள்ளச் சொல்லி சித்திரவதை செய்துள்ளனர்.




இதன் பிறகும் அவர்கள் நால்வரும் திருட்டுக் குற்றத்தை ஒப்புக் கொள்ள மறுக்கவே, அவர்களை நிர்வாணமாக்கி, கட்டாயப்படுத்தி ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுச் செய்து, அதனை அப்போலீசு நிலையத்தின் உதவி ஆய்வாளர் முரளி மற்றும் சீனிவாசன், சேது என்ற இரண்டு போலீசார் ஆகிய மூவரும் கூட்டாகச் சேர்ந்து கொண்டு ரசித்துப் பார்த்தனர். சதீஷ்குமாரின் ஆணுறுப்பிலிருந்து இரத்தம் கொட்டி, அவர் மயங்கிச் சரியும் வரை இந்த வக்கிரமான சித்திரவதை நடந்திருக்கிறது. அதன் பிறகு அவர்கள் மீது செல்போன் திருட்டு மற்றும் செயின் பறிப்பு வழக்குகளைப் பதிவு செய்து சதீஷ்குமாரை புழல் சிறையிலும், மற்ற மூன்று சிறுவர்களைச் சீர்திருத்தப் பள்ளியிலும் அடைத்துள்ளனர்.

புழல் சிறையில் அடைக்கப்பட்ட சதீஷ்குமாருக்கு வயிற்று வலியும், வாந்தியும் ஏற்பட்டு மயங்கி விழுந்ததையடுத்து, சிறை மருத்துவர் அவரைப் பரிசோதித்தபோதுதான் மாம்பலம் போலீசு நிலையத்தில் அவரும் அவரது நண்பர்களும் கீழ்த்தரமான பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட வக்கிரம் அம்பலமானது. சிறை மருத்துவர் இந்த வக்கிரச் சித்திரவதை குறித்து போலீசு கமிசனருக்கும், டி.ஜி.பி.க்கும் கடிதம் மூலம் புகாராகத் தெரிவித்த பின், இந்தச் சம்பவத்தை இனியும் மூடி மறைத்துவிட முடியாது என்ற நிலையில்தான், இது குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அச்சிறை மருத்துவர் மனிதாபிமான எண்ணத்தோடு கடிதம் எழுதவில்லையென்றால், இப்பாலியல் வக்கிரமும் பொய் வழக்கும் அம்பலத்திற்கே வந்திருக்காது.

இந்த வழக்கை விசாரித்துவரும் சி.பி.சி.ஐ.டி போலீசு பிரிவு, இரண்டு போலீசார் மீது மட்டும்தான் வழக்குப் பதிவு செய்திருக்கிறது. அக்குற்றத்தில் சம்பந்தப்பட்ட உதவி ஆய்வாளர் மீது வழக்கு ஏன் பதிவு செய்யவில்லை எனக் கேள்விகள் எழுந்தவுடன், இது குறித்து அவரைத் தனியாக விசாரித்து வருவதாக மழுப்பலான பதிலை அளித்தது. இது உதவி ஆய்வாளரைக் காப்பாற்றி, வழக்கிலிருந்து தப்பவைக்கும் மோசடி தவிர வேறில்லை. மேலும், இச்சம்பவங்கள் இரண்டிலும் பாலியல் வன்முறை குறித்துதான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதே தவிர, போலீசாரின் பிற குற்றங்கள் - சாலையில் நடந்துசென்றவர்களைச் சட்டவிரோதமாக இழுத்துப் போனது, வீடு புகுந்து தூங்கிக் கொண்டிருந்த சிறுவனைக் கடத்தி வந்தது, பொய்வழக்கு போட்டது உள்ளிட்டவை கண்டுகொள்ளப்படவில்லை என்பது கவனங்கொள்ளத்தக்க ஒன்றாகும்.

இவ்விரண்டு சம்பவங்களில் மட்டுமின்றி, தமிழகத்தில் இதற்கு முன்பு நடந்து விசாரணைக்கு வந்துள்ள பல்வேறு மனித உரிமை மீறல் வழக்குகளிலும், குற்றங்களைத் தடுப்பதற்காகவே கடமையாற்றி வருவதாகக் கூறப்படும் போலீசே கொடிய குற்றங்களை இழைத்திருப்பதும்; அத்துறைக்கு வெளியே இருப்பவர்களால் இந்தச் சம்பவங்கள் அம்பலமாக்கப்பட்ட பிறகுதான் வழக்கு, விசாரணை தொடங்கியிருப்பதும்; அதிலும்கூட, குற்றமிழைத்த போலீசாரில் ஒன்றிரண்டு பேரின் மீது மட்டும் வழக்குப் பதிவு செய்துவிட்டு, மற்றவர்களைத் தப்பவைப்பது திட்டமிட்ட முறையில் நடந்தேறியிருப்பதும்; நீதிமன்றங்களும் போலீசால் பாதிக்கப்படுவோருக்கு நட்ட ஈடு வழங்க உத்திரவிடுவதைத் தாண்டி, அவ்வழக்குகளை விரைவாக முடிக்கவும் போலீசுக்கு அளிக்கப்பட்டுள்ள வானளாவிய அதிகாரங்களைக் கேள்விக்குள்ளாக்க மறுப்பதும் ஒரு பொதுப்போக்காக இருப்பதை நாம் காணலாம்.

இவையனைத்துமே போலீசிடமிருந்து பொதுமக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி என்ற கேள்வியைத்தான் மையமாக எழுப்புகின்றன. போலீசின் ஒவ்வொரு அத்துமீறல்களும் அக்கிரமங்களும், அவ்வமைப்பு பொதுமக்களுக்கு எதிரானது என்பதைத்தான் நிரூபித்து வருவதால், குற்றமிழைத்த போலீசாரைத் தண்டிக்கக் கோருவதையும் தாண்டி, அதற்கு வழங்கப்பட்டுள்ள தனியுரிமைகளையும் அதிகாரங்களையும் ரத்து செய்யக் கோருவதும் அவசியமாகிறது. ஆனால், முதலாளித்துவ அறிவுஜீவிகளோ இந்த அறிவுபூர்வமான தீர்வுக்கு மாறாக, போலீசு நிலையங்களில் கண்காணிப்பு கேமிராக்களைப் பொருத்தி, போலீசாரின் அத்துமீறல்களைக் குறைத்துவிட முடியும் என்ற நகைக்கத்தக்க தீர்வை முன்வைக்கிறார்கள்.

● அழகு

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.












# டாடா நிறுவனத்தின் முகத்திலறைந்த அறைகூவல்!

டி.சி.எஸ். என்ற ஐ.டி. நிறுவனத்தில் 25,000 ஊழியர்கள் ஆட்குறைப்பு செய்யப்படவிருப்பதாக செய்தி வெளியானதைத் தொடர்ந்து, ஆட்குறைப்பு நடவடிக்கையை எதிர்த்தும், ஊழியர்களை தொழிற்சங்கமாக அணிதிரள அறைகூவல் விடுத்தும், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஐ.டி. ஊழியர்களிடையே பிரச்சாரம் செய்தது.

சனவரி 7 - ஆம் தேதியன்று காலை சோழிங்கநல்லூர் சிக்னலில், நூற்றுக்கணக்கில் செல்லும் ஐ.டி நிறுவனப் பேருந்துகளின் சன்னல்களைத் தட்டி, ஊழியர்களைத் துயிலெழுப்பி துண்டறிக்கைகளை விநியோகித்தார்கள் செஞ்சட்டையணிந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள். தமது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியிருந்த அத்துண்டறிக்கை களை வாட்ஸ் அப் மூலமும், முகநூல் பக்கங்கள் மூலமும் பல்லாயிரக்கணக்கானோர் மத்தியில் உடனே பரப்பினார்கள் ஐ.டி. ஊழியர்கள்.

அடுத்த இரண்டு நாட்களில், 9 - ஆம் தேதியன்று காலை, தொழிற்சங்கம் என்ற சொல்லே தடை செய்யப்பட்டிருக்கும் சிறுசேரி சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்குள், டி.சி.எஸ் நிறுவனத்தின் வாயிலிலேயே கூட்டம் நடத்தப்பட்டது. பதறிப்போன செக்யூரிடிகளும் போலீசாரும் தடுக்க முனைந்து தோற்றனர். ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் பு.ஜ.தொ.மு தோழர்களும் ம.உ.பா.மைய வழக்குரைஞர்களும் உரையாற்றினர்.

வர்க்க ஒற்றுமையின் இலக்கணமாக ஆலைத்தொழிலாளி வர்க்கம் மேற்கொண்டிருக்கும் இந்த முயற்சி, நிச்சயமாக ஐ.டி. ஊழியர்களைச் சிந்திக்கவும் செயல்படவும் தூண்டும்.